

வசந்தம்

பார்த்திப - ஆடி

1945 - ஜூலை

N211,N45VM
N45.4.4
197234

தந்தி: "வசந்தா" கோயமுத்தூர். போன்: நெ, 25.

வசந்தா மில்ஸ்

லிமிடெட்.

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்: சிங்காநல்லூர்.

மேனேஜிங் ஏஜண்ட்ஸ் அண்டு செக்ரடரீஸ்:

R. K. ஷண்முகம் செட்டி அண்டு பிரதர்ஸ்.

1934-௵ கள்ளிக்கோட்டையில், நடந்த கண்காட்சியில்
நூல் ரகங்களுக்காக தங்க மெடல், நற்சாட்சிப்
பத்திரம் பெற்றிருக்கிறோம்.

நூற்றல்:

20 நெ. முதல் 44 நெ. வரை, ஒத்தை, முறுக்கு, காரம்,
சலவை நூல் தயாரிக்கிறோம்.

எல்லா விதமான ஜவுளி ரகங்களும்:

வேஷ்டிகள், லாங்கிளாத்,
டவல், சர்ட்டிங்,
மல், சதர்,

தயாரிக்கிறோம்

எங்களுடைய வி. 116 நெ. லாங்கிளாத் மார்க்கட்டில் பெயர் பெற்றது.
600 நெ. காடா தயாரிக்கும் உரிமை எங்களுடையதே.

போலிகளைக்கண்டு ஏமாறாதீர்கள்.

நம் நாட்டுத் தொழிலை ஆதரியுங்கள்.

பண்டைய நாட்களில் மோகலாய சக்கரவர்த்திகளின் கொலு மண்டப ஆரணங்குகள் காலைக் கதிரவனின் இளங்கதிரொளியில் ஆளிமார்கள் சூழ தங்களுக்கென்றே யுள்ள சிங்காரக் குளிர் பொய்கைகளில் நறுமணங்கமழும் தைலங்கள் தேய்த்து நீராடி வந்தனர். தங்களது அழகிய மேனியை சுத்தம் செய்வதற்கு அன்று அவர்கள் க்ஷாரமண்ணை உபயோகித்து வந்தார்கள்! ஏனெனில் அந்நாளில் ஸோப்புகளே கிடையாது.

இன்றேவெனில், சகல சுக சௌகரியங்களும் பொருந்தியமைந்துள்ள ஹமாம் தானிருக்கிறதே — ஹமாமின் நுண்ணிய ஏராள நுரை தேகத்தை நன்கு சுத்தம் செய்வதோடு பண்டைய ஜனங்கள் கனவிலும் அனுபவித்தறியாத ஓர் அலாதி இன்பத்தையு மளிக்கிறது.

ஹமாம்

உங்கள் ஸ்நானத்திற்குகந்த பெரிய ஸோப்பு

டாம்கோ விற்பனை இலாகா.

பிக் பஜார், பாலக்காடு.

T. S. 4693.

Vasantham, July, 1945
A

நியூ இந்தியா அஷ்யூரன்ஸ்

கம்பெனி, லிமிடெட்.

(தலைமை ஆபீஸ் : பம்பாய்)

தீ, ஆயுள், கப்பல், விபத்துகள்

முதலிய இன்ஷ்யூரன்ஸ்கள் செய்யப்படுகின்றன.

தலைவர் :- ஸர். சுனிலால் வி. மேதா.
உபதலைவர் :- ஸ்ரீ ஜே. ஆர். டி. டாடா.

ஆயுள் இலாகா சம்பந்தமான விவரம்

1944-ம் வருஷத்தில் செய்யப்பட்ட புது பிஸினஸ்	ரூ. 6 கோடிக்கு அதிகம்.
1944-ம் வருஷம் டிசம்பர் மாதம் 31-ந் தேதி வரைக்கும் செய்யப்பட்ட பாலிஸிகளின் மொத்த தொகை	ரூ. 21 கோடிக்கு அதிகம்.

பொருளாதார புள்ளி விவரங்கள்

செலுத்தப்பட்ட மூலதனம்	ரூ. 71,21,055.
மொத்த நிதி	ரூ. 6 கோடிக்கு அதிகம்.
மொத்த இருப்பு (சுமார்)	ரூ. 8 கோடி
ஆரம்பம் முதல் கிடைத்த பிரிமியம் வருமானம்	ரூ. 22 கோடிக்கு அதிகம்.
கொடுக்கப்பட்ட மொத்த உரிமைத் தொகை	ரூ. 11 கோடிக்கு அதிகம்.

இன்ஷியூர் செய்வதற்கோ அல்லது பிரதிநிதியாக இருப்பதற்கோ சிறந்த இந்திய கம்பெனி.

சென்னை கிளைநிலையம்,
4 & 5 முதல் லைன் பீச்.

கே. கணபதி,
பிராஞ்சு மானேஜர்.



ஸிம்ப்சன் க்யாஸ் ப்ளாண்ட்கள் தங்கள் சக்தியை நிரூபிக்கின்றன.

இந்த நெருக்கடியான காலத்தில் ஆயிரக்கணக்கான ஸிம்ப்ஸன் க்யாஸ் ப்ளாண்ட்கள் தினந்தோறும் ஓயாமல் ஓடிக் கொண்டிருக்கும் போக்குவரத்து சாதனங்களை மிகசிக்கனமாகவும் சுலபமாகவும் தங்கள் வேலையைச் செய்து முடிக்க உதவுகின்றன.

இவைகளின் உழைப்புத் தன்மையையும் எவ்வளவு கடின மான போக்குவரத்தாயிருந்தாலும், நம்பிக்கையுடன் வேலை செய்யுந் திறமையையும், அபார சக்தியையும் தினந்தோறும் வந்து கொண்டிருக்கும் செய்திகள் மேலும் மேலும் ஊர்ஜிதம் செய்கின்றன. இந்த நம்பிக்கைக்குக் காரணம் ஸிம்ப்ஸனின் என்றென்றைக்கும் வழக்கமான உயர்ந்த ரக தயாரிப்பேயாகும். சிம்ப்ஸன்ஸ் க்யாஸ் உற்பத்தி செய்யும் பிளாண்டுகள்தான் மிகவும் உயர்தரமானவை. இன்று இந்தியாவிலே 9000க்கு அதிகமாக வேலை செய்து வருவது.

ஸிம்ப்ஸன் & கம்பெனி, லிமிடெட்.
மவுண்ட்ரோடு, மதருஸ்.

1840-ல் ஸ்தாபிதம் செய்யப்பட்ட ஒரு இந்திய தொழிற்சாலை

மிகச்சிறந்த ஆயுர்வேத ஔஷதங்களும் சிகிச்சைகளும்!

ஒரு முறை விஜயம் செய்யுங்கள்

★

ஆர்யவைத்தியர்

பி. வி. ராமவாரியர்

ஆர்யவைத்ய பார்மசி

திருச்சி ரோடு :: கோயமுத்தூர்

★

கேட்லாக் இலவசமாக அனுப்பிவைக்கப்படும்.

THE VASANTHA DYEING WORKS,

118. Oppanakara Street

Coimbatore.

Phone No. 155. **Estd., 1921.**

Proprietor

C. M. Subramanya Chettiar

CONTRACTOR

To

THE VASANTHA MILLS, LIMITED. SINGANALLUR.

For all kinds of dyeing border yarn and tie yarn etc., undertakes any variety of colour dyeing at reasonably cheap rates for dyeing all counts of yarn, cloth and sarees of 100 and 80 counts, wholesale orders received our due and special attention. A trial order will convince you the good quality of our work. Fastness and durability of colour guaranteed.

இந்தியன் பாங்கு லிமிடெட்

தலைமை ஆபீஸ்: 'இந்தியன் பாங்கு பில்டிங்'

வடக்கு பீச் ரோடு :: மதராஸ்

லோகல் ஆபீஸ்கள் :

எஸ்பிளனேட்	திருவல்லிக்கேணி
மயிலாப்பூர்	தியாகராயநகர்
புரசவாக்கம்	மவுண்டுரோடு

தென்னிந்தியாவில் எல்லா முக்கியமான இடங்களிலும் பம்பாயிலும் பிராஞ்சுகளும் சப் ஆபீஸ்களுமுள்ளன.

வழங்கி வாக்களிக்கப்பட்ட
மூலதனம் ரூ. 60,00,000
செலுத்தப்பட்ட ,, ,, 33,61,250
ரிஸர்வ் நிதி ,, 33,62,500
டிபாஸிட்டுகள் $11\frac{1}{2}$ கோடிக்கு மேல்

எல்லாவிதமான பாங்க் அலுவல்களும் ஏற்றுக்கொண்டு நடத்தப்பெறும்

பூரா விபரங்களுக்கும் பாங்கியின் எந்த ஆபீஸிற்காவது விண்ணப்பித்துத் தெரிந்து கொள்ளலாம்.

N. கோபால அய்யர், செக்ரடரி

IBN 101

The Fashionable
Furnishing Fabrics

DRESS TEXTILES

Ladies', Gents', Children's
Underwear Sport Shirts etc.

S. BEEMIAH CHETTY,

"WHITE SHOP"

உண்மையான நல்ல பட்டை உணருங்கள்.

உண்மையான நல்ல பட்டு எப்படி உணர்ச்சிக்கு இருக்கும் என்பதை அறிய ஆடம்பரமும் மனோகரமுமான மைசூர் சில்க் அணிவதன்மூலம் தெரிந்து கொள்ளலாம். அது சாதாரண பட்டுக்களைவிட அதிக நாள் உழைக்கும்.

மைசூர்
கவர்ன்மென்ட்
தயாரிப்பு.

கவர்ன்மென்ட் சில்க் வீவிங் பாக்டரி, மைசூர்.

MSK-10TM

தோஷமற்ற, உயர்ந்த, பூரிப்புள்ள

வைரங்கள்

அழகிய வேலைப்பாடமைந்த

பவுன் நகைகள்

நவீன முறைகளால் தயாரிக்கப்படும்

வெள்ளி சாமான்கள்

இவைகளுக்கு எங்களைக் கலந்து ஆலோசிக்கவும்.

உம்மிடியார்

உம்மிடி ராமய்ய செட்டி, குருசாமி செட்டி கம்பனி

24/25. சைனு பஜார் :: மதருஸ்

கோவையில் புதிய புத்தக நிலையம்

மறுமலர்ச்சி எழுத்தாளர்களின் எழுத்தோவியங்களும், ஆரம்ப பாடசாலை, ஜில்லா போர்டு, முனிசிபல் பள்ளிக் கூடங்களுக்கு வேண்டிய தமிழ், ஆங்கில, இலக்கிய, இலக்கணப் புத்தகங்களும், மேல் வகுப்புகளுக்கான தமிழ், ஆங்கில நோட்ஸுகளும் எங்களிடம் கிடைக்கும்.

விவரங்களுக்கு

முத்து நூலகம்

பெரிய கடை வீதி :: கோயமுத்தூர்.

(முனிசிபல் ஆபீஸுக்கு எதிரில்)

விளம்பர அட்டவணை

●

வசந்தா மில்ஸ் லிமிடெட்	எஸ். பீமைய செட்டி
பி. ஏ. ராஜூ செட்டியார்	ஆர்ய வைத்ய பார்மஸி
ஜுபிடர் பிக்சர்ஸ்	இந்தியன் பாங்கு லிமிடெட்
நியூ இந்தியா இன்ஷ்யூரன்ஸ்	வசந்தா டையிங் ஒர்க்ஸ்
ஸிம்ஸன் & கம்பெனி	நாஷனல் சேவிங் சர்டிபிகெட்
ப்ரூக் பாண்ட்	மைசூர் ஸில்க்
உம்மிடியார்	சென்ட்ரல் பாங்
கவர்னர் யுத்த நிதி	முத்து நூலகம்
ஹமாம்	பர்மாஷெல், கோயமுத்தூர்

வசந்தம்

மலர் 4 | பார்த்திப ஹூ ஆடி மீ | இதழ் 4

19 OCT 1945 MADRAS

பொருளடக்கம்

சுதந்திர வாழ்வு	... "கலி"	1
பாடாத பாட்டு	... ரா. நா.	... 2
என் அன்னை	... "அம்பலவாணன்"	... 5
பணமே நீ சொல்!	... கு. விசுவநாதன்	... 6
சிலப்பதிகாரம்	... சர். ஆர். கே. எஸ்.	... 9
குழந்தைகளின் உடல்நலம்	... அ. சந்திரசேகரன்	... 15
நிஜகல்லின் ராணி	... ஜெயலக்ஷ்மி ஸ்ரீனிவாசன்	... 17
செஞ் சீனு	... மு. மு. மு. அப்துறஹீம்	... 24
பாதாள உலகிலே	... "ரதி"	... 31
டாம் மாமாவின் குடில்	... "வில்லன்"	... 38
யுத்தகால இலக்கியம்	... "சுகி"	... 45
கலைக்கோயில்	... சுத்தானந்தர்	... 49
விதியின் செயலா?	... சரஸ்வதி தியாகராஜன்	... 58
புத்தக ஆராய்ச்சி	... "உமாபதி"	... 64
சாவித்திரி	... ஆர். ஷண்முகசுந்தரம்	... 65
அருணோதயம்	... சி. எஸ். ஆர்.	... 76
மனக் கண்ணாடி	... ஆர். கே. பார்த்தசாரதி	... 77
மணமகனுக்கு...	... ப. தனுஷ்கோடி	... 80

வசந்தத்தில் வெளிவரும் கதைகள், கட்டுரைகளில் காணப்படும் பெயர்களெல்லாம் கற்பனை.



ஹிமாலயத்தில் —
தேநீர் அருந்தும் நேரம்

இந்தியாவின் வடக்கே ஓர் பெரிய சுவர் போலப் படர்ந்திருக்கும் ஹிமாலய மலையில் உள்ள பள்ளத் தாக்குகளும் பீடபூமிகளும் நூற்றுக் கணக்கான மைல்கள் நீளமுள்ள ரஸ்தாக்களால் பிணைக்கப்பட்டிருக்கின்றன. சுமை சுமக்கும் கோவேறு கழுதைகளின் இடையறாத போக்கு வரத்துக்களினால்தான் இங்கே உள்ளவர்கள் வாழ முடிகிறது. இதனால் தான், இங்கே உண்டாகும் பழங்களும், கம்பளங்களும் மத்திமப் பிரதேசங்களுக்குக் கொண்டுவரப்படுகின்றன.

ரஸ்தாக்களில் செல்பவனுக்கோ, கோடைக்காலங்களில் நாவறண்டு போகிறது; குளிர் காலங்களில், குளிர் மிகுதியால் உடல் நடுங்குகிறது. இந்தப் பிரயாணிக்கு இந்தப் பிரதேசங்களில் அமிர்தம் போல் உதவி அவன் பிரயாணத்தை எளிதாக்கி அவனுக்கு உத்சாகத்தையும் கொடுப்பது எது தெரியுமா? தேநீர் தான்.

இந்த மலைப் பிரதேசங்களில் உள்ள ஜனங்கள் பால் சீனியுன் கலந்த தேநீரையே அருந்துகிறார்கள். கீழ ஹிமாலயப் பிரதேசங்களில் அநேகமாய் வெள்ளிப் பூச்சுப் பூசின நீளமான காம்புள்ள மரக் கோப்பைகளே தேநீர் அருந்த உபயோகிக்கப்படுகின்றன. எனினும், மற்றப் பிரதேசங்களில் சைனாக் கோப்பைகளோ அல்லது பித்தளைப் பாத்திரங்களோ உபயோகத்தில் இருக்கின்றன.

இம்மலைப் பிரதேசங்கள் முழுவதிலும், இந்தியாவின் நாட்டுப் பிரதேசங்களிலிருப்பது போலவே புத்தப் புதிய ப்ரூக் பாண்ட் தேயிலை மிகுந்த கியாதியுடன் வியாபித்து இருக்கிறது.

ப்ரூக் பாண்ட்

"இரு இலையும் ஒரு மொட்டும்"

நீண்ட தமிழால் உலகை
நேமியின் அளந்தான்

—கம்பர்

அட்டைச் சித்திரம்:

சுதந்திர வாழ்வு

‘பட்’டெனவே கயிரறுத்துப்
பாய்ந்து துள்ளி யோடும்
கட்டிளமைக் கன்றெனவே
கானில் திரிந்து களிப்போம்!

மனிதர் கையில் சிக்கி யெமது
மதிப்பிழக்க மாட்டோம்!
இனிமை வாழ்வு எனினும் அடிமை
ஈன வாழ்வு விரும்போம்!

சட்ட திட்டம் போட் டதட்ட
சமர்த்த ரில்லை கண்டீர்!
இட்டமுடன் இயைந்த தெல்லாம்
இசைவுடனே உண்போம்!

உற்றதுணை சுற்றமுடன்
உலகி லெந்த நாளும்
ஒற்றுமையாய் ஓரினமாய்
ஒருயிராய் வாழ்வோம்!

“கலி”

197234

வாடாத பாட்டு!

[ரா. நா]

நான் சட்டக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த பொழுது ஒரு ஆசிரியரை மாணவர்கள் மிகவும் தொந்தரவு செய்து வந்தார்கள். அவர் பேசும்பொழுது குறுக்குக் கேள்வி கேட்பது, பெஞ்சைத் தட்டுவது, பூனை மாதிரி கத்துவது இம்மாதிரி நிரம்பத் தொல்லைகள் கொடுத்து வந்தனர். ஆசிரியர் மிகவும் பொறுமை. சாலி. வருஷம் முடிந்து கடைசி வகுப்பு நடக்கிறது. அன்று மாணவர்களெல்லாம் ஆசிரியரை நோக்கி "நாங்கள் உங்களை விட்டுப் பிரிகிறோம். எங்களுக்கு ஆசி கூறி அனுப்புங்கள்" என வேண்டிக்கொண்டனர். ஆசிரியர் பேச ஆரம்பித்தார் "நீங்கள் யாவரும் சட்டப் பரிட்சையில் தேறி கடைசியில் சட்டக் கல்லூரி ஆசிரியர்களாக வரவேண்டும் என்று மனப்பூர்வமாக ஆசி கூறுகிறேன்" என்றார். வருஷம் பூராவும் மனதில் சேர்ந்திருந்த ஆத்திரம் கடைசி தினத்தன்று குமுறிக் கொண்டு வந்தது என்று நினைக்கிறேன்.

பத்திரிகை ஆசிரியருடைய நிலையும் சட்டக்கல்லூரி ஆசிரியருடைய நிலை போல்தானிருக்கும் என்று எண்ணுகிறேன். நான் மிகைப் படுத்திக் கூறுகிறேன் என்று எண்ணுபவர்களுக்கு ஆசிரியருடைய ஒரு நாள் அனுபவத்தை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

ஆசிரியர் காரியாலயத்திற்கு வந்தவுடன் கவனிக்க வேண்டியது தபால்கள். கடிதங்களை முதலில் உடைத்துப் பார்த்தால் பலவித மனோ பாவங்களைச் சந்திக்கலாம்.

முதற் கடிதம்:

மகா-ா-ா-ஸ்ரீ ஆசிரியரவர்கள் திவ்ய சமூகத்திற்கு,

என் ஆயுளில் எனக்குக் கிடைத்த பெரும் பேறுகளில் நான் முக்கிய மெனக் கருதுவது தங்கள் உயரிய பத்திரிகையைப் படிக்கும்பாக்கியம்தான். உங்கள் பத்திரிகை வந்தவுடன் நான் ஆரம்பத்திலிருந்து முடிவுவரை விடாமல் படித்து விடுவேன். ஒவ்வொரு அம்சமும் ஒரு தனிக் கவர்ச்சி அளிக்கிறது.

[இம்மாதிரி அனுபவம் ஆசிரியருக்கு டானிக் போலிருக்

கும் என்று எண்ணுகிறீர்கள். அப்படி நினைத்து விட வேண்டாம். கடிதத்தை மேற்கொண்டு படியுங்கள்.]

தங்கள் பத்திரிகையைப் படித்ததன் பயனாக எனக்கு புதுப் புதுக் கற்பனைகள் தோன்றி வருகின்றன. அவைகளில் ஒன்றை உருவகப் படுத்தி தனித் தபாலில் அனுப்பியிருக்கிறேன். அதைத் தங்களுடைய மேலான பத்திரிகையில் வெளியிட்டு என் கற்பனை பெருக கை கொடுக்குமாறு கேட்டுக் கொள்ளும்

தங்கள் அன்பன்

....

காரியமில்லாமல் ஆசிரியரை யாரும் தோத்திரம் செய்துவிட மாட்டார்கள் என்பதை இதிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

இரண்டாவது கடிதம்:

அன்புமிக்க ஆசிரியர் அவர்களுக்கு,

நான் "காதலும் கத்தரிக்காயும்" என்று எழுதிய கதை என்ன ஆயிற்று? தாங்கள் அதை வெளியிடுவதாக உத்தேசமுண்டா? இல்லையேல் அதை மறுதபாலில் திருப்பியனுப்பவும்.

தங்கள்

....

மூன்றாவது கடிதம் எழுதியவர் ஒரு கவிஞர். அவர் லிகிதம் வருமாறு:

"நான் சில காலத்திற்குமுன் 'காதலியின் கனவு' என்று மகுடமிட்டு ஒரு கவிதை எழுதியிருந்தேன். அதை நான் எழுதி முடித்த சமயத்தில் என் அருகில் இருந்த புலவர்கள் அதன் மேன்மையைக் கண்டு வியப்புற்றார்கள். அதன் சிறப்பை அறிந்த ஓரிரு ஆசிரியர்கள் அதை, தங்கள் பத்திரிகைக்கு அனுப்பும்படி வற்புறுத்துகின்றனர். ஆகையால் அக்கவிதையைத் தாமதமின்றித் திருப்பியனுப்பவும்.

தங்கள்

....

அடுத்தவர் புத்தகப் பிரசுராலயத்தார்.

அன்புமிக்க........

தங்கள் பார்வைக்கும் விமர்சனத்திற்கும்.... ....புஸ்தகம் அனுப்பியிருந்தோம். அதற்குத் தாங்கள் விமர்சனம் எழுதியிருந்தால் மேற்படி விமர்சனம் வெளிவந்திருக்கும் பத்திரிகை இதழ் அனுப்பவும். மேற்படி புத்தகம் பூராவும் விற்பனையாகி விட்டது என்பதைத் தங்களுக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவிக்கக் கடமைப் பட்டவர்களாயிருக்கிறோம்.

தங்கள்

....

ஒருவாசக சங்கக் காரியதரிசியின் கடிதம்:

தங்கள் பத்திரிகை வாரந்தோறும் வருவதற்கு பதிலாக தினசரி வந்தால் வெகு நன்று

யிருக்கும். தங்கள் பத்திரிகை இல்லாமல் எங்கள் வாசகசாலை நிலவில்லா முற்றம் போலிருக்கிறது. உங்கள் பத்திரிகை வந்தவுடன் அன்பர்கள் ஒருவருக்கொருவர் அடித்துக் கொண்டு படிக்கிறார்கள். அவ்வளவு போட்டி.

ஆகையால் தயவு செய்து உங்கள் பத்திரிகையை இலவசமாக அனுப்புமாறு வேண்டிக் கொள்கிறோம்.

....

ஒரு வாசகர் கடிதம்:

"தங்கள் பத்திரிகையில் வனப்பு மிக்க சினிமா நடிகர் படம் ஏன் போடுவதில்லை? சினிமா நட்சத்திரங்களின் வாழ்க்கை ரகஸ்யங்கள், காதல் லீலைகள் முதலியவற்றை வெளியிட்டால் ஏராளமானபேர் அதைப் படிக்க முன் வருவார்கள்".

....

கடைசியாக ஒரு ஏஜண்டின் கடிதத்தைத் தருகிறேன்.

"தங்கள் பத்திரிகையில் மட்டும் நிரம்ப காதற் கதைகள் வெளியிட்டால் இன்னும் ஆயிரம் பிரதி, கூட விற்க என்னால் முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். விளம்பரப் பட்டியில் இத்தனை காதற் கதைகள் வெளிவந் திருக்கின்றன என்பதையும் அறிவிக்க மறந்து விடாதீர்கள்.

....

இப்படியாக நம் பத்திரிகை மேம்பாடடைவதற்கான யோசனைகள் தினசரி தபாலில் வந்து கொண்டிருக்கும்.

இப்படிக் கடிதங்களைப் பார்த்துக்கொண்டிருக்கையில் அச்சாபீஸ் மேஸ்திரி வந்து "ஸார் மேட்டர்" என்பான். மேலே குறிப்பிட்ட 'காதலும் கத்தரிக்காயும்' என்கிற விஷயத்தைப் பார்க்லாம் என்று பிரித்தால் அதில் காதலுமிருக்காது கத்தரிக்காயுமிருக்காது. மற்றும் கைவசமுள்ள கையெழுத்துப் பிரதிகளைப் புரட்டிக் கொண்டிருக்கையில் அச்சாபீஸ் காரன் வந்து "ஸார் அந்த மேட்டரில் கடைசிப் பாராவை எடுத்தால்தான் அந்தப் பக்கத்தில் அடங்கும்" என்பான். கடைசி பாராவை எடுத்தால் காலில்லா முடவன் மாதிரி இருக்கும். மறுபடியும் பூரா விஷயத்தையும் படித்து போதிய அளவு வெட்டிச் சீர் படுத்துவதற்குள் மற்றொருவன் வந்து "ஸார் கடைசி பக்க மாட்டரில் இரண்டுவரி குறைகிறது" என்பான்.

"சரி, 'கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்று போடு" என்று சொல்லுவதைத் தவிர வேறு வழியில்லை. எல்லாரையும் விட பத்திரிகை ஆசிரியர் கடவுளை நம்பித்தான் வாழ வேண்டும்.

என் அன்னை

" அம்பலவாணன் "

சின்னக்குழந்தை முதல் சீராட்டிப் பாலூட்டி
வன்னப் பொற் காப்பிட்டு வாய் வலிக்க முத்தமிட்டு
அன்னத்தைப் பிசைந்தெடுத்து அம்புலியினெழில் காட்டி
என்னன்னை போலன்பால் இசைந்தளிப்பார் யாரம்மா?

கண்ணுக்கு மையெழுதிக் கஸ்தூரிப் பொட்டிட்டு
வண்ணச் சிறுபாவை வாங்கி மகிழ வைத்து
வெண்ணெயும் பட்சணமும் வேண்டியெனக் களித்துக்
கண்ணின் இமைபோலக் காத்திடுவார் யாரம்மா ?

'இது நன்று ; இது தீது' என்றெல்லாம் எடுத்தியம்ப
வித விதமாய்க் கதை சொல்லி வேடிக்கை பலகாட்டி
'கது' மென நான் நகைத்திடுங்கால் களிகொண்டு உளமகிழ்ந்து
நிதமு மென்னை நேசிக்கும் நேரிழையாள் யாரம்மா ?

'இன்றுன்னை எடுப்ப 'னென இத வார்த்தை பல சொல்லி
கன்றிச் சிவக்க வொரு கன்னத்து முத்தமிட்டு
வென்றிகள் பல பெற்ற வீராங்கனை போல
என்னை எடுத்தணைத்து இன்புறுவார் யாரம்மா ?

தந்தை யடிப்பரேல் தயவாய் எடுத்தணைத்து
சிந்தும் கண்ணீரைச் செவ்வே துடைத்தடக்கி
பந்தும், பழவகையும் பரிசாய்க் கொடுத்தனுப்பும்
எந்தம் அன்னைக்கு இணையுள்ளோர் யாரம்மா ?

பணமே நீ சொல்!

[கு. விசுவநாதன்.]

★

பணமே நீ சொல்! உனக்கேன் இந்தக் குறும்பு?

வட்ட வடிவமாய் இருக்கும் நீ, கண்ட கண்ட இடத்திற்கெல்லாம் உருண்டோடுகிறாய் என்று வட்டத்தில் குழிபண்ணி வைத்தார்கள். அப்படியும் ஓடினாய். சதுரமாக்கினார்கள். ஓட்டம் ஒடுங்கிய பாடில்லை. கொட்டத்தை அடக்க சரியான வழியென்று கடிதாசி ஆக்கினார்கள். அடடா, எவ்வளவு குறும்பு? கடிதாசி ஆனபின் காற்றாகப் பறக்கிறாயே! இதோடு போச்சா? அம்மம்ம...... உன் குறும்பு வேறு எதற்குண்டு?

மக்கள் மனதிற்கு மகிழ்ச்சியைத் தருகிறாய்; உள்ளத்தில் களிப்பை உண்டு பண்ணுகிறாய்; அறிவைப் பெருக்க மகிழ்ச்சி தரும் கலை வளர பெருந்துணையாய் இருக்கிறாய். வாழ்வில் நீ புரியும் நடனம் சொல்லுந்தரமன்று. நீ இல்லாத இடத்தில் வாழ்வேது?

பழகப் பழக பாலும் புளிக்கும். அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு. இதற்கு உலகில் நீ ஒரு பொருள்தான் விதிவிலக்கு. உன்னிடம் பழகப் பழக உன் மீது ஆசை அதிகரிக்கிறது. அந்த ஆசைக்கு ஒருவித எல்லையும் இல்லை. நட்பு மிஞ்ச மிஞ்சவோ அமிர்தத்தின் இனிப்பும் மிஞ்சுகிறது. நஞ்சாக பாறக்காணோம். இந்த அரிய சக்தி உனக்குத்தானே உண்டு? பணமே நீ சொல்!

இந்த சக்தி படைத்த உன்னிடம் நாங்கள் கொண்டுள்ள ஆசை கொஞ்சமல்ல! உன் நட்பைப் பெற நாங்கள் படுவது பெரும்பாடு. எந்தெந்த வழியில் உன்னைப் பெறலாம் என்று இரவும் பகலும் எண்ணுகிறோம். ஏதேதோ ஏற்பாடெல்லாம் செய்கிறோம். உன் வரவை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். வருவாயோ மாட்டாயோ என்று சில சமயங்களில் ஏங்கி வாடுகிறோம்.

நாங்கள் இப்படியிருக்க நீ என்ன செய்கிறாய் தெரியுமா? கண்ட கண்ட இடத்திற்கெல்லாம் போய் விடுகிறாய். 'இவன் ஏழை, உண்ண உணவின்றி வருந்துகிறான். இவ்விடம் சென்று கொஞ்சம் துணைபுரிவோம்' என்று நினைப்பதேயில்லை. 'பணக்காரனிடம் ஏன் செல்ல வேண்டும்' என்று நினைக்கின்றாயா? அதுவுமில்லை. இன்னும், நல்லவன் கெட்டவன் என்றோ, சிறியவன் பெரியவன் என்றோ நீ பார்ப்பதில்லை. நினைத்தபடி நினைத்த இடத்திற்குச் சென்று விடுகிறாய். 'சேரிடம் அறிந்து சேர்' என்னும் முதுமொழியை நீ கொஞ்சம் கூடப் புரிந்துகொண்டதாகத் தெரியவில்லை. சேராத இடந்தனிலே சேர்வதனால் என்ன என்ன

தீங்கு நடக்கிறது என்பதை நீ ஒரு சிறிது அறிந்திருந்தால்கூட ஒரு போதும் அப்படிச் செய்ய மாட்டாய்.

அற்பனிடம் சேர்கிருய். அவன் அர்த்த ராத்திரியில் குடை பிடிக்கிருன். கீழ்மகன் ஒருவனிடம் சென்று சேர்ந்து விடுகிருய். அவன் தன்னை இந்திரனுய் எண்ணிக் கொள்கிருன். இந்திரனுய் எண்ணியவுடன் தன் முன்னல் நிற்போர் இன்னர் என்றறியும் பார்வை மங்கி விடுகிறது. அவர் கூறும் சொற்கள் இன்னதென்று கேட்காமல் காதும் செவிடாய் விடுகிறது. வாயும் பேச மறுக்க அவன் ஊமையாகி விடுகிருன். இதோடு போகவில்லை. இத்தனையும் இழந்தும் இழந்தது தெரியாமல் பெருமையாகவே இருக்கிருன். என்ன வேடிக்கை. இது உன் குறும்புதானே?

இதோ இன்னெருவன் செய்கை. உன்னைக்கொண்டே உன்னைச் சேகரிக்கிருன். தனது சுகத்தைப் பொருக்கிக் கொண்டே போகிருன். நிலை உயர உயர மற்றவர்களை மதிப்பதில்லை. கேவலமாகவும் நடத்துகிருன். அதிகார ஆசை பிறந்து விடுகிறது. பெரிய அமுல் பண்ணுகிருன். மட்டி, மடையன், முட்டாள், மூடன் என்று கூடப் பார்க்காமல் குருட்டுத் தனமாய் எல்லோரிடமும் நீ பழகி விடுவாய் என்று அவனுக்குத் தெரியாது. தன்னுடைய சாமர்த்தியத்தினல் தான் உன்னைச் சேர்ப்பதாக நினைத்துக் கொள்கிருன். இன்பம் பெருகுவதை உணர்ந்து உன்மீது மோகம் கொண்டு பணத்தைப் பெருக்குவதிலேயே கண்ணுங் கருத்துமாயிருக்கிருன். அப்படிச் செய்யும் பொழுது பலரை ஏமாற்றுகிருன்; பலரைத் துன்பத்துக் குள்ளாக்குகிருன்.

பணத்தைச் சேர்த்துச் சேர்த்து தானும் உண்ணுது பிறருக்கும் கொடாது அடுக்கி வைத்து மகிழ்பவனும் உண்டு. பொருளின் பயனறியாத இந்தத் தரித்திரனிடம் தரித்திருப்பதும் உன் குறும்புச் செயல்தானே?

தகுதியற்றவர்களிடம் சேர்வதனல் உலக மக்களுக் கேற்படும் துன்பம் கொஞ்ச நஞ்சமல்ல. இதனல்தான் சிலர் உன்னைக் கேவலமாகப் பேசி உன் தன்மையைப் பலவகையிலும் இழித்துக் கூறி உன்னையும் துறந்தனர். எல்லோராலும் பெரிதும் மதிக்கப்பட்டு வாழ்வை வாழ்வாக்கும் சக்தி படைத்த நீ, அறிஞர்களால் மதிக்கப் படாமலிருந்ததற்குக் காரணம் கண்டவரிடம் சேரும் சேர்க்கைக் குணமல்லவா? இந்தக் குறும்புத்தனமான செய்கையினல் என்ன பயன்? பழகுவதற்கு முன்பு நட்பிற்குத் தகுதியுடையவனு என்று மட்டும் நீ பார்த்து விட்டால் அடடா — உலகில் எவ்வளவு துன்பம் குறையும்?

இதன் பொருட்டு ஞாபகத்தில் வைக்க வேண்டியது ஒன்றும் அதிகமில்லை. அவனிடம் இரண்டே தன்மைகள் மட்டும் இருக்கின்றதா என்று பார்! ஒன்று உன்மீது மிகுதியான ஆசையிருக்கக் கூடாது. இரண்டாவது பிறரிடத்து அன்புடையவனுகவும், அவர்கள் நலத்தில் பொறுப்புடையவனுகவும் இருக்க வேண்டும். அவ்வளவுதான்.

இதோ இதற்கொரு உதாரணம்:

பண்டைப் புலவரொருவர் ஏராளமான பொன் பொருளைப் பரிசிலாகப் பெற்ருர் பெற்ற பொருளை மனைவி கையிற் கொடுத்தார். மிகுந்த பொருளைக் கண்ட அம் மங்கை தன் ஆருயிர்க் கணவனை நோக்கி "அன்பரே, தாங்கள் கொணர்ந்த பொன்னும் பொருளும் வேண்டுமளவிற்கு மிஞ்சியிருக்கிறதே. மிஞ்சியதை என்ன செய்யட்டும்?" எனப் பணிவுடன் வினவினள். அதற்கு அப்புலவர் பெருமான் சிறிதும் தயங்காது "கொடு, கொடு, எல்லோருக்கும் கொடு" என்ருர்.

"யார் யாருக்குக் கொடுப்பது... ஒன்றும் விளங்கவில்லையே! என்றனள் மனைவி. அதைச் செவிமடுத்த புலவர் "கொடேன்...உன் மாட்டு அன்புடையோர்க்குக் கொடு. யார் யாரை விரும்புகிருயோ அவர்களுக் கெல்லாம் கொடு; வறுமையுற்ற காலத்துப் பலர் பொன் கொடுத்து உதவினுர்களல்லவா – அவர்களுக்கெல்லாம் கொடு. இன்னும் தகுதியுடைய எல்லோருக்கும் உன் விருப்பம் போல் கொடு. யார் யாருக்குக் கொடுப்பது என்று இனி என்னைக் கேட்காதே. ஆனல் ஒன்று. பொருளை வைத்துக்கொண்டு இனி எக்காலத்தும் 'சதுரங்கமாய்' வாழலாம் என்று மட்டும் எண்ணுதே" என்று சொன்னுர்.

இவர் போன்ருரிடத்து நீ நட்புக் கொள்வதனல் எவ்வளவு நன்மை யேற்படுகிறது என்பதை, பணமே, நீ சொல்!





சிலப்பதிகாரம்

சர்-ஆர்.கே. சண்முகம் செட்டியார்

கனாத்திறம் உரைத்த காதை

(40—54)

கண்ணகியின் கனவு

ஐயனார் கோவிலில் வழிபாடு செய்துகொண்டிருந்த தேவந்தி என்னும் பார்ப்பனப் பெண் கண்ணகியின் நெருங்கிய தோழிகளில் ஒருத்தி. கண்ணகி கணவனைப் பிரிந்து வருந்திக்கொண்டிருப்பது தேவந்திக்குத் தெரியும். தான் வழிபாடுசெய்யும் ஐயனாருக்கு அறுகு, சிறுபூளை, நெல் இவற்றைத் தூவி வழிபாடுசெய்து கண்ணகி தன் கணவனை சீக்கிரம் அடைய வேண்டுமென்று தேவந்தி வேண்டினாள். பின் கண்ணகியிடம் சென்று "உன் கணவனை நீ வெகு சீக்கிரம் பெறுவாய்" என்றாள். அதைக் கேட்ட கண்ணகி அவளை நோக்கி "என் அருமைத் தோழியே, நீ சொன்ன சொல் பலிக்குமானாலும் என்னுடைய நெஞ்சில் அச்சம் தோன்றுகிறது. ஏனென்றால் நேற்று இரவு நான் ஒரு கனவு கண்டேன். என் கணவர் திரும்பி வந்து என் கையைப் பிடித்தார். நானும் அவரும் இந்த ஊரை விட்டு ஒரு பெரிய நகருக்குப் போனோம். அந்த ஊரிலே என் கணவர்மீது ஒரு அடாப்பழி சுமத்தினார்கள். என்மேல் தேளை இட்டதுபோல் இருந்தது அப்பழிச் சொல். கோவலருக்குப் பெருந்தீங்கு விளைந்ததென்று கேட்டு, நான் அவ்வூர் அரசனிடம் சென்று முறையிட்டு வழக்காடினேன். அந்த அரசனுக்கும் அவ்வூருக்கும் பெரிய தீங்கு ஏற்பட்டது. நான் கண்ட கனவு தீய கனவாதலால் விரிவாக உன்னிடம் சொல்ல எனக்கு மனமில்லை. தீவினைப் பயனை அடைந்த நான் அதன் பிறகு என் கணவரோடு பெற்ற நலங்களை நீ கேட்டால் சிரிப்புக்கு இடமாகும்" என்றாள்.

— வாட்டு அரும் சீர்க்

கண்ணகி நல்லாளுக்கு உற்ற குறை உண்டு என்று
எண்ணிய நெஞ்சத்து இனையளாய், நண்ணி,
அறுகு சிறு பூளை நெல்லோடு தூஉய்ச், "சென்று —

பெறுக கணவனோடு" என்றாள்; "பெறுகேன்,
கடுக்கும் என் நெஞ்சம் கனவினால் என்கை
பிடித்தனன், போய் ஓர் பெரும் பதியுள் பட்டேம்;
பட்ட பதியில் படாதது ஒரு வார்த்தை
இட்டனர் ஊரார், இடு தேள் இட்டு என் தன் மேல்,
கோவலற்கு உற்றதோர் தீங்கு என்று, அது கேட்டுக்,
காவலன் முன்னர் யான் கட்டுரைத்தேன்; காவலனோடு —
ஊர்க்கு உற்ற தீங்கும் ஒன்று உண்டால், உரையாடேன்;
தீக் குற்றம் போலும், செறி தொடீஇ! தீக்குற்றம்
உற்றனோடு, உற்ற உறவனோடு, யான் உற்ற
நல் திறம் கேட்கின் நகை யாகும்."

வாட்டு அரும் சீர் — வாடாத புகழை உடைய; கண்ணகி நல்லாளுக்கு — கண்ணகியாகிய பெண்ணிற்கு; உற்ற குறை உண்டு என்று — (கணவன் பிரிதலால்) வந்த ஒரு துன்பம் உண்டு என்று; எண்ணிய நெஞ்சத்து — நினைத்த நெஞ்சத்தில்; இனையளாய் — வருத்தத்தை உடையவளாய்; நண்ணி — கோயிலை அடைந்து; அறுகு சிறுபூளை — அறுகம்புல், சிறிய எறுக்கம்பூ என்ற இவற்றை; நெல்லொடு தூஉய் — நெல்லோடு தூவி (என்றது, கண்ணகி தன் கணவனோடு கூடுவாளாக என்று தூவி வணங்கி); சென்று கணவனோடு பெறுக — போய் நீ உன் கணவனைப் பெறுவாயாக; என்றாள் — என உரைத்தாள்; பெறுகேன் (நீ கூறுவது போலக் கணவனைப்) பெறுவேனாயினும்; கடுக்கும் என் நெஞ்சம் — எனது நெஞ்சு ஐயப்படுகின்றது; (ஏனெனில்) கனவினால் — (நேற்றுக்கண்ட) கனவில்; என் கை பிடித்தனன் — என் கையைப் பிடித்து அழைத்தான்; போய் ஒரு பெரும்பதியுள் பட்டோம் — இருவரும் போய் ஒரு பெரிய நகருக்குள் நுழைந்தோம்; பட்டபதியில் — புகுந்த நகரில்; படாதது ஒரு வார்த்தை — (எங்கள் மீது) கட்டுப்படாத ஒரு பழிச் சொல்லை; என் தன் மேல் இடு தேள் இட்டு — என் மீது தேளை எடுத்து விட்டாற்போல; இட்டனர் ஊரார் — அவ்வூரார் போட்டனர்; கோவலற்கு உற்றது ஓர் தீங்கு என்று — கோவலனுக்கு ஒரு தீங்கு விளைந்தது என்று; அது கேட்டு — அந்த வார்த்தையைக் கேட்டு; காவலன் முன்னர் யான் கட்டுரைத்தேன் — அவ்வூர் அரசன் முன்னர் நான் சென்று வழக்குரைத்தேன்; காவலனோடு — அவ்வரசனோடு; ஊர்க்கு உற்ற தீங்கும் ஒன்று உண்டால் — அவ்வூருக்கு வந்த தீங்கு ஒன்றும் உண்டு; (ஆனாலும்) தீக்குற்றம் போலும் உரையாடேன் — (அது தீய கனவாதலால்) உன்னிடம் சொல்ல மாட்டேன்; செறி தொடீஇ — நன்கு நெருங்கிய வளையல் களையுடைய தோழீ!; தீக்குற்றம் உற்றேனோடு — தீவினைப் பயனை அடைந்தவளாகிய என்னோடு; உற்ற உறவனோடு — என்னோடு பொருந்திய கணவனுடன்; (என்றது யானும், அவரும்) யான் உற்ற நல் திறம் கேட்கின் — யான் பெற்ற நலங்களை நீ கேட்டால்; நகை யாகும் — அது சிரிப்புக்கு இடனாகும்;

உறுவன் — மிக்கோன்; அதாவது கண்ணகியைவிடச் சிறந்தவனான கோவலன்; தொடீஇ — வளையல்களை அணிந்தவளே!;

தேவந்தி கண்ணகிக்கு ஆறுதல் சொல்வது

(54—64)

தீக் கனவால் வருத்த மடைந்திருக்கும் கண்ணகியை நோக்கி தேவந்தி "பொற்றொடி, உன் கணவன் உன்னை வெறுத்தான் என்று நினைக்காதே. முற்பிறப்பில் நீ ஒரு நோன்பு செய்யத் தவறியதால் இப்பிறவியில் உனக்கு இத்துன்பம் ஏற்பட்டது. இதற்கு நான் ஒரு பரிகாரம் சொல்லுகின்றேன். காவிரி கடலுடன் சேரும் கடல் முகப்பில் அழகிய நெய்தல் சோலையில் சோமகுண்டம், சூரிய குண்டம் என்ற இரண்டு பொய்கைகள் உண்டு. அவைகளில் நீராடி அருகேயுள்ள காமதேவன் கோயிலில் தொழுதவர் தமது கணவரோடு இவ்வுலகில் இன்பமடைந்து மறு பிறவியில் போக பூமியில் பிறப்பார்கள். நாம் இருவரும் அப்பொய்கையில் படிந்து ஒரு நாள் முழுகுவோம்" என்றாள். இதைக் கேட்ட கண்ணகி அவ்வாறு செய்ய மறுத்தாள், ஏனெனில் பத்தினியாகிய தான் தன்னுடைய கற்பின் திறமையால் தான் கணவனின் அன்பைப் பெற வேண்டுமே யொழிய புண்ணியத் துறைகளில் நீராடி அவ்வன்பைப் பெற முயற்சிப்பது சரியல்ல என்று தீர்மானித்தாள்.

"— பொன் தொடீஇ !
கைத்தாயும் அல்லை கணவற்கு ; ஒரு நோன்பு
பொய்த்தாய் பழம் பிறப்பில் ; போய்க் கெடுக ; உய்த்துக்
கடலொடு காவிரி சென்று அலைக்கும் முன்றில்,
மடல் அவிழ் நெய்தல் அம் கானல் தடம் உள ;
சோம குண்டம், சூரிய குண்டம் துறை மூழ்கிக்
காம வேள் கோட்டம் தொழுதார், கணவரொடு
தாம் இன்புறுவர் உலகத்துத் தையலார் ;
போகம் செய் பூமியினும் போய்ப் பிறப்பர் ; யாம் ஒரு நாள்
ஆடுதும்" என்ற அணி இழைக்கு அவ் ஆய் இழையாள்,
'பீடு அன்று' என இருந்த பின்னரே ;

பொன் தொடீஇ — பொன்னாலான வளையலணிந்த தோழீ ! ; கைத்தாயும் அல்லை கணவற்கு — நீ உன் கனவனால் வெறுக்கப்படவும் இல்லை ; ஒரு நோன்பு பழம் பிறப்பில் பொய்த்தாய் — உன் கணவனுக்காக நீ ஒரு நோன்பை பழம் பிறப்பில் பிழையாகச் செய்தாய் ; போய்க் கெடுக — அந்தத் தீங்கு சென்று அழிவதாக ; உய்த்து — நீரைக் கொண்டுசென்று ; காவிரி கடலொடு சென்று அலைக்கும் — காவிரியாறு கடலொடு சென்று அதன் அலையுடன் தன் அலையையும் எதிர்த்து வீசுகின்ற ; முன்றில் — கடல் முகப்பில் ; மடல் அவிழ் — இதழ்கள் அவிழ்ந்த ; நெய்தல் அம் கானல் — நெய்தல் மலர்களுடைய அழகிய கடற்கரைச் சோலையுள் ; சோம குண்டம் சூரிய குண்டம் — சோம குண்டம் சூரிய குண்டம் என்ற ; தடம் உள — இரண்டு பொய்கைகள் உள ; துறை மூழ்கி — அவற்றின் நீர்த் துறையில் மூழ்கி ;

காமவேள் கோட்டம் — (அவற்றின் பக்கத்தேயுள்ள) காமதேவனின் கோயிலை ; தொழுதார் — தொழுதவரானல் ; கணவரொடு—தமது கணவரொடு கூடி ; உலகத்துத் தையலார் — இவ்வுலகில் அங்கனம் முழுகிய பெண்கள் ; தாம் இன்புறுவர் — தாமும் இன்பமடைவர் ; போகம் செய் பூமியினும் போய்ப் பிறப்பர் — (மறு பிறவியில்) இன்பமே விளைகின்ற மேல்உலகத்திலும் சென்று பிறப்பார் ; யாம் ஒரு நாள் ஆடுதும் — நாமும் ஓர் நாள் அப்பொய்கையில் படிந்து முழுகுவோம் ; என்ற அணி இழைக்கு — என்று கூறிய அழகிய அணிகளையுடைய தோழியாகிய தேவந்திக்கு ; ஆய் இழையாள் — அழகிய அணிகளையுடைய கண்ணகி ; பீடு அன்று என இருந்த பின்னர் — அது எனக்குத் தகுந்த காரியமல்ல என்று கூறிப் பேசாதிருந்த பின்னர் ;

கைத்தல் — வெறுத்தல் ; உய்த்தல் — கொண்டு செல்லல் ; பீடு — பெருமை.

★

கோவலன் கண்ணகியிடம் திரும்பி வருவது

(64 — 79)

கண்ணகியும் தேவந்தியும் இவ்வாறு பேசிக்கொண்டிருக்கும் போது ஒரு வேலைக்காரி ஓடிவந்து "அம்மா அரசன் போலும் நம் கோவலர் நமது வீட்டின் முகப்பில் வந்துகொண்டிருக்கிறார்" என்றாள். கோவலனும் வீட்டை அடைந்து படுக்கை அறையில் நுழைந்தான். அதைக் கண்ட கண்ணகியும் அவ்வறைக்குள் புகுந்தாள். மனைவியின் வாடிய மேனியையும் வருந்திய உள்ளத்தையும் பார்த்தான் கோவலன். "கண்ணகி, பொய்க் கோலம் கொண்ட வேசியுடன் நான் ஆடி முன்னோர் சேகரித்து வைத்த எல்லாச் செல்வத்தையும் இழந்தேன். என்னுடைய வறுமை நிலை என்னை நாணச் செய்கிறது" என்று சொல்லி வருத்தத்துடன் தலைகுனிந்தான் கோவலன். அச்சமயம் கண்ணகி அவனிடம் கோபிக்கவில்லை. கடுமையான வார்த்தைகளையும் சொல்லவில்லை. மாதவிக்குக் கொடுக்கப் பொருள் இல்லாமல் இப்படித் தன் கணவன் வருத்தமடைகிறான் என்று நினைத்து "என்னிடம் இருந்த எல்லா அணிகளையும் முன்னமே கொண்டு போய் விட்டீர்கள்; என்னிடம் மிகுந்திருப்பது கால்ச் சிலப்புதான். அவைகளையும் பெற்றுக் கொள்ளுங்கள்" என்று புன்னகை முகம் காட்டிச் சொன்னாள். கோவலன் சிலம்பைக் கையில் வாங்கிக்கொண்டு, "சேயிழையே! நான் சொல்வதைக்கேள். இச்சிலப்பைக் கைமுதலாகக் கொண்டு வர்த்தகம் செய்து இழந்த செல்வத்தையும் நகைகளையும் மீண்டும் பெற வேண்டுமென்று தீர்மானித்து விட்டேன். இவ்வறுமையான நிலைமையில் இவ்வூரிலிருப்பது நமக்குப் பெருமையல்ல. பொருள் தேட மதுரைக்குப் போவோம். நீயும் என்னுடன் கூடவா—" என்று சொல்லி அன்று இரவு விடிவதற்குமுன் இருவரும் மதுரையை

நோக்கிப் புறப்பட்டார்கள். நெடுங்காலம் காத்திருந்த பழவினை வந்து கூடிவிட்டதால் கண்ணகியும் பதில் சொல்லாமல் கணவனுடன் புறப் பட்டாள்.

— நீடிய
"காவலன் போலும் கடைத் தலையான் வந்து, நம்
கோவலன்" என்றாள் ஓர் குற்றிளையாள்! கோவலனும்
பாடு அமை சேக்கையுள் புக்குத், தன்பைந்தொடி
வாடிய மேனி வருத்தங் கண்டு, "யாவும்
சலம் புணர் கொள்கைச் சலதியொடு ஆடிக்
குலம் தரு வான் பொருள் குன்றம் தொலைந்த
இலம்பாடு, நாணுத் தரும் எனக்கு" என்ன ;
நலம் கேழ் முறுவல் நகை முகம் காட்டிச்
'சிலம்பு உள கொண்ம்' எனச், சேயிழை! கேள் ; இச்
சிலம்பு முதலாகச் சென்ற கலனோடு,
உலந்த பொருள் ஈட்டுதல் உற்றேன், மலந்த சீர்
மாட மதுரை அகத்துச் சென்று ; என்னோடு இங்கு
ஏடு அலர் கோதாய்! எழுக ; என்று நீடி,
வினை கடைக் கூட்ட வியம் கொண்டான் கங்குல்
கனை சுடர் கால் சீயா முன்.

நீடிய காவலன் போலும் — புகழ் நிறைந்த மன்னனைப் போன்ற — நம் கோவலன் — நமது கோவலர் ; வந்து கடைத் தலையான் என்றாள் ஓர் குற்றிளையாள் — வந்து நமது வீட்டுக் கோடியில் உள்ளான் என்றாள் ஒரு குற்றேவல் பெண் ; கோவலனும் — ; பாடு அமை சேக்கையுள் புக்கு — பெருமை அமைந்த படுக்கை அறையுள் புகுந்து; (அங்கு வந்து நின்ற) தன் பைந்தொடி வாடிய மேனி — பசிய வளையணிந்த தன் காதலியின் வாடிய உடலின் ; வருத்தம் கண்டு — வருத்தத்தைப் பார்த்து ; யாவும் சலம் புணர் கொள்கை — எல்லாவற்றிலும் பொய்யே கலந்திருக்கும் இயல்பினையுடைய : சலதியோடு ஆடி — பொய் கூறும் அவளோடு காதலாட்டம் ஆடி ; குலம் தருவான் பொருள் குன்றம் — எமது குலத்தார் தேடிய நிறைந்த செல்வமாகிய குன்றம் ; தொலைந்த — அழிந்து போன ; இலம் பாடு — இவ்வறுமை நிலை ; எனக்கு நாணுத் தரும் என்ன — எனக்கு நாணத்தைத் தருகின்றது என்று கூற ; நலம் கேழ் முறுவல் — அழகிய நிறமுடைய புன்முறுவலால் ; நகை முகம் காட்டி — சிரித்த முகத்துடனே ; சிலம்பு உள கொண்ம் என — இன்னும் இரு சிலம்புகள் உள்ளன, கொள்ளுங்கள் என்று கூற ; சே இழை — சிவந்த மணிகளாலான அணிகலங்களை யணிந்த கண்ணகி ! ; கேள் — நான் கூறுவதைக் கேள் ! ; இச்சிலம்பு முதலாக — இச்சிலம்பை முதலாகக்கொண்டு ; சென்ற கலனோடு — போன அணிகளுடன் ; உலந்த பொருள் — அழிந்த பொருள் எல்லாவற்றையும் ; மலர்ந்த சீர் — விரிந்த புகழுடைய ; மாட மதுரை அகத்து — மாளிகை நிறைந்த மதுரையாம் நகரில்; ஈட்டுதல் உற்றேன் —

தேடக் கருதினேன்; ஏடு அலர் கோதாய் — இதழ் மலர்ந்த மாலையை யுடைய கண்ணகி; என்னோடு இங்கு எழுக — என்னுடன் இவ்விடம் விட்டுப் புறப்படுக; என்று —; நீடி வினை கடை கூட்ட — நெடுங் காலம் காத்திருந்த பழவினை இப்பொழுது வந்து கூட; வியம் கொண் டான் — அவ்வினையால் ஏவல் கொள்ளப்பட்டான்; கங்குல் — இருளை; கனை சுடர் — மிகுந்த ஒளியுடைய கதிரவன்; கால் சீயா முன் — போக்குவதற்கு முன்பாக.

கடைத்தலை — வீட்டின் முகப்பு; சலம் — பொய்; சலதி — பொய்யை உடையவள்; இலம் பாடு — இல்லாமலிருக்கும் நிலை, அதாவது வறுமை நிலை; கால் — இடம்; சீத்தல் — போக்குதல்;

வெண்பா

காதலி கண்ட கனவு, கரு நெடுங்கண்
மாதவி தன் சொல்லை வறிதாக்க; — மூதை
வினை கடைக் கூட்ட வியங் கொண்டான்; கங்குல்
கனை சுடர் கால் சீயாமுன்.

காதலி கண்ட கனவு — கண்ணகி கண்ட கனவு; கரும் நெடுங்கண் மாதவி தன் சொல்லை — கரிய நெடிய கண்ணையுடைய மாதவியின் சொற்களை; வறிதாக்க — வீணாகும்படி செய்ய; மூதைவினை — பழ வினை; கடைக் கூட்ட — வந்து முதிர்ந்து தலைப்பட; வியம் கொண்டான் — அதன் ஏவலை மேற்கொண்ட கோவலன்; கங்குல் — இராப் பொழுதை கனைசுடர் — மிக்க ஒளியையுடைய சூரியன்; கால் சீயாமுன் — போக்கிப் பகலை விளக்குவதற்கு முன்பு.

கனாத்திறம் உரைத்த காதை முற்றிற்று.

(தொடரும்)

★

குழந்தைகளின் உடல்நலம்

[அ. சந்திரசேகரன்]

நாம் நம் நாட்டில் சீர்திருத்தியமைக்க வேண்டிய விஷயங்களில் உடனே கவனஞ் செலுத்த வேண்டியவைசில உள்ளன. இவற்றுள் நம் நாட்டு ஆண் பெண் பிள்ளைகளின் உடல் நல அபிவிருத்தி மிகவும் முக்கியமானது. பள்ளிக்கூடம் செல்லும் நம் குழந்தைகளின் தற்போதைய நிலை மிகவும் துன்பகரமாக உள்ளது. அவர்கள் பெரும்பாலும் போதிய உணவின்றியும், அசுத்தமாயும் இருக்கின்றனர். அவர்கள் மூக்கு தொண்டை சம்பந்தமான நோய்கள், சொத்தைப் பற்கள், மங்கிய கண் பார்வை, இதய நோய், சுவாசப்பை சம்பந்தமான நோய்கள், மேகப்படை, தொண்டையில் சதை வளர்ச்சி ஆகிய பலவித நோய்களால் வருந்துகின்றனர். இவற்றைப் பெற்றோர் பொதுவாகக் கவனிப்பதே கிடையாது. இங்ஙனம் அசட்டை செய்யப்படும் நோய்கள் முதிர்ந்து அவர்களின் வாழ்க்கையை நிரந்தரமாக முடமாக்குகின்றன.

களிமண் மூளையெனப் பரிகசிக்கப்படும் குழந்தை உண்மையாக மங்கிய பார்வையினாலோ, அல்லது உள் நாக்கில் சதை வளர்ச்சியடைவதனாலோ, அல்லது தொண்டையில் சதை வளர்வதாலோ வருந்திக் கொண்டிருக்கும். அதனால் உடலிலும் மனத்திலும் மந்தம் ஏற்படலாம். அதன் உண்மை நிலையை அறிந்தும், அதன் பால் அநுதாபம் காட்டியும் அதன் நோயைத்தீர்க்க வேண்டும். நாம் மட்டும் பள்ளிக்கூடஞ் செல்லும் சிறுவர் சிறுமிகள் பால் சிறிது சிரத்தை காட்டினால், அவர்கள் சில அங்குலம் உயரமாக வளர்வதும், பல ராத்தல் கனமாவதும்’ உடல் உறுதியாவதும், இவற்றின் பயனாக இப்போதிருப்பதை விட அறிவில் விருத்தியடைவதும் திண்ணம்.

நம் குழந்தைகளின் உடல் நல அபிவிருத்தி விஷயமாக நாம் மேற்கொள்ளும் முயற்சிகளில், இதர நாடுகளில் இத்துறையில் அண்மையில் செய்யப்பட்டுள்ள முன்னேற்றங்களை ஆராய்ந்து அவற்றையும் நாம் பயன் படுத்த வேண்டும். குழந்தைகளிடையே சுகக் கேட்டையும் நோயையும் உண்டாக்க வல்ல சமூக நிலைமைகளையும் சூழ்நிலைகளையும் ஆராய்ந்து அவற்றை விலக்குதல்; மனத்தில் நோயை உண்டு பண்ணுவதற்குரிய காரணங்களை விரிவாகஆராய்ந்து அந்நோயைக் குணப் படுத்துதல்; உடலிலும் மனத்திலும் ஆரோக்கியத்தை வளர்ப்பதற்குரித்தான விஷயங்களைக் கண்டு பிடித்தும் அவற்றை அனுபவத்தில் சோதித்துப் பார்த்தும் சாத்திரம் வகுத்தல்; குழந்தைகளையும் வாலிபர்களையும் தம் பாதுகாப்பில் வைத்திருக்கும்பெற்

ஞேர்கள், உபாத்திமார்கள், நர்சுகள், இளைஞர், தலைவர்கள், சிறுவர்களை வேலையில் அமர்த்தும் முதலாளி — ஆகியோரிடையே உடல் நலம் மன நலத்திற்குரிய தத்துவங்களையும் பழக்கங்களையும் அறிவுறுத்துதல் — இவை அயல் நாடுகளில் காணப்படும் முன்னேற்றங்களுள் சில.

மேலும் தாமதம் செய்யாமல், பள்ளிக்கூடம் செல்லும் குழந்தைகளின் உடல் நல அபிவிருத்திக்கான வேலையில் முனைய வேண்டும். நம் குழந்தைகள் ஆரோக்கியமாகவும் புத்திசாலிகளாயும் இருக்கக் காண நாம் மகிழ்கிறோம். அன்றியும், விரிவான தேசிய நோக்குடனும் பார்க்கவேண்டும். "ஒரு நாட்டில் மக்கள் சுறுசுறுப்பாகவும், புத்திசாலிகளாகவும், உயரிய கல்வி பயின்றவராகவும் இருக்க வேண்டுமானால், அவர்களின் உடல் நலமே உறுதியான அஸ்திவாரம். குழந்தைப் பருவத்திலேயே அந்த அஸ்திவாரத்தைப் போடாவிடின், அதை வேறு எப்போதுமே போட முடியாது."

- டைம்ஸ் கல்வி அனுபந்தம்.

திறமை வாய்ந்த பள்ளிக்கூட வைத்திய சர்விஸ் வேண்டும். அதுவே குழந்தைகளினுடையவும் மக்களுடையவும் உடல் நலத்திற்கு உத்தரவாதமாக நிற்கும்.

நிஜகல்லின் ராணி

மூல ஆசிரியர்: மாஸ்தி வெங்கடேச அய்யங்கார்

மொழிபெயர்ப்பு: ஜெயலக்ஷ்மி ஸ்ரீநிவாசன்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

சத்துரு எவ்வளவு நாளைக்கு இப்படி ஊர் முன்னால் பாளையம் போட்டுத் தங்கி இருப்பானோ? வெளியே செல்வதற்குமில்லாமல் உள்ளே வருவதற்குமில்லாமல் நாட்கள் வருஷமாய்க் கொண்டு வருகிறதே என்று குடிகள் சிந்தித்துக் கொண்டிருந்தனர். கஸ்தூரி கோட்டைக் கதவருகில் அன்றிரவு தன் பக்கத்துப் பாராக்காரர்களை ஏற்பாடு செய்திருந்தான். ஊரில் நிசப்தம் குடி கொண்ட பிறகு கோட்டை வாயிலைத் திறந்து சத்துருக்களை ஊரினுள் விட்டான். சத்துரு சைனியம் சப்தம் செய்யாமல் ஊரினுள் வந்து முக்கியமான இடங்களை ஆக்கிரமித்துக் கொண்டது. கடைசியில் சைனியத்தில் கொஞ்சம் பாகம் அரண்மனையின் முன்னால் ஜயகோஷம் செய்து கொண்டு உள்ளே நுழைந்தது.

என்ன நடந்ததென்று தெரியாமல் ராமரசன் வாளை ஏந்தி, வெளியே வந்தான். பாராக்காரர்கள் ஈட்டி, வேல்களைப் பிடித்து நின்றனர். பகைவர்கள் எல்லாத் திக்கிலும் நுழைந்து கொண்டிருந்தனர். கூட்டத்தில் கஸ்தூரியைக் கண்டு ராமரசன், "என்ன வாயிற்று, கஸ்தூரி? நமது படைகள் எங்கே, ஜனங்களைக் கூப்பிடு" என்றான் பதட்டத்துடன்.

கஸ்தூரி புன் சிரிப்புடன் ராமரசனைச் சுட்டிக்காட்டி, மராட்டியரிடம், "இதோ சிங்கம்; பிடித்துக் கொள்ளுங்கள்" என்றான். மேலே வந்து வீழ்ந்த மராட்டியரைக் கண்டு ராமரசன் கலங்காமல், தன் வாளைச் சுழற்றிச் சுழற்றி அரை நாழிகை போராடினான். ஆனால் அவன் ஒருவன். மேலே வீழ்ந்தவர்கள் பலர் அவர்களில் ஒருவன் வாளால் ராமரசனைக் குத்தினான். குத்து மார்பருகில் படவே ராமரசன் சுருண்டு கீழே விழுந்து விட்டான். பகைவர்கள் முன்னேறினர். ராமரசனை வேலையாட்கள் ஒருபுறமாகத் தூக்கிச் சென்றனர்.

கோட்டை மராட்டியர்கள் வசமாயிற்று. அரண்மனையில் எல்லோரும் விழித்துக் கொண்டனர். திக்கு திசை தோன்றாமல் அங்கங்கே திகைத்து நின்றனர் பலர். நாலாபுரமும் ஓடினர் சிலர். 'கஸ்தூரி நாயகன் நிஜகல்லை மராட்டியருக்குக் காட்டிக்கொடுத்து விட்டான்' என்ற செய்தி ஊரெங்கும் பரவிற்று. கிரிஜவ்வை தன் தம்பியால் எத்தகைய விபரீதம் உண்டாயிற்று என்று மிகவும் வருந்தினாள். லகுமவ்வை "என்ன செய்வது, என்ன செய்யலாம்? இப்போ பகைவர்கள் இங்கு நின்றும் புறப்பட்டுச் சென்றால்

கப்பம் கொடுப்போம் என்று சொல்லலாமா'' என்று பிரதானிகளுடன் அவசரமாகக் கலந்து யோசனை செய்தாள். "பொக்கிஷமே அவர்கள் கையுக்குக் கிடைத்திருக்கும் பொழுது கப்பம் கொடுப்பதென்ன'' என்றூர்கள் சிலர். இதற்குள் பொழுது புலர்ந்தது. ஊர் முழுவதும் ஒரே கலவரம்! அரண்மனைக்கு எடுத்துச் செல்லப்பட்ட ராமரசனின் உயிர் சற்றுநேரத்திற்கெல்லாம் பிரிந்தது.

மராட்டியரின் தளபதி, கோட்டை முழுவதிலும் தன் வகையினரைக் காவல் வைத்து, ஊரில் எல்லோரும் அறியும்படி "நிஜகல்லை மராட்டியர்களாகிய நாங்கள் பிடித்துவிட்டோம். ஜனங்கள் யாரும் பயப்பட வேண்டியதில்லை, ராமரசனுக்கு பதிலாக இன்னொரு பாளையக்காரனை நியமிக்கிறோம். உங்கள் ஆஸ்தி பாஸ்தி முதலானவைகள் உங்களிடமே இருக்கும். குடிகள் ஊரைவிட்டு வேறு இடங்களுக்கு எந்தக் காரணத்தைக் கொண்டும் போகக்கூடாது'' என்று டமாரம் அடிக்க வைத்தான்.

ராமரசனின் உயிர்போய் விடுமென்பது அவனுக்கு முன்பே தெரியும். ராமரசன் இறந்தவுடன் தனக்குத் தெரிவிக்க வேண்டுமென்று அவன் சொல்லியிருந்தான். செய்தி வந்ததும் அவன் கஸ்தூரி நாயகனுடன் அரண்மனைக்குச் சென்று ராமரசனின் சவ அடக்கத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளனைத்தையும் செய்விக்கிறோம் என்று தைரியம் கூறினன். லகுமவ்வை தன் பதட்டத்தைக் காட்டிக் கொள்ளாமல் நிதானமாக "ஊரை ஜயித்த பிறகு நீங்கள் தான் கர்த்தாக்கள். எல்லாம் சரியாக நடத்துவதற்கு நீங்கள்தான் உரிமையுடையவர்கள்'' என்று சொல்லி, மராட்டியர்கள் கருணை கூர்ந்து நாயகனின் மகனை சிம்மாதனமேற்றி அவனைத் தங்களுடைய சிற்றரசனுகப் பாவிக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டாள்.

அரண்மனையில் அரசனின் சவத்தின் அருகில் நடந்த இந்தப் பேச்சு வார்த்தைகளையெல்லாம் கிரிஜவ்வையும் அவ்விடத்திலிருந்தே கேட்டுக் கொண்டிருந்தாள். அவளுக்கு அரசன் மரணமடைந்தான் என்பது ஒன்றுதான் தெரியுமே தவிர மற்ற எதுவும் அவளுக்கு வேண்டியிருக்க வில்லை. தன்மகன் பாளையக்காரன் ஆவதோ, அல்லது வேறு யாராகிலும் ஆவதோ, என்பதைப்பற்றி அவள் கவலைப்படவில்லை. இத்தகைய வார்த்தைகளுக்கெல்லாம் அது சமயமில்லை யென்று அவளுக்குத் தோன்றிற்று. இங்கே அரசன் செத்து கிடக்கையில், நன்ருக உயிர் போவதற்குள்ளாகவே குழந்தையின் பட்டத்தைப் பற்றிய பேச்சென்ன? கஸ்தூரி நாயகன் மராட்டியருடன் சேர்ந்து கொண்டு, உண்ட வீட்டிற்கு இரண்டகம் நினைத்தானே என்று மனம் உருகினள். அவன் வந்து அருகில் நிற்கையில் அவன் பக்கம் பார்க்கவே இல்லை. கஸ்தூரியும் தலை கவிழ்ந்தவாறு நின்றிருந்தான். தளபதி இதையெல்லாம் பார்த்தான். அவனுக்கு லகுமவ்வையின் தைரியம், கிரிஜவ்வையின் பதிவிரதாத்தன்மை, இவ்விரண்டிலும் ஒன்றைவிட ஒன்று சிலாக்கியமானதென்று புலப்பட்டது. கிரிஜவ்வை வெகு அழகி. அவளைத் தான் தன் வசப்படுத்திக்கொள்ள வேண்டுமென்று அவனுக்கு மனதினுள் ஆசை உதித்தது.

அரசனின் உத்தர கிரியைகளுக்கு எல்லா ஏற்பாடும் ஆயிற்று. லகுமவ்வை, தான் உடன்கட்டை ஏறுவதாகத் தெரிவித்தாள். கிரிஜவ்வை "நீங்கள் வீட்டிற்கு பெரியவர்கள்; குழந்தையை வளர்த்து சிம்மாதனத்தில் அமர்த்தவேண்டும். அது உங்களால்தான் ஆகுமேதவிர என்னுல் ஆகுமா? நீங்கள்தான்சரி. நான் உடன்கட்டை ஏறுகிறேன்" என்ருள். தான் மூத்தவள், உடன் கட்டை ஏறும் அதிகாரம் தன்னுடையது தான். என்று லகுமவ்வைக்கும், வீட்டிற்குப் பெரியவள், இருக்க வேண்டும்; நான் போய் விடுகிறேன் என்று கிரிஜவ்வைக்கும் வாக்குவாதம் நடந்தது. கடைசியில் கிரிஜவ்வை உங்கள் இஷ்டம் நீங்கள் உயிருடன் இருந்தால் நானும் உயிருடன் இருந்தாலும் இருப்பேன். நீங்கள் போவதாக விருந்தால் நான் போவதும் நிச்சயம் என்ருள். இதற்குள் ஊரின் முக்கியஸ்தர்கள் சிலர் வந்து யாரும் உடன்கட்டை ஏறப்படாது, பையனைப் பெரியவனுக்குவதற்கு இருவரும் இருக்கவேண்டுமென்று வேண்டிக்கொண்டனர். மராட்டியர்களின் தளபதியும் இதை ஆமோதித்து வேண்டிக்கொண்டான். உடன் கட்டை எனும் பேச்சு நின்று விட்டது. செய்ய வேண்டிய கர்ம காரியங்கள் முறைப்படி நடந்து விட்டன.

மூன்று நாள் கழிந்தது. இதன் நடுவில் கஸ்தூரிக்கும் தளபதிக்கும் மேலே நடக்கவேண்டிய ஏற்பாட்டின் விஷயத்தில் மனத்தாங்கல் ஏற்பட்டது. தளபதி, நாயகனின் புதல்வனை சிம்மாதனத்தில் இருத்தி லகுமவ்வையையும் கஸ்தூரியையும் அவனுடைய பாதுகாப்பிற்காக இருத்துவதாகவும் கிரிஜவ்வையைத் தான் அழைத்துச் செல்வதாகவும் சொன்னுன். கஸ்தூரி தான் தான் சிம்மாதனத்தில் அமர வேண்டுமென்றும், தன் மருமகன் தனக்குப் பிறகு சிம்மாதனம் ஏற வேண்டுமென்றும் கிரிஜவ்வை மனமுவந்து அவனை ஏற்றுக் கொண்டால் மட்டுமே அவளைத் தளபதி அழைத்துச் செல்லலாம் என்றும் சொன்னுன். சிம்மாதனத்தில் யார் அமர்வது என்னும் விஷயமாக ஒருவர் பேச்சை ஒருவர் ஏற்றுக் கொள்ள வில்லை. கஸ்தூரி, தளபதிக்கு அவன் தனக்குக் கொடுத்த வாக்கை நினைவூட்டினுன். தளபதி அதற்கு "நாயகனுக்கு ஒரு பிள்ளை இருப்பதாக நீ எனக்குச் சொல்லவில்லை." என்ருன். தளபதியின் நடத்தைக்கு இதுகாரணமா, அல்லது தான் கிரிஜவ்வை பிள்ளையின் சார்பில் பரிந்து சொன்னுல் கிரிஜவ்வையை வசப்படுத்திக் கொள்வது சுலபம் என்பது காரணமா என்று சொல்ல முடியாது. இதனுல் இவர்கள் இருவரிடையிலும் வாக்கு வாதம் ஏற்பட்டது. கடைசியில் தளபதி இந்த விவாதத்தை ஒரு முடிவுக்குக் கொண்டுவர ராணிமார் இருவரையும் கூப்பிட்டனுப்பினுன். இருவரும் தனித்தனியாக வரவேண்டுமென்றும், தான் எவ்விதத்திலும் அவர்களைத் தொந்திரவு செய்வதில்லை யென்றும், தன்னுடன் கூட கஸ்தூரி நாயகன் இருக்கிருனென்றும் தெரிவித்தான். மூத்த ராணி வந்தபொழுது யாரை நாயகனுகச் செய்வதென்று அவளுடன் விவாதம் செய்து, அதன் பிறகு இளையராணியை கூப்பிட்டனுப்பினுன். கிரிஜவ்வை யிடத்திலும் மூத்தவளிடம் கேட்ட அதே வார்த்தைகளைக் கேட்டான்.

அவள் "எங்கள் மூத்தராணியைக் கேட்ட பிறகு என்னைக் கேட்க

வேண்டியதில்லே. அவர் சொன்ன படி செய்யுங்கள்'' என்ருள். தள பதி கொஞ்சநேரம் அக்கப்போர் அளந்து விட்டு கடைசியில் கிரி ஜவ்வை தன் வசப்பட வேண்டு மென்று சொன்ஞன்.

கிரிஜவ்வை அது வரையில் தலே கவிழ்ந்தபடி பேசிக் கொண்டிருந் தவள் அவனேயும், கஸ்தூரியையும் நன்ருக ஏறிட்டுப்பார்த்து "இவன் இதற்கும் ஒத்துக் கொண்டிருக்கி

றானா?'' என்று கேட்டாள். தளபதி "ஒத்துக்கொண்டிருக்கிறார்'' என்றான். அவள் தளபதியைக் கல்யாணம் செய்துக் கொள்வதற்குத் தான் ஒத்துக் கொண்டால் தளபதி தான் நாயகனாவதற்கு உதவி புரிவானென்று கஸ்தூரிக்கு எண்ணம் தவிர அவள் தளபதியுடன் புறப்பட்டுச் செல்வதானால் குழந்தை அவ்விடத்தில் இருக்க முடியாது. அப்பொழுது பெயருக்கு மாத்திரம் குழந்தை நாயகனாலும் தான் நாயகனாவதற்கு அனுகூலம்.

தன் தம்பி இதற்கு இணங்கினான் என்று கேட்டு, கிரிஜவ்வை ஒரு நிமிஷம் யோசித்து, ''நீங்கள் என் மீது கொண்டிருக்கும் கருணைக்கு நான் தகுதியுடையவளல்ல. ஆனால் இப்பொழுது நான் இருக்கும் நிலைமையில் அதை வேண்டாமென்று சொல்வதும் தரமல்ல'' என்றாள்.

கஸ்தூரியும் தளபதியும் கிரிஜவ்வை இவ்வளவு சுலபமாக இசைந்து விட்டது பற்றி ஆச்சர்யப் பட்டார்கள். அவர்களுக்கு ரொம்ப சந்தோஷ மாகிவிட்டது. ''நான் சீக்கிரம் திரும்பிப் போக வேண்டி யிருக்கிறது. சாத்தியமானால் இரண்டு மூன்று நாட்களுக்குள் எல்லாம் ஏற்பாடாக வேண்டும்.'' என்றான் தளபதி. ''உத்திரவுபடி'' என்று சொல்லி விட்டு கிரிஜவ்வை அந்தப் புரத்திற்குத் திரும்பினாள்.

மறுநாள் தான் தளபதியைக் கலியாணம் செய்து கொள்வதாக

வும், தன் தம்பி கஸ்தூரி நாயகன் தற்சமயத்திற்கு நாயகன் ஆவது தனக்கு விருப்பமென்றும், தன் கலியாணத்தன்றைக்கே கஸ்தூரிக்கு பட்டாபிஷேக வைபவம் நடக்க வேண்டுமென்றும் சொல்லி அனுப்பி விட்டு அதே வார்த்தையை மூத்த ராணி லகுமவ்வைக்கும் தெரிவித்தாள். லகுமவ்வைக்கு ஒன்றும் புரியவில்லை. அவள் கிரிஜவ்வையை பார்க்க வந்தாள். என்ன காரணத்தினலோ கிரிஜவ்வை அவளைப் பார்க்க முடியாது என்று சொல்லி மறுத்து விட்டாள்.

இச்செய்தி ஊர்முழுவதும் பரவி ஏக அமக்களமுன்டாக்கியது. ஆனல் யார் என்ன செய்ய முடியும்? தளபதியின் விருப்பத்திற்கு மாருகச் சொல்பவர்கள் இல்லை. கர்ம சடங்குகளெல்லாம் நடைபெற்ற ஐந்து நாட்களுக்குப் பிறகு திருமணம் நடத்த நாள் குறிக்கப்பட்டிருந்தது. அதற்கு முதல்நாள் தானும் தன் தம்பியும் ஊர்க்குடிகளனைவருக்கும் புலப்படும்படி மதில்ச் சுவர்மீது ஊர்ச்சுற்றிலும் ஊர்வலம் செய்ய வேண்டுமென்றும் அதற்குப் பிறகுதான் கல்யாணம் செய்துக்கொள்வது கஸ்தூரி சிம்மாதனம் ஏறுவதென்றும் சொல்லி அனுப்பினுள். அவள் வேண்டுமென்று சொல்வதை யாரும் வேண்டாமென்று சொல்ல முடியுமா? அவள் விருப்பம்போல் எல்லாம் சித்தமாயிற்று.

மறுநாள் கிரிஜவ்வை விடியற்காலம் எழுந்து குளித்து, சுவாமி பூஜையை முடித்துக்கொண்டு குழந்தையை எடுத்துக் கொண்டு லகுமவ்வையிடம் வந்து "இது என் தலைஎழுத்து. இன்று முதல் இந்தக் குழந்தை என்னுடையதல்ல, உங்களுடையது. இதைக் காப்பாற்றும் பொறுப்பு உங்களுடையது. என்னை ஆசீர்வதியுங்கள்" என்று கண்ணீர் சொறிந்தாள்.

"இப்பொழுதுகூட என்ன, உனக்கு இஷ்டம் இல்லாவிட்டால் முடியாது என்று சொல்லிவிடேன்" என்ருள் லகுமவ்வை.

"சொன்னது சொல்லியாகி விட்டது; இன்னும் அந்தப் பேச்சு வேண்டாம். இனி என் வழி வேறு." என்று சொல்லி விட்டு அரண்மனையிலிருந்து புறப்பட்டாள் கிரிஜவ்வை.

வாயிற்புரம் ஊர் கோலத்திற்கு வேண்டிய ஏற்பாடெல்லாம் பலமாக ஆகியிருந்தது. கிரிஜவ்வை சுமங்கலியைப்போல் அலங்காரம் செய்து கொண்டிருந்தாள். ஜனங்களெல்லாம் இதைப்பார்த்துப் பரிகாசம் செய்தார்கள். அவள் கஸ்தூரியிடம் "நீ அப்புரமாகச் சுற்றிக்கொண்டுவா. நான் இந்தப் பக்கத்திலிருந்து வருகிறேன். மதிலின் அருகில் இருவரும் சந்திப்போம்" என்ருள். கஸ்தூரி சம்மதித்துச் சென்ருன். அதன்படி உத்ஸவம் கிளம்பிற்று.

நிஜகல்லின் கோட்டை ரொம்ப அழகான கோட்டை. பயங்கரமான பாறையின்மீது பகைவர்களை அலக்ஷியம் செய்வதுபோன்ற மதிற் சுவர்கள். ஒரே புரம்தான் கதவு. கதவின் எதிர்ப்புரம் மதிற் சுவரின் மற்ருெரு பக்கத்தின் பாதியில் ஒரு மதில். அதிலிருந்து ஊருக்குள் இறங்குவதற்கு சொகுசான படிக்கட்டுகள். அங்கிருந்து பார்த்தால் நான்கைந்து மைல் தூரம்வரை இருக்கும் கிராமம் கோயில் குளம் முதலியவைகளெல்லாம் ஓவியத்தில் வரைந்த மாதிரி தென்படும். அந்தப்புரம் பாறையானது கோட்டை மதிற்

சுவரின் கீழே முன்னுக்குச் சரிந்து சாய்வாய் பீடம்போல் இருந்தது. பீடத்தின் மீது கோட்டைச் சுவர் ஏழு ஆள் உயரம். அந்தப் பாறைக்கும் அப்புரத்தில் அந்தப் பீடம் விலாசமாகவும். அழகாகவும் மன்னர்கள் அமரும் சிம்மாதனத்தைப்போல் இருந்ததால் அதற்கு சிம்மாதனப்பாறைஎன்று ஜனங்கள் பெயர் வைத்திருந்தார்கள்.

கஸ்தூரி ஒருபுரமிருந்தும் தான் மற்றொரு புரமிருந்தும் மதிற்படிக் கட்டினருகில் வருவதென்று ஏற்பாடு செய்து கிரிஜவ்வை ஒரு தோழியை அழைத்து, "இன்று என் தம்பிக்கு ஆரத்தி எடுக்க வேண்டும். ஒரு தட்டில் ஆரத்தி கொண்டுவாருங்கள்." என்று சொல்லிவிட்டு, கோட்டைச்சுவர் மீது புறப்பட்டாள். ஊர் ஜனங்கள் எல்லாம் "இந்தமாதிரி விசித்திரமுண்டா? இவள் செகுசென்ன, இந்த ஆரத்தி எதற்கு"? என்று வியந்து, கோட்டையின் இருபுரமிருந்தும் வந்துகொண்டிருந்த ஊர்வலக் கூட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

ஒரு நாழிகைக்குள் இரண்டு கூட்டமும் சிம்மாதனப் பாறையின் அருகில் வந்தன. கிரிஜவ்வை அரை நிமிஷம் முன்னதாக வந்திருந்து, தோழியின் கையிலிருந்து ஆரத்தித் தட்டை எடுத்து கொண்டு பேசாமல் கஸ்தூரியின் அருகில் வந்தாள். இருவரும் மதிலின் நடுவில் நின்றார்கள். கிரிஜவ்வை என்றைக்கும் போல் கம்பீர தோற்றத்துடன் தம்பிக்கு ஆரத்தி எடுத்தபின் தட்டை தோழியிடம் கொடுத்துவிட்டு, புன் முறுவலுடன் தம்பியை நோக்கி மென்மையான குரலில், "கஸ்தூரி, உன்னால்தான் எனக்கு இந்தப் பதவி கிடைத்தது. உன்னை நான் மறக்க முடியாது. உனக்கும் சிம்மாதனத்தின்மீது ஆசை" என்று சொல்லி மறுக்ஷணமே கொடூரத்தொனியில் "என்னாலும் உன்னாலும் ராமரசனின் வீடு பாழாயிற்று. நம்மைப் பெற்றவர்களுக்கும் அபகீர்த்தி வந்தது. கஸ்தூரி, நாம் இருவரும் பிழைத்திருக்கக் கூடாது" என்று சொல்லி, அவனை இறுகத் தழுவிக் கொண்டு மதிற் சுவரின் வெளியே குதித்து விட்டாள்.

ஜனங்கள் "ஹா" என்பதற்குள்ளாக தமக்கையும், தம்பியும் சிம்மாதனப் பாறையை நெருங்கி விட்டனர். அவ்வளவு உயரத்திலிருந்து பாறையின் மீது விழுந்தவர்கள் பிழைப்பதேது? மறுக்ஷணத்தில் அவ்விருவருடைய உடல்களும் உயிரின்றிப் பாறையிலிருந்து கீழே உருண்டன.

கிரிஜவ்வையின் புதல்வனை நிஜகல்லிற்கு நாயகனைச் செய்தார்கள். லகுமவ்வை அவன் மராட்டியர்களின் சிற்றரசனாக இருப்பானென்றுவாக்களித்து, ராஜ்யத்தை ஊரின் முக்கியஸ்தர்களின் உதவியைக் கொண்டு நடத்த ஆரம்பித்தாள். ஊருக்கு ஊழி போல்வந்த கஸ்தூரியை அழித்த ராணி கிரிஜவ்வையை ஜனங்கள் நன்றி யறிதலுடன் நினைத்து நினைத்து பலவருஷகாலம் ஊரின் தேவியென்று பூஜித்து, அவள் பெயரில் வருஷந்தோரும் விழாக் கொண்டாடினார்கள். சமீபகாலமாய் அந்த விழா நடப்பதில்லை. ஊர் பாளையக்காரர்களை மறந்து விட்டது! ஆனால் நிஜகல்லிற்குச் சென்றவர்களுக்கு ஊர் ஜனங்கள் இக்கதையைச் சொல்வார்கள். இன்னும், அந்த வீர ரமணியின் உன்னத தியாகத்தினல் பரிசுத்தமான அந்தப் பாராங்கல்லையும் காண்பிப்பார்கள்.

செஞ்சீனா

மு.ரா.மு. அப்துறஹீம்

கரடு முரடான மலைப்பிராந்தியம்; அங்குமிங்கும் குன்றுகள்; அதற்கிடையே பெகோடா கோபுரம். கம்பளி உடையணிந்து மக்கள் ஆங்காங்கு நடமாடுகின்றனர். ஆனால் அவர்களுடைய நடையிலே ஒரு மிடுக்கு; பேச்சிலே ஒரு சக்தி பரிணமிக்கின்றது. ஒவ்வொரு மூச்சும் எதிரியை விரட்டுவோம்; எம் நாட்டு சுதந்திரத்தை மீட்டுவோம் என்று அனற்பொறி போன்று வேகத்துடன் வெளிவந்து கொண்டிருக்கின்றது. இதுவே சீனக் கம்யூனிஸ்ட்களின் தலை நகரான ஏனான் நமக்குத் தரும் காக்ஷி.

ஏனான் ஜப்பானிய ஆக்கிரமிப்புப் பிரதேசத்தைப் பார்ப்பதற்கு ஒரு திறந்த சாளரம் போன்றது. அங்கிருந்து பார்த்தால் ஜப்பானியர் ஆக்கிரமித்த சீனப் பிரதேசங்கள் நம் கண்முன் தோற்ற மளிக்கின்றன. ஏனான் 40,000 ஜனத்தொகையுடையது. அதில் 12,000 பேர் சென்ஸி மாகாணத்தார். மீதியுள்ள 28,000 மக்களும் கம்யூனிஸ்ட் கட்சியின் மூளையும் ஹிருதயமும் ஆவர். அவர்கள் தான் ஜப்பானை எதிர்த்து நடத்தும் கம்யூனிஸ்ட் கொரில்லாப்போரின் கண்களும் கைகளும் ஆவர். அங்கிருந்துதான் கம்யூனிஸ்ட் கிளைகளுக்கு ஆக்ஞைகள் பிறக்கின்றன. அவைகளைக் கொண்டு செல்லும் தூதுவன் டெலிபோன். ஒவ்வொரு நகரிலும் கட்சியின் கிளை ஸ்தாபனங்கள் காக்ஷியளிக்கின்றன. அவைகளின் ஜீவநாடி சீனப் பாட்டாளி மக்கள். கட்சியின் கட்டிடமோ வெகு சாதாரணமானது. கட்சிக்கு ஒரு முகாம்; சேனைக்கு மற்றொன்று. ஆனால் இரண்டும் ஒன்று. பிரிவிலே ஒற்றுமை. குன்றின் அடிவாரத்தில் வீற்றிருக்கும் வனப்பு மிகுந்த பூங்காவில் அமைக்கப் பெற்றிருக்கின்றது சேனாமுகாம். அதற்கு மூன்று மைலுக்கப்பால் நதியின் பசுமை நிறைந்த தீரத்திலே கம்பீரமாக நிமிர்ந்து நிற்பது கட்சியின் தலைமை ஸ்தானம். இவைகள் இரண்டிலிருந்தும்தான் குன்றுகளில் வாசஞ் செய்யும் கொரில்லாக்களுக்கும் ஜப்பானியர் ஆக்கிரமித்த நாடுகளில் பாதாளத்தில் வாழ்க்கை நடத்தும் கம்யூனிஸ்ட் வீரர்களுக்கும் ஆக்ஞைகள் அடிக்கடி பிறப்பிக்கப்படுகின்றன. அங்கிருந்து இரத்தக் குழாய்கள் போன்ற டெலிபோன் கம்பிகளின் மூலம் சீனப் பெருந்தேசம் முழுதும் வீரஜீவன் பாய்கின்றது.

எட்டாண்டுகளுக்கு முன்பிருந்த சீனா வேறு; இப்பொழுதுள்ள சீனா வேறு. 1937-ம் ஆண்டில் பார்த்தோமேயானால் சீனா ஒரு அரசியல் சூனியம். நாகரிகம் என்றால் நகரிலேதான் காணலாம். குடியானவர்களை முத

லாளி வர்க்கத்தினர் நடத்தியதோ சொல்லுந்தரமன்று. குடியான வர்களும் தாங்கள் பணக்காரர் களுக்கு அடிமை ஊழியம் செய் வதற்காகவே பிறந்ததாகக் கருதி னர். விதி விதி என்று தங்கள் விதிமேல் பழிசுமத்தினர். போதாக் குறைக்கு கக்ஷிப் பிணக்குகளும் ஜாதிப் பூசல்களும் சீன சமுதா யத்தை உள்ளூர அரித்து வந்தன. சீனாவின் ஜீவன் வெறும் முற் கூட்டை மட்டும் விட்டு விட்டு, பிரிந்து செல்லும் தருவாயிலிருந் தது. அப்பொழுது நவஜீவனை சீன உடலிலே புகுத்தியவர்கள் வீரக் கம்யூனிஸ்டுகள். அவர்களுடைய பொறுப்போ இருவகைப் பட்டது இறக்கும் தருவாயிலிருக்கும் சீன உடலில் நவஜீவனைப் புகுத்த வேண்டியது ஒன்று. சீனாவின் உயிரை வாங்குவதற்காக வந்து கொண்டிருக்கும் ஜப்பானிய எமனை விரட்டியடிப்பது மற் றொன்று. இரண்டும் மகத்தானது.

சீனா பிழைக்க வேண்டுமானால் இரண்டையும் ஒரே சமயத்தில் செய்தல் வேண்டும். இது சாத்தி யமா? சாத்தியம்தான்; சாதித்தே தீருவோம் என்ற வீர முழக்கத் துடன், தன் தாய் நாட்டுப் பணி யில் தீவிரமாக இறங்கினர் சீனக் கம்யூனிஸ்ட்கள். சகோதரனை சகோதரனே எதிர்க்கும் சக்தியை எதிரியை எதிர்த்து விரட்டுவதற்கு உபயோகிக்கலாகாதா என்னும் அவர்களின் உள்ளத்திலிருந்து கொதித்தெழுந்த வீர முழக்கம், பிறர் உள்ளத்தையும் அப்படியே கைப்பற்றியது. சீனக் குடியான வர்களின் மகத்தான சக்தி கம் யூனிஸ்ட்கள் வசமானது. மக் களின் உள்ளத்தைக் கைப்பற்றி யாகிவிட்டது. இனி எதிரி ஆக்ர மித்த பாகங்களைக் கைப்பற்ற வேண்டியதுதான் பாக்கி. அதற் காக சீனக் குடியானவர்கள் வெகு வேகமாக கம்யூனிஸ்ட் படையில் அணியணியாக வந்து சேர்ந்து கொண்டிருக்கின்றனர்.

ஒரு போர்க்களத்தில் 50,000 பயிற்சி மிக்க படைகளை ஒரே சம யத்தில் கொணர்ந்து போர் நட த்தும் பேராற்றலும் பெற்று விட் டனர் சீனக் கம்யூனிஸ்ட்கள். சில இடங்களில் 200 மைல் சுற் றளவுள்ள பிராந்தியங்களில் எதிரி காலெடுத்து வைக்க முடியாது. அங்கெல்லாம் கம்யூனிஸ்ட் ஆட்சி.

சீனக் கம்யூனிஸ்ட்களை சீனர் கள் வெகுவாக விரும்புகின்றனர். சீனக் குடியானவர்களின் ஆதரவு கம்யூனிஸ்டுகளுக்குத்தான். கார ணம், அவர்கள் சீனக் குடியான வர்களுக்கு எவ்வளவோ நலம் புரிந்திருக்கின்றனர். அரசியல், பொருளாதார விஷயங்களை சீர் திருத்தியமைப்பதற்காக வேண்டி கம்யூனிஸ்ட் கட்சியிலே ஒரு கிளைச் சபையுண்டு. அதிலே அறிஞர் களும், இளம் கலாசாலை மாண வர்களும் தாங்களாகவே முன் வந்து பங்கெடுத்திருக்கின்றனர். 'நீங்களே உங்கள் சர்க்காரைத் தேர்ந்தெடுங்கள்' என்பதே அவர் கள் சீனமக்களுக்கு அளிக்கும் ஹிதோபதேசம். நிலத்திற்கு வரி யும் குறைக்கப் பெற்றது. வட்டி யானது 40 சத விகிதத்திலிருந்து 20 சத விகிதத்திற்கு இறக்கப் பெற்றது. வரிகள் குடியானவர் களால் சரியாகத் தரப்படும். இல்லையேல் நாங்கள் பொறுப் பாளி என்று நிலச்சுவான்தார் களுக்கு கம்யூனிஸ்ட்களால் வாக் குறுதி யளிக்கப் பெற்று அவர் களும் திருப்திபடுத்தப்பட்டார் கள். இவ்விதமாயின் சீனக் கம் யூனிஸ்ட்டுகளுக்கு மக்கள் அளிக் கும் ஆதரவைக் கேட்கவும் வேண்



டுமா? எனவே மாபெரும் ஜன சக்தியாக ஜப்பானை எதிர்த்து நிற்கின்றனர் கம்யூனிஸ்ட்கள். சீன ஜனசக்தியின் முன் சிறிய ஜப்பான் எம்மாத்திரம்?

கம்யூனிஸ்ட்கள் ஜப்பானியருக்கு இழைத்து வரும் துன்பங்களோ கொஞ்ச நஞ்சமன்று. கம்யூனிஸ்ட்டுகள் என்றாலே ஜப்பானியருக்கு மனதிலே ஒரு திகில். கம்யூனிஸ்டுகள் தங்கள்பால் காட்டிவரும் இரக்கமற்ற எதிர்ப்பை சமாளிக்க தெருக்களிலே பதுங்கும் குழிகளை வைத்திருக்கின்றனர் ஜப்பானியர். தாங்கள் ஆக்கிரமித்த பிரதேசங்கள் எங்கணும் பாரா நடவடிக்கை. பாலங்களெல்லாம் வெகு பத்திரமாகப் பாதுகாக்கப்படுகின்றன. டெலிபோன் கம்பங்களெல்லாம் காங்க்ரீட் மயம். காரணம், பதுங்கித்தாக்கும் கம்யூனிஸ்ட்களின் மகத்தான மனோவேகத்தின் முன் ஜப்பானிய ஆயுத பலம் துவம்சமாகின்றது.

சீனக் கம்யூனிஸ்ட் போரின் முறையே ஒரு புது மாதிரி. அவர்களிடம் ஆயுதமோ வெகு குறைவு. 'என் செய்வது நாம் போரிட' என்று அவர்கள் தயங்கவில்லை. நெஞ்சில் வீரவேகம் இருக்கும் பொழுது காரியம் கைகூடுவதற்கு என்ன தடை? கோயில்களிலுள்ள பழம் பெரும் மணிகளெல்லாம் யுத்த சகாயத்திற்காக சர்க்கார் வெடி மருந்துக் கிடங்குகளில் கொண்டு வந்து குவிக்கப் பெறுகின்றன. கொரில்லா சர்க்காரால் தயாரிக்கப் பெற்ற நாட்டு வெடி மருந்து அவைகளில் திணிக்கப் பெற்று சுரங்க வெடிக்குப் பதிலாக அவைகள் உபயோகிக்கப் பெறுகின்றன. களிமண்ணினாலும், மரத்தினாலும் இன்னும் கற்களினாலும் சுரங்க வெடிகள் தயார் செய்யப் பெற்று ஜப்பானியர் முன்னேறும் பாதைகளில் மறைத்து வைக்கப் பெறுகின்றன்.

வெளி உலக உதவியை வெகு குறைவாகப் பெற்றுவரும் ஏழை நாடான சீனா இவைகளையெல்லாம் தானாகவே செய்கின்றதென்றால் அது நமக்கு ஆச்சரியத்தை விளைவிக்கவில்லையா? கம்யூனிஸ்ட் "சுரங்க வீரர்கள்" செய்யும் சாகசச் செயல்கள் பத்திரிகைகளில் கொட்டை எழுத்துக்களில் பொறிக்கப் படுகின்றன. இரண்டு வருடங்களுக்கு முன்தான் சீனக் குடியானவர்களுக்கு சுரங்க வெடி வைக்கும் முறை பயிற்றப் பட்டது. இக்குறுகிய கால அளவில் அவர்கள் அதில் தேர்ந்து இயற்றும் போராற்றலைக் கண்டு உலகம் பிரமிக்கின்றது. ஆதலின்

சிரம் பணியாது போர் இயற்றும் அவர்களை "சுரங்க வீரர்கள்" என்று உலகம் அழைப்பது பொருத்தமாயிருக்கின்றதல்லவா?

சீனக் கம்யூனிஸ்ட்கள் 400 க்கு அதிகமான வீரர்களைக்கொண்ட சிறுசிறு கூட்டங்களாக ஜப்பானியரை எதிர்த்து நிற்கின்றனர். அவர்கள் போரிடுவதெல்லாம் குறிப்பிட்ட சில சந்தர்ப்பங்களில் தான். ஆயுதக் குறைவுதான் அவர்களின் இவ்விநோதப் போர் முறைக்குக்காரணம். அவர்களைப் போரிடச் செய்வது மூன்று சந்தர்ப்பங்கள். போரில் செலவாகும் ஆயுதங்கள் வெடிமருந்து முதலானவைகளைவிட விரோதிகளிடமிருந்து அதிகமாகக் கைப்பற்றுவதற்கான சந்தர்ப்பம் கிடைப்பின் போரிடுவதற்கு அவர்கள் தயார். உணவுப் பொருள் நாட்டின் ஜீவாதாரமல்லவா? அவைகளைக் கொள்ளை கொண்டு போக அறுவடை நாட்களில் நாட்டுப் புறங்களில் சேனை நடத்தும் ஜப்பானியரை விரட்டியடிக்க தம் தோள் மீது துப்பாக்கி தாங்குபவர்கள் கம்யூனிஸ்டுகள் முக்கிய சேனை முகாம்களை கைப்பற்ற ஜப்பானியர் முன்னேறும்பொழுது அவர்களின் முன்னேற்றத்தைத் தடைப்படுத்த முன்னணியில் நிற்பவர்களும் அவர்கள்தான். சீனக் குடியானவர்களின் வாழ்க்கையே யுத்த மயமாகத் திகழ்கின்றது. கைத்துப்பாக்கி என்றால் அவர்களுக்கு அமோக மோகம். காரணம், தங்களின் சுதந்திரத்தைப் பறிக்க வரும் ஜப்பானிய எதிரியின் உயிரை வாங்க உபயோகப் படுகின்றதல்லவா அது? தாங்களே மிகவும் எளிய முறையில் கைத்துப்பாக்கியை செய்து கொள்கின்றனர். வெடிமருந்தும் அவ்விதமே. ஒரு சீனக் குடியானவனின் வீட்டில் புகுந்தோமேயானல் எப்பொழுதும் சுடுவதற்காக தயாராக வைக்கப் பெற்றிருக்கும் கைத்துப்பாக்கியை பலகணிமேல் காணலாம். அது சீன மக்களின் வாழ்க்கைச் சாதனங்களில் ஒன்ருகப் பரிணமிக்கின்றது.



சீனக் குடியானவர்களின் கண்ணுக்குப் புலப்படாது எதிரியின் எந்த நடமாட்டமும் இதுவரை

ஏற்பட்டதில்லை. குன்றுகளின் மேல் தலையில் பூச்செண்டு போன்ற பொருளை யணிந்து வான ளாவ நிமிர்ந்து நிற்கின்றது ஒரு கம்பம். அதுவே எதிரியின் படை யெடுப்பை அறிவிக்கும் இயந்திரம். காவலாளர்கள் எப்பொழுதும் அங்கு தயாராக வைக்கப் பெற்றிருக்கின்றனர். ஜப்பானியர் போர்மேற் செல்ல காலை முன்னெடுத்து வைக்க வேண்டியது தான் தாமதம். உடனே குன்றின் கம்பத்திலுள்ள பூச்செண்டு போன்ற பொருள் துணிக்கப்படும். இது தான் கம்யூனிஸ்டுகளின் அபாய அறிவிப்பு. உடனே கிராமங்களிலெல்லாம் ஒரு வீர நாதம் முழங்குகின்றது. ஆண்கள் அவசர அவசரமாக ஆயுதம் தாங்கி போருக்கு ஆயத்த மாகின்றனர். பெண்களும், ஆண்களும் குன்றுகளிலுள்ள பாதாளப் பாதைகளில் மறைகின்றனர். குன்று அருகில் இல்லாத கிராமங்களில் வசிக்கும் மக்களுக்கும் கிராமத்தின் அடியிலே பதுங்கு மிடங்கள் தோண்டப் பெற்றிருக்கின்றன. இப் பாதாளப் பாதைகள் அநேக மைல் நீளமுள்ளவை. ஒரு கிராமத்திலிருந்து மற்றொரு கிராமத்திற்கு அவை மூலம் செல்லலாம். விஷவாயு பாதிக்கா வண்ணம் காற்று வரவுக்கான வசதிகளும் அவைகளில் ஒருங்கே அமைக்கப் பெற்றிருக்கின்றன.

ஏனன் நகரிலுள்ள கட்சி மகா சபையை ஒரு சோதனைச்சாலை யென்று சுருக்கமாகக்கூறி விடலாம். ஏனெனில் ஒவ்வொரு விஷயங்களைப் பற்றியும் பெரும் வாக்கு வாதங்கள் அங்கு எழுகின்றன.

ஒவ்வொரு விஷயமும் ஆழ்ந்து ஆராயப்படுகின்றது. அதன் பிறகு தான் பலபெரும் மூளைகளில் வடித்தெடுக்கப் பெற்ற விஷயங்கள் கட்சிக் கொள்கைகளாக ஏற்கப் பெற்று கட்சிப் புத்தகத்தில் இடம், பெறுகின்றன. கட்சிக்கும், சேனைக்கும் ஓய்வென்பதே கிடையாது. கட்சிக் கலாசாலைகள் சீனப் புதல்வர்களை வீரப்புதல்வர்களாக ஆக்கும் வேலையில் ஈடுபட்டிருக்கின்றன. கட்சியின் கொள்கை, கட்சியின் லக்ஷியம் முதலியவை தெளிவாக மாணவர்களுக்கு விளக்கப் பெறுகின்றன. நவீன முறையில் யுத்தப் பயிற்சியும் அளிக்கப் பெறுகின்றார்கள். கலாசாலையின் சுவர்களை அணி செய்து கொண்டிருக்கும் ரஷ்ய மக்களின் தோழனாகிய ஸ்டாலினின் உருவப்படம் சீனமாணவர்களின் இரத்தக் குழாய்களில் கம்யூனிஸ்ட் இரத்தத்தை இளஞ் சூட்டுடன் வேகமாக ஓடச் செய்கிறது.

கலாசாலைகளிலிருந்து சீன மாணவர்கள் கம்யூனிஸ்ட் மதுவருந்தி காளைகள் போன்று தேசப்பணியில் ஈடுபட வீறிட்டு வெளி வருகின்றனர். இவ்வாறு ஏனன் சர்வகலாசாலை தயாரித்த வீர ஜீவன்கள் 40,000 இருக்குமாம்.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சி 17 வருடங்களுக்கு முன்னால் பாதாளங்களில் பதுங்கும்படி விரட்டப் பட்ட அதே தலைவர்களின் கீழ் ஒன்று பட்டு இன்றளவும் வேலை செய்து வருகின்றது. அதன் தலைவர்களெல்லாம் 35 வயதுக்கு மேற் பட்டவர்கள். 1920ம் ஆண்டில் சீனாவில் புரட்சித் தீயைக் கிளப்பியவர்கள் அவர்கள்தான். அதன் பின் ஏற்பட்ட உள்நாட்டுக் குழப்பங்களில் அவர்களுடைய குடும்பத்தினரெல்லாம் பிடிக்கப் பெற்று தூக்கு மேடைக்கு அனுப்பப் பெற்றனர். ஆனால் அவர்கள் உயிர் வாழ்கின்றார்கள், கட்சிக்

காக உயிரை விடுவதற்காக. தாங்கள் பிறந்தது வீணுக்கல்ல என்பதை உணர்ந்தவர்கள் அவர்கள். அவர்களின் உள்ளத்திலே பொறுமை நர்த்தனம் செய்கின்றது. சொல்லொணு இன்னல்களை ஒருமித்து ஒரே மனதாய் அனுபவித்த காரணத்தினுல் விசுவாசம், நம்பிக்கை என்னும் அருங்குணங்கள் அவர்களிடம் வெகுவாகக் காணப் பெறுகின்றன.

அரசியல் சபையின் பெருந் தலைவர்கள் பரிபாலன விஷயங்களில் அதிகமாகத் தலையிடுவதில்லை. அவர்களுக்குப் போதுமான ஓய்வு அளிக்கப் பெற்றிருக்கின்றது. அவர்களுடன் ஐந்து அல்லது ஆறு மணி நேரம் சம்பாஷணை நிகழ்த்தலாம். அவர்கள் மார்க்ஸின் கொள்கைகளைப் போற்றுகின்றனர்; பிரசாரமும் செய்கின்றனர். ஆனுல் எல்லாவற்றையுமல்ல. தங்கள் நாட்டிற்கு ஒவ்வாத மார்க்ஸின் கொள்கைகள் அப்படியே புறக்கணிக்கப் பெறுகின்றன. உள் நாட்டுப் போரினுலும், ஜப்பானுடன் யுத்தம் செய்வதாலும் தங்களுக்கேற்பட்ட அனுபவங்களின் மேல் அவர்களின் கொள்கைகள் அஸ்திவாரமிடப் பெற்றிருக்கின்றன. மேலை நாட்டு புரட்சித் தத்துவங்களையும் அவர்கள் கண் மூடித் தனமாகப் பின்பற்றவில்லை. மேலை நாட்டுப் புரட்சித் தத்துவங்களால் பாதிக்கப் பெற்ற சீன வாலிபர்களுக்கு சீனக் கம்யூனிஸ்டு கட்சியின் தலைவரான மாட்—ஸி—டங் மொழியும் உபதேசங்களைக் கேளுங்கள்.

"மகத்தான காலமாகிய சென்ற நூற்ருண்டின் அரசியல், பொருளாதார, ராணுவ சரித்திரங்களை சரிவரப் படிப்பதற்கு யாரும் இன்னும் ஆரம்பம் செய்யவில்லை. நம் தோழர்களில் அநேகர் தங்கள் நாட்டுச் சரித்திரத்தைப் பற்றியறியாமலோ, அறைகுறையாகவோ அறிந்திருப்பது தங்களுக்கு ஒரு பெரும் கேவலம் என்று கருதவில்லை. அதற்கு மாருக அவர்கள் பெருமைப் படுகின்ருர்கள். தங்கள் நாட்டைப்பற்றி அவர்கள் சிறிதேனும் அறியாது, பிற நாடுகளின் மீது தங்கள் கவனத்தைத் திருப்புகின்றனர். சில ஆண்டுகளுக்குள் வெளி நாடு சென்று திரும்பிய அநேக மாணவர்கள் இத் தவறை இயற்றியிருக்கின்றனர். அவர்கள் சப்தத்தை பதிவு செய்து பின்பு அதை வெளியிடும் வெறும் இயந்திரமேதான். தாங்கள் படித்த விஷயங்களிலிருந்து சீனுவுக்கு உபயோகமானவற்றைக் கண்டுபிடிப்பதே தங்களின் கடமை என்பதை அவர்கள் மறந்து விட்டார்கள். இத்தொத்து வியாதியை விட்டும் கம்யூனிஸ்ட் கட்சியும் தப்பிக்கவில்லை."

இவ்வாறு, 'சீனர்களே! சீனர்களாகவே இருங்கள்' என்னும் கொள்கை சீனு முழுதும் பரப்பப் பெறுகின்றது.

தற்பொழுது சீனு சிதறுண்டு கிடக்கின்றது. ஒரு பக்கம் ஜப்பானிய பொம்மை அரசாட்சி நான்கிங் நகரில். சுங்கிங்கிலே சியாங்கைஷேக் முதலாளி வர்க்கத்தின் உதவிகொண்டு அதிகாரத்தைக் கைப்பற்றி ஆட்சி செலுத்துகின்ருர். இவைகளுக்கு நடுவிலே கம்யூனிஸ்டுகளின் ஏனுன் சர்க்கார். ஏனுன் சர்க்காரின் வெளி நாட்டுக் கொள்கை வெளிப்படையானது. அமெரிக்க உதவியைப் பெற்று பொது விரோதிகளான ஜப்பானியரை சீன பூமியிலிருந்து விரட்டியடிப்பதே அது. அதற்காக வேண்டிய அமெரிக்க

உதவியை வெகுவாக வேண்டி நிற்கின்றனர் அவர்கள். அமெரிக்கர்களும் சீனக் கம்யூனிஸ்டுகளின் சக்தியைக் குறைவாக மதிப்பிடவில்லை. சீன மக்களனைவருக்கும் ஓட்டுரிமை யளிக்கப் பெற்று தேர்தல் நடத்தப் பெற்றால் கம்யூனிஸ்டுகளே வாகை சூடுவார்கள் என்பதை அமெரிக்கர் நன்கு உணர்ந்து கொண்டனர். எனவே கம்யூனிஸ்டுகளுடன் எவ்விதமாவது சமரசம் செய்து கொள்ளுமாறு சியாங்கை ஷேக்கிற்கு அடிக்கடி அறிவுறுத்துகின்றது அமெரிக்க சர்க்கார். சீன அரசியல் வானிலே சமரசத்திற்கான அறிகுறிகள் காணப்பெறுகின்றன. எனானிலிருந்து அமெரிக்க ஆகாய விமானத்தில் கம்யூனிஸ்ட் தலைவர்களிலொருவர் சுங்கிங்கிற்கு பறந்து சென்றிருக்கின்றார் என்று பத்திரிகைகள் கூறுகின்றன. சீனக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு பிரிஸ்கோ மகாநாட்டிலும் பிரதிநிதித்துவம் அளிக்கப்பெற்றிருக்கின்றது. இவ்வாறு தன் தாய் நாட்டுப் பணியில் ஈடுபட்டு தன் உயிரையும் தியாகம் செய்யத் தயாராக நிற்கும் செஞ்சீனாவிற்கு உலக வல்லரசுகளிடை மதிப்பு தினே தினே உயர்ந்து வருகின்றது. சீனாவின் இருதய நாடி என்றையும்விட இன்று வெகு வேகமாக அடிப்பதற்குக் காரணம் வீரக் கம்யூனிஸ்டுகளின் தீவிரப் போராட்டங்கள்தான்.

ஜப்பானியர்களிட்ட தளைகளினாலும் உன் புதல்வர்களேயிட்ட விலங்குகளினாலும் கட்டப்பட்டிருக்கின்ற பழம்பெரும் சீனாவே! உன் இளம் புதல்வன், வீரக்காளை செஞ்சீனா உன் அடிமைத் தளையை தகர்த்தெறிந்து உன்னை விடுதலை செய்ய வீறுகொண்டு எழுந்து நிற்கின்றான். அவன் உன்னை விடுவித்து உலகவல்லரசுகளில் உன்னை உன்னத பதவி வகிக்கச் செய்வான் என்பதை நினைத்து மகிழ்ச்சியடை. இவ்வித வீரப் புதல்வனைப் பெற்ற சீனத் தாயே! உனக்கேன் கவலை? நீயே இவ்வுலகின் அதிர்ஷ்டசாலி.





பாதாள உலகிலே....

"ரதி" எழுதியது

நாடகம் பார்த்துவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தேன். நாடகக் கொட்டகையிலிருந்து வீட்டிற்கு இரண்டு மைல் தூரம் இருக்கும். நிலாக்காலமானபடியால் வண்டி கொண்டுவரவில்லை. உல்லாசமாக இருந்ததால் ஆனந்தமாக நடந்து வந்துகொண்டிருந்தேன். இயற்கையில் பிரவகித்து ஓடும் எழிற் பெருக்கைப்போல் நாடகத் தேவியின் நெஞ்சில் நிறைந்து வழிந்த இன்ப அலைகள் எனக்குள்ளும் வட்டமிட்டுக் கொண்டிருந்தன. இப்பொதெல்லாம் கலை உத்தாரணத்திற்கெனப் பலர் கங்கணம் கட்டிக்கொண்டு, கலை உலகைக் குட்டிச்சுவர் செய்து வருகிறார்கள்! ஆனால், நாட்டில் அம்மாதிரி கலாதேவிகள் இரண்டொருவர் இருந்தாலே போதும்.

கலை உலகம் நிச்சயம் புது மலர்ச்சி பெற்றுவிடும் என்று நிச்சயமாக நான் சொல்வேன். அழகுக்காக வேண்டி எவ்வளவோ செலவிடப் படுகிறது. ஆனால் அந்த அலங் கரிப்புகளைக் காணும்போது 'ஐயோ, அழகுக்கு இந்தக் கதி நேரவேண்டுமா?' என்று நாம் வாய்மேல் கை வைக்குப் படியான நிலைமை ஏற்படுவது உண்டு. நடனத்தேவி தனது இயற்கை அழகை—வேண்டுமென்றே— குறைத்துக் கொள்ளுகிறாள். (காரணத்துடன்தான்). கண் களிலே தீட்டியிருக்கும் அஞ்ச னத்தை அழிக்கிறாள். ஆனால், அது இன்னும் அதிகச் சோபை யையே அக்கருவிழிகளுக்குத் தரு கிறது. விலை உயர்ந்த மஸ்லின் ஆடைகளைக் கண்டபடி துவண்டு விழும்படி செய்கிறாள். என்ன செய்த போதிலும், அந்தச் சுந்தரி யின் அக அழகு வளர்வதாகத் தோன்றுகிறதே தவிர குறைந்து போவதாகக் காணோம். அம் மம்மா, இந்நிலையில் மற்றவர் கண் ணில் பட்டால் என்ன நேருமோ என்று அவள் மருண்டு மருண்டு பார்க்கும் அந்தப் பார்வை! அப் பாடி அதை வர்ணிப்பது சாத்திய மில்லை. அதுவேறு கதை. இங்கே சொல்ல வந்ததின் அவசியமே நடிப்பின் மூலம் ... உண்மை நடி ப்பின் மூலம் உலகை எல்லாம் மயக்கிவிட முடியும் என்பதற்கு அந்தத்தேவி ஒரு தக்க அத்தாட்சி! அதையே சொல்ல வந்தேன்.

இன்னும் ஒரு அரை மைல்தான் இருக்கும் நான் நடக்க வேண்டிய தூரம் — பிறகு வீடு! அதற்கு முன் — அதோ அந்த அரச மரத் தைத் தாண்டியாக வேண்டும். ஆகா! அரச இலைகளுக்குத்தான் இந்தத் தென்றலையும் நிலவையும் கண்டால் என்ன ஆனந்தம்! கொஞ்சிப் பால் குடிக்க அன் னையை நோக்கி ஆடி வருவது போல நிலமகளைத் தழுவத் தழுவ பரவசத்துடன் பாட்டிசைத்துக் கொண்டிருந்தன பசுங் கொம்பு கள்.

இன்று என்றுமில்லாத ஒரு அதி சயத்தை அங்கு கண்டேன். வழி யிலே ஏதோ ஒரு பெரிய 'கிணறு' போன்ற பள்ளம் தென்பட்டது. போகும்போது அதை நான் பார்க்கவில்லையே! புதிதாக இப் போது எங்கிருந்து வந்தது......? ஏதாவது மிலிட்டரி லாரி கீரி —

இப்படியாக யோசித்துக் கொண்டு அருகே வரவும் பள பளப்பான பளிங்குக்கல் படிக் கட்டுகள் தென்பட்டன. பழக் கப்பட்ட வழியில் நடப்பதுபோல் இறங்கி நடந்தேன். நெடுக வழி போய்க்கொண்டே இருந்தது. நானும் போனேன். ஆம், போனேன், போனேன்...... போய்க்கொண்டே இருந்தேன். அப்போது 'கணகண' வென்று மணிகள் ஒலித்தன. சிம்ம கர் ஜனை கேட்டது. ஒரு வேளை விண்ணை இடிக்கும் இடி முழக் கமோ அது? சாவதானமாக யோசிப்பதற்கு நேரமில்லா விட் டாலும், கண்களை இறுக ஒரு தரம் மூடித் திறந்தேன். நான் நிற்பது நிலத்தின்மேல்தானா என் பதை ஊர்ஜிதப் படுத்திக்கொள்ள காலை இரண்டு தட்டுத் தட்டி னேன். ஆம், எல்லாம் உண்மை. எதிரே தெரிவதெல்லாம் உண்மை. பிரம்மாண்டமான காடு. கான கத்தின் நடுவே சுந்தரமான குடிசை. குடிசை வாசலிலே எனது ஆருயிர் நண்பர். நண் பருக்குப் பக்கத்திலே மனைவி. மனைவியின் அருகே அவர் சகோ தரி......

இப்போது எனக்கு நிச்சயமாகத் தோன்றி விட்டது. எப்படியோ பாதாள உலகிற்குத்தான் வந்து விட்டோம் என்று. ஆனல் பாதாள உலகிலே நாக கன்னி அல்லவா எதிர் கொண்டழைக்க வருவாள்! அப்படியொரு நாக கன்னிகையையும் காணேமே? பூமிக்கடியில்தான் வழி செய்து கொண்டு — இல்லை, தெரிந்த வழியில் வந்திருக்கிறேன். கீழே கீழே வந்திருப்பதால் இது பாதாள உலகமேதான் .... அடடா! யோசனை என்ன! கொஞ்ச தூரத்தில்தான் நண்பர் நிற்கிருரே, போய்க் கேட்டால் தானகத்

தவிர, நான் ஒரு 'ஆறுதலை' நாகத்தையும் வெட்டி வீழ்த்திவிட்டு இங்கு வந்து சேரவில்லையே, பிறகு இது எப்படிப் பாதாள உலகமாக இருக்க முடியும்! ஆனல்...... தெரிந்து விடுகிறது......அதற்குள் 'மண்டையை' உடைத்துக் கொள்வானேன்!

காட்டின் நடுவே வழி செய்து கொண்டு போவதென்பது கஷ்ட

மான காரியந்தான். என்னைப் போல் 'மேல் மாடியை விட்டு' வீதிக்கே வந்தறியாதவர்களுக்கு அது இன்னும் அதிகமாக இருக்கும். இருந்து என்ன செய்வது? போக வேண்டிய சமயத்துக்கு இதைவிடக் கடும் வழியாக இருந்தாலும் சென்றுதானே ஆக வேண்டும்? இடையில் எனக்கு ஒரு சந்தேகம்? என்னுடைய அந்த நண்பரோ ஒரு பெருத்த ஆராய்ச்சிக்காரர். 'வாழ்க்கை ஒரு ஆராய்ச்சி' என்ற பெரிய தொரு புத்தகத்தைக் கடந்த பதினுறு வருஷ காலமாக எழுதிக் கொண்டுவருகிறார். சதா சிந்தனை செய்துகொண்டே இருப்பார். சில வேளை சாப்பிட்டாயிற்றோ என்ற சந்தேகம் வந்து அதற்கு மனைவியைக் கேட்பது அவர் வழக்கம்! இப்பேர்ப்பட்ட மகானுபாவராயிருந்தாலும் என்னிடத்தில் அவருக்கு அத்தியந்த அபிமானம் உண்டு. என்னைக் கண்டு விட்டால் சும்மா விடமாட்டார்! (இப்போதும் 'விடாமல்' இங்கேயே வைத்துக் கொண்டால் என்ன செய்வது என்ற சந்தேகம் வந்தது. கண்ணை மூடினேன். இடையில் இரண்டொரு நிமிஷம் எனது சொந்த நினைவும் வந்தது! என் வருகைக்காக என் மனைவி இடுப்பில் தாங்கிய குழந்தையுடன் நின்று கொண்டிருப்பாளே......இனிய கதை போல் அமையவும் 'சுய ஞாபகம்' வந்தது......)

நண்பர் என்னைப் பார்த்து விட்டார்! ஆகா......வழக்கம்போல் அவர் சிரித்த சிரிப்பின் ஒலி என்னை அந்தப் பாதாள உலகிலிருந்து தேவலோகத்துக்கே கொண்டுபோய் விட்டது. சிட்டுப்போல் பறக்கும் அவர் தங்கை சியாமளம், "மாமா, நல்ல சமயத்துக்கு வந்தீர்கள். எனக்கு ஒரு பூ விடாமல் இங்குள்ள எல்லாப் பூவையும் பறித்துக் கொடுத்துவிட வேண்டும்" என்று கொஞ்சினள். அவர் மனைவி, என் களைப்பைப் போக்க ஆகாரம் கொண்டு வர உள்ளே சென்றார்கள்.

நிம்மதியாக உட்கார வேண்டும்; பிறகு சாவகாசமாக எல்லாம் பேச வேண்டும் என்று நான்

எண்ணுகையிலேயே நண்பர் "புறப்படு அப்பா" என்றார்.

எனக்கு விளங்கவில்லை. "உங்கள் ஆராய்ச்சியைக் கொஞ்சம் நிறுத்திக் கொள்ளுங்கள். பிறகு பார்ப்போம்" என்றேன்.

"அட என்னப்பா, சுத்த மோசமாக இருக்கிறாயே! உன் சோம்பேரித் தனத்தை இங்கு வந்துமா காட்டுகிறாய்! இன்றைக்கு இல்லா விட்டால் இன்னும் ஒரு மாதம் காத்திருக்க வேண்டுமே!" என்றார்.

எனக்கு அதிக திகிலாகி விட்டது. அந்த இடத்தை விட்டு அப்பாலே புறப்படுவதற்கு என்ன சொன்னாலும் செய்யச் சித்தமாக இருக்கும் எனக்கு 'இன்னும் ஒரு மாதம்' என்ற வார்த்தையைக் கேட்டால் எப்படி இருக்கும்? துருவித் துருவித் கேட்க விஷயம் விளங்கிற்று. மலை உச்சியிலே பௌர்ணமி தோறும் ஒரு விந்தை நடைபெறுவதுண்டாம். விண்ணட்டிலிருந்து, மேக மண்டலம் வழியாக ஒரு 'தேவதை' இறங்கி வருமாம். அதைக் கண்ட பேர்களுக்கு இகத்தில் எதுவும் சித்தியாகுமாம்! முதலில் இதைக் கேட்டபோது என்னால் நம்ப முடியவில்லை. என்ன எனது நண்பரா அந்த ஆராய்ச்சிக் காரராக இருந்த அந்த அற்புத நண்பர்தானா — இந்த அபத்தத்தை நம்பினர். 'சபாஷ்' என்று தொண்டையைத்தீட்டிக்கொண்டு "எப்போதிலிருந்து உங்களுக்கு இதிலெல்லாம் நம்பிக்கை விழுந்தது!" என்று கேட்டேன். நண்பர் என்னை ஏறெடுத்துப் பார்த்தார். அப்படிச் சொல்வதைவிட 'முறைத்துப் பார்த்தார் என்று சொல்வதுதான் பொருந்தும். "அதுதானப்பா, அதிலெல்லாம் நம்பிக்கை இல்லை — அது நடக்கவும் நடக்காது!" என்பதை நிரூபிக்கத்தான் — மனைவி சகிதம் இங்கு எழுந்தருளியது. இருந்தாலும் அவள் கேட்கிறாளா? இந்தக் காலத்துப் பெண்கள்தான் ஆராய்ச்சியிலே நம்மைவிட ஒரு படி மேலாக நிற்கிறார்களே. நல்ல வேளை. நீயும்கூட வருவதால், சியாமளாவுக்குத் துணையாக அவள் இங்கேயே இருக்கட்டும். நாம் இரண்டு பேரும் மலை உச்சிக்குப் போய்விட்டு வந்துவிடலாம்" என்றார்.

ஏதோ கொண்டு வந்து வைத்ததை 'அள்ளிப்' போட்டுக் கொண்டு நண்பருடன் புறப்படத் தயாரானேன். ஆனால், இப்போது நடப்பது அவ்வளவு சிரமமாகத் தோன்றவில்லை. நண்பர் பாடிக்கொண்டே வந்தார். பாட்டும் நிலவும் பரவசத்தை ஊட்டியது. வனதேவதையையோ அல்லது வான தேவதையையோ காணப்போகிற ஆனந்தம் வேறு!

கடைசியாக மலை உச்சிக்கு வந்தோம். எனக்கு சற்றே பயந்தான். எத்தனையோ கதைகள் கேட்டிருக்கிறோமே, அந்த மாதிரி 'கல்லாகக் காடாகப்' போகும்படி சபித்து விட்டால் என்ன பண்ணுவது! இருந்த போதிலும் நண்பர் தரும் உற்சாகம் ஒரு ஊக்கத்தை நிரப்பியது.

நாங்கள் காத்திருந்தோம், காத்திருந்தோம் — விடியும் வரை காத்திருந்தோம். இன்னும் நன்றாக விடியவில்லை. எங்கோ மலைக் கோழி கூப்பிட்டது. அந்தக் குரலுக்குக் காகங்கள் எதிர் குரல் கொடுத்தன! இப்படியாக இரவு போய்ப் பகல் வரும் இனிய வேளை அது!

"என்ன போகலாமா?" என்றேன்.

"அங்கே போய் அவளுக்கு ஏதாகிலும் சந்தேகம் என்ருல் நீதான் போக்க வேண்டும்!" என்ருர்.

"சரி" என்று தலையை ஆட்டினேன்.

"சும்மா தலையை ஆட்டினுல் போதாது. எல்லா விவரத்தையும் எடுத்துச் சொல்ல வேண்டும்!" என்ருர்.

"அதுதான் ஒன்றையுமே நாம் பார்க்க வில்லையே? எடுத்துச் சொல்ல என்ன இருக்கிறது?" என்றேன்.

"சரியாய்ப் போச்சு......என்ன சொல்ல வேண்டுமா? கேளப்பா கேள்! 'தெய்வம்' அப்படி இப்படி என்கிறதெல்லாம் வெறும் கற்பனை. உலகை ஏமாற்ற வைக்கவேண்டிப் பண்ணிய காரியமே யல்லாமல் வேறென்று மில்லை! மோகினியும் டாகினியும் புரட்டுக்கள்தான். நம்மைப் போன்ற — இல்லை உம்மைப் போன்ற பெண்கள் இன்னும் உலகத்தில் இருக்கிருர்கள் என்ருல் காளிகளிலே ஆயிரம் காளிகள் அதிகப்படியாக அவதரிப்பார்கள். இப்போதிருக்கும் கடவுள்கள் 'விவாக ரத்து' பண்ணிக் கொண்டு, புதிதாக 'பல்லாயிரம்' தேவிகளைத் திருமணம் செய்து கொள்வார்கள்......இன்னும்... மண்டையில் அடித்தாற்போல் சொல்ல வேண்டும்... என்ன தெரிந்ததா?" என்ருர்.

நண்பருடைய முகத்தையும் கண்களையும் பார்த்து விட்டு, "தெரிந்தது!" என்று ஒப்புக் கொண்டேன்.

குடிசைக்கு நாங்கள் வந்து சேர்ந்த சமயம் "பேரமைதி" குடி கொண்டிருப்பதற்குப் பதில் முனகலும்—தாபமும் — தவிப்பும் எங்களை எதிர்கொண்டழைத்தது. நான் கிடுகிடுத்தேன்! கலங்காத

நண்பரும் கலங்கிப் போனர்...... சங்கதியைக் கேட்டபோது நான் அடியோடு நிலை குலைந்து போனேன் என்றே சொல்ல வேண்டும்......

நாங்கள் வெளியே புறப்பட்டதும் சியாமளாவும் எங்களோடு வருவேன் அதைப் பார்ப்பேன் என்று பிடிவாதம் பிடித்தாள். பிறகு பிடிவாதமாகவே வெளியே நின்று கொண்டிருந்திருக்கிருள்... அம்மா உள்ளே ஏதோ காரியமாக இருந்திருக்கிருள். வெளியே 'அலறல்' கேட்டது. ஓடி வந்து பார்க்கையில் பெண் மூர்ச்சித்து விழுந்து விட்டாள். வான தேவதையைக் கண்டதே காரணமாம்! எங்களுக்குக் காட்சிதர ஏனோ அந்தத் தேவி மறுத்து விட்டாள். அதிருக்கட்டும், அந்தக் குளறலிலும் "அம்மா நீ சொன்னபடியே இருந்தது" என்று பெண் சொல்லிற்ரும். அதைச் சொல்லிச் சொல்லி அன்னை அழுதாள். "இந்த விஷப் பரீட்சைக்கு ஏன் தான் இறங்கினேனே! அப்படி இறங்கினுலும் உன்னையும் கூட்டிக் கொண்டு வர வேணுமா?" என்று தாய் புலம்பினுள். நண்பர் எரிச்சலுக் கிடையிலும், "உன் பாடம்தான் குழந்தையை அப்படி நினைக்கத் தூண்டியிருக்கும்" என்று முணுமுணுத்தது எனக்கு மட்டும் கேட்டது.

இவைகளைக் கண்டு 'கல்லாக' நிற்பதைத் தவிர எனக்கு ஒன்றுமே தோன்றவில்லை. குழந்தை சௌக்கியமாக எழுந்து விடுவாளா? தாயின் துயரம் தீருமா? ஆராய்ச்சியிலே நண்பர் கண்ட முடிவு என்ன? என்ற கேள்விகள் ஒவ்வொன்ருக வட்டமிட்டன. இதற்கிடையில் கானகத்தை விட்டு வெளியேறும் மார்க்கம் உண்டா என்பதையும் யோசித்தபடி இருந்தது எனது மனது!

கைப்பிடிக் கதவு திறக்கும் சத்தம் 'படக்' கென்று கேட்டது. வாயில் காப்பவன் போர்வையை மெள்ள விலக்கிக் கொண்டே, "அதுக்குள்ளே தூங்கிட்டனுங்க" என்ருன்.

வீட்டின் முன் நிற்கும் உணர்வு அடைந்தேன். நிலவுடன் கலந்த நாடகம், எனக்குக் 'கலங்கிய நாடகத்' தோடு ஒரு சிறு இனிய தூக்கத்தையும் அளித்து விட்டது என்பதை அவன் எப்படி அறிவான்?

டாம் மாமாவின் குடில்

"வில்லன்"

★

"டாம் மாமாவின் குடில்" என்னும் அமெரிக்க நாவல் புரட்சி செய்த உலகப் புத்தகங்களுள் ஒன்று. இதை இயற்றியவர் ஹாரியட் எலிஜபெத் பீச்சர் ஸ்டௌ (1811—1896) என்பவராவர். இவர் அமெரிக்காவில் அடிமை முறை பெருவாரியாக வழங்கின தென்பகுதி நாடுகளில் சென்றும், எசமானர்களின் கொடுமையைப் பொறுக்க மாட்டாமல் தப்பியோடின பல அடிமைகளை நேரில் கண்டும் அவர்களின் நிலைமையை நன்கு ஆராய்ந்து அறிந்தவர். இங்ஙனமாக அறிந்த விஷயங்களையும்பார்த்த பலஇயல்புகளுடைய மனிதர்களையும் அடிப்படையாகக் கொண்டே அவர் இந்நூலை எழுதினர். 1852-ல் வெளி வந்த இந்நூல் வேறெந்த நூல்களையும் விட மக்களிடையே மிகுந்த செல்வாக்குப் பெற்றது. இதன் கதையின் கட்டுக் கோப்பு நன்கமைய வில்லை. இதன்வசனக்கட்டும் சரியாக இல்லை. ஆயினும், அடிமை மக்களின் வரலாற்றை மிக உருக்கமாகவும், உயிர் ததும்பவும் கூறுவதால், இது ஆற்றல் வாய்ந்ததொரு நூலாகத் திகழ்ந்தது. இது வெளி வந்த சிறிது காலத்திற்கெல்லாம் இதன் கதை நாடகமாக எழுதப்பட்டு நடிக்கப் பட்டது. அவ்வுருவிலும் மக்கள் இதைச் சுவைத்து இதன் ஆற்றலை உணர்ந்தனர். அமெரிக்காவில் மட்டுமன்றி, பிற நாடுகளிலும் பரவி இது இருபது பல்வேறு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு பெருவாரியாக விற்பனையாயிற்று. வெள்ளையர், தம்மைப் போலவே மானிடப் பிறவிகளான நீகிரோவரை எவ்வளவு குரூரமாக நடத்தி வந்திருக்கின்றனர் என்பதை உணர்ந்தனர். அவர்களின் மனச்சாட்சி குறுகுறுத்தது. மானிடத் தன்மையின் பெருமையை உணர்ந்த பெரியோர் பலர் அமெரிக்காவில் இவ்வடிமை முறையை அடியோடு ஒழிக்கக் கங்கணங் கட்டினர். இதன் காரணமாக அடிமை முறை பெரிதும் வழங்காத வட நாடுகளுக்கும் அம்முறை பெரிதும் வழங்கும் தென் ஞடுகளுக்கும் சமூக, பொருளாதார, அரசியல் விஷயங்களில் சங்கடங்களும் மனத்தாங்கலும் தோன்றி உள்நாட்டுப் போரில் முடிந்தன.

இந்நூல் தோன்றுவதற்குப் புறப் புலனுகவும் இதன் விளைவாகவும் இருந்த சில விஷயங்களைச் சுருக்கமாகப் பார்க்கலாம்.

எபிரேயர், கிரேக்கர், உரோமர் முதலிய பழஞ் சமூகங்களின் மனிதனை மனிதன் அடிமை செய்யும் வழக்கம் இருந்து வந்தது. அந்த முறையில் அடிமைப் பட்டவன் உடையவனின் உடமை அல்லது சொத்து ஆவான். உடையவன் அல்லது எசமானன் அவனை என்ன வேண்டுமானுலும் செய்யலாம்; உடலின் உழைப்பை ஈவு

இரக்கமின்றிச் சுரண்டலாம்; அடிக்கலாம்; கொல்லலாம்; விற்கலாம். சடப் பொருளாகப் பாவிக்கப்பட்ட அவ்வடிமை சட்டப்படி மனிதனல்லன். ஆகவே அவனுக்கு யாதொரு உரிமையுமில்லை. ஐரோப்பாவில் கிறிஸ்தவ சமயம் பரவிய பின், அடிமையும் மனிதனே என்ற உணர்ச்சி பிறந்தது. உரோம ஆதிபத்தியத்தின் இறுதிக் காலத்தில் அடிமைகள் மெல்ல மெல்ல சுதந்திரம் பெற்றனர்.

துரதிருஷ்ட வசமாக, அமெரிக்கா கண்டு பிடிக்கப்பட்ட போது, அடிமை முறை மீண்டும் தலைகாட்ட ஆரம்பித்தது. 1503-ல் போர்த்துக்கேசியர் ஆப்பிரிக்காவில் நீகிரோவர்களை விலைக்கு வாங்கிக் கப்பலிலேற்றி செய்ண்ட் டொமிங்கோவில் இறக்கி தோட்ட வேலை செய்யச் செய்தனர். மற்ற ஐரோப்பியரும் போர்த்துக்கேசிரியரைப் பின்பற்றி அடிமை வியாபாரஞ் செய்தனர். ஐரோப்பியர் புதிதாகக் குடியேறின காலனிகளில் நீகிரோ அடிமைகள் பயிர் வேலைகளில் ஏராளமாக அமர்த்தப் பட்டனர். பிரிட்டிஷாரும் அடிமை வியாபாரஞ் செய்து கொள்ளை லாபமடித்தனர்.

மெல்ல மெல்ல மக்களிடையே மானிட உணர்ச்சி பரவியது. மேன் மக்களும், சிந்தனையாளர்களும், பரோபகாரிகளும் அடிமை முறையையும் அடிமை வியாபாரத்தையும் அழுத்தமாகக் கண்டித்தனர். 1831-ல் இங்கிலாந்தில் அடிமை வியாபாரம் அடியோடு ஒழிக்கப்பட வேண்டியதென அமைப்புச் சட்டம் கூறியது. அடிமை முறையால் அமெரிக்கக் காலனிகளின் சமூக, பொருளாதார அரசியல் இயல்புகள் பாதிக்கப்பட்டன. மக்களுக்குச் சம உரிமையுண்டெனப் பறையறைந்து விட்டு மனிதனை மனிதன் அடிமைப் படுத்துவது ஒரு இழுக்கெனத் தோன்றியது. வட நாடுகளில் அடிமை முறை லாபகரமானதாக இருந்ததால், அதை ஒழிக்க அந்நாடுகளைச் சார்ந்தவருக்கு மனம் வரவில்லை. ஆயினும், ஒரு கட்சியினர் தோன்றி அடிமை முறையை உடனே ஒழிக்க வேண்டுமெனப் பலமாக வாதாடியும் பிரசாரஞ் செய்தும் வந்தனர். அவர்களில் ஒரு சிலர் இவ்விஷயமாகத் தென்னாடுகளுக்கும் வடநாடுகளுக்கும் பிணக்குகள் ஏற்படக் கூடுமாயினும், அடிமை முறை அவசியம் ஒழிக்கப்படுவதற் குரியதெனப் பறையறைந்தனர்.

1833-ல் அடிமை முறை விரோதச் சங்கம், போராட்டத்தை ஆரம்பித்தது. தென்னாடுகள் தங்கள் சுதந்திரத்தை வலியுறுத்தின. ஓடிப்போன அடிமைகளுக்கு எவரும் தஞ்சமளிக்கக் கூடாதென்றும், சமஷ்டி அதிகாரிகளிடம் அவர்களை ஒப்படைத்துவிட வேண்டுமென்றும் தென்னாடுகளின் சார்பாக 1850-ல் சமஷ்டிச் சட்டமொன்று இயற்றப் பட்டது. நம்முடைய ஆசிரியையான ஹாரியட் எலிஜபெத் பீச்சர் ஸ்டௌ இக் கொடிய சட்டத்தைப் பலமாக எதிர்த்தாள். நிலைமையைப் பொறுக்க முடியாமல் 1852-ல் தம், உலகப் பிரசித்தி பெற்ற "டாம் மாமாவின் குடி"லை எழுதி வெளியிட்டார். அதுவும் வேலை செய்தது.

வட நாடுகளுக்கும் தென்னாடுகளுக்குமிடையே இருந்து வந்த

மனஸ்தாபம் முற்றியது. 1861-ல் தென் பகுதியைச் சார்ந்த 11 நாடுகள் சமஷ்டியிலிருந்து பிரிந்து வேருெரு சமஷ்டியைச் சமைத்துக்கொண்டன. பின்னர் அவை பழைய சமஷ்டியின் அதிகாரத்திற்குட்பட்ட கோட்டைகளையும் ஆயுதசாலைகளையும் பிடித்துக் கொண்டன. சமஷ்டிக்கு உட்பட்ட வடநாடுகளுக்கும் அதனின்று பிரிந்த தென்னுடுகளுக்கும் போர் மூண்டது. ஜனுதிபதி லிங்க்கன் தென்னுடுகளை முற்றுகையிட்டார். உள்நாட்டுப்போர் நான்கு ஆண்டுகள் நடந்தது. 1863-ல் அடிமை முறை ஐக்கிய அமெரிக்க நாடுகளிலெங்கும் ரத்து செய்யப்பட்டது. 1865-ல் இயற்றப்பட்ட அரசியலமைப்புச் சீர்திருத்தச் சட்டமும் அதை அங்கீகரித்தது. இன்று அமெரிக்காவில் நீகிரோ வெள்ளையருடன் சம உரிமை பெற்றிருக்காவிடினும், மானிடன் என மதிக்கப்படுகிருன்.

இந்த நிலை ஏற்படுவதற்குப் பெரிதும் உதவியளித்த இந்த நாவலின் கதைச்சுருக்கம் வருமாறு.

கெண்டுசி நாட்டில் பெரும் பண்ணைக்காரனுன ஷெல்பிக்குப் பல அடிமைகள் இருந்தனர். ஷெல்பி தம்பதிகள் இரக்கமுள்ளவர்களாதலால், அவர்கள் தம் அடிமைகளைப் பட்சமாகவே நடத்தினர். டாம் என்னும் நீகிரோ அடிமையும் அவன் மனைவி குளோவும் பண்ணையில் ஒரு குடிலில் இல்லறம் நடத்தினர். டாம் நற்குணங்கள் பல வாய்ந்தவன். மிகவும் யோக்கியன்; எசமானனின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவன்; பண்ணையை நிர்வாகஞ் செய்வதில் சமர்த்தன். அவனது நிர்வாகத்தின் கீழ் பண்ணை வேலைகள் யாவும் காலாகாலத்தில் ஒழுங்காக நடந்தன. ஓய்வு நேரத்தில் தம் எசமானன் மகனுன ஜார்ஜிடம் எழுத்துக் கற்றுக் கொண்டான். நாளடைவில் விவிலிய நூல் படிக்கும் ஆற்றல் பெற்றுன்.

டாம் பரம பக்தன். ஏசுநாதரின் ஆணைப்படி வாழ்க்கை நடத்த விரும்பினுன். எலிசா என்பவள் ஷெல்பி குடும்பத்தில் வீட்டு வேலை பார்த்து வந்தாள். எசமானிக்கு அவள் மீது அதிக பிரியம். அவள் தன் சிறு குழந்தை ஹாரிஸ்ஸுடன் வாழ்ந்து வந்தாள். அவளுடைய கணவன், ஜார்ஜ் ஹாரிஸ் மற்ருெரு பண்ணையில் வேலை செய்து வந்தான். தம்பதிகள் எப்போதாகிலும் ஒரு சமயம் சந்தித்துப் பேசுவர். கணவன் ஜார்ஜின் எசமானன் பொல்லாதவன். தன் அடிமைகளின் சந்தோஷத்தைப் பொறுக்க மாட்டான். அவன் தம்பதிகளைப் பிரித்துவிடக் கருதினுன். அன்றியும் ஜார்ஜைக் கொடுமையாக நடத்தினுன்.

ஷெல்பிக்குக் கெட்ட காலம் வந்தது. அவன் மேன்மேலும் கடனில் மூழ்கினுன். கடனை அடைக்கத் தன் அடிமைகளிற் சிலரை விற்க வேண்டிய அவசியமேற்பட்டது. அடிமை வியாபாரி ஹாலியிடம் பேரம் பேசினுன். ஹாலி, டாமையும் எலிசாவின் சிறு மகனையும் விற்கும்படி கேட்டான். ஷெல்பிக்கு வேறு வழியில்லாமற் போகவே இணங்கினுன். பேரத்தின் போது ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்த எலிசா தன் சிறு குழந்தை தன்னிடமிருந்து பிரிக்கப்படப் போவதை அறிந்தாள். அவளால் பொறுக்க முடியவில்லை. பெற்ற

வயிருயிற்றே! இரவோடு இரவாகத் தப்பியோடினுள். சில மைல்களுக் கப்பால் ஒரு கிராமத்தில் தன் மகனுடன் அடைக்கலம் புகுந்தாள். அங்கும் ஹாலி அவளைப் பின் தொடர்ந்து வந்தான். அவள் அங்கிருந்து ஓடி சைம் என்பவரிடம் அடைக்கலம் புகுந்தாள். பின்னர் செனட்டர் பார்ட் வீட்டில் அடைக்கலம் புகுந்தாள். அங்ஙனமிருந்து வருகையில் கணவன் ஜார்ஜும் எசமானனின் குரூரத்தைச் சகிக்க முடியாமல் தப்பியோடி கடைசியில் எப்படியோ எலிசா இருந்தவிடம் வந்தான். தம்பதிகள் சந்தித்தனர். இருவரும் ஹாலி அனுப்பிய ஆட்களுடன் கடும்போர் புரிந்து தப்ப வேண்டியிருந்தது.

இதற்குள் டாம் விற்கப்பட்டான். அவன் குளோவிடமிருந்து பிரிய நேர்ந்தது. ஹாலி அவனை அழைத்துச் சென்று அகஸ்தீன் செய்ண்ட் கிளேர் என்னும் சீமானுக்கு விற்ருன். அந்தச் சீமான் இரக்க முள்ளவன். தன் அடிமைகளை விடுதலை செய்யவே கருதினன். அவனுடைய சிறு பெண் ஈவா அபூர்வப் பிறவி. டாம் அவளுடன் தோழமை பூண்டு ஒழுகினன். இருவரும் தூய உள்ளம் படைத்தவராதலால் பரஸ்பர நட்பு வளர்ந்தது. டாம் ஈவாவுக்கு விவிலிய நூலைப் படிக்கக் கற்றுக் கொடுத்தான். அச் சிறு குழந்தை தெய்வ பக்தியில் சிறந்து விளங்கியது. இறுதியில் தன் ஆத்ம சக்தியைத் தாங்க முடியாமல் உயிர் துறந்தது. தந்தையும் சில நாட்களில் உயிர் துறந்தான். அகஸ்தனின் மனைவி அடிமைகளைச் சந்தையில் விற்க நேர்ந்தது. டாமை சைமன் லெக்ரி வாங்கினன். பருத்தித் தோட்டம் பயிர் செய்த அவன் மகா கொடியவன். தன் பண்ணையில் வேலை செய்த அடிமைகளை மிகக் குரூரமாக நடத்தினன். அவன் காமவெறியன் கூட. ஆயினும் டாம் எசமான விசுவாசம் தவருமல் தன் வேலையைச்செய்தான். ஆனல், எசமானன் சில அடிமைகளைக் கசையால் விளாச வேண்டுமென்று ஆணையிட்ட போது மறுத்தான். எசமான் அவனை இணங்கச் செய்ய பலமாக அடித்தான். டாம் எதிர்க்க வில்லை. இரத்த ஆறு ஓடியது. இறுதியில் டாமுக்கு விமோசன மேற்பட்டது.

ஷெல்பி தன் பண நிலை சீர்பட்டதும் டாமை விடுவிக்கக் கருதினன் ஆனல் தன் கருத்தை நிறைவேற்றுவதற்குள் உயிர் துறந்தான். அவன் மகன் ஜார்ஜ் டாமை மீட்க அவனைத் தேடி 'சைமன் லெக்ரி பண்ணைக்கு வந்தான். அந்தோ! டாமின் சடலத்தையே கண்டான். ஜார்ஜ் கிறிஸ்தவச் சடங்குகளுடன் டாமை அடக்கஞ் செய்தான்.

இதுதான் கதை. இதில் ஆசிரியை அடிமைகளின் வாழ்க்கையை மிகவும் அழகாகவும், தத்ரூபமாகவும் சித்திரிக்கிருள். ஆப்பிரிக்காவிலிருந்து வந்த நீகிரோவர்களின் சந்ததிகளான இவர்களிடம் பல அரிய குணங்கள் காணப்படுகின்றன. முதலாவது குடும்பப் பாசம். ஒரு குடும்பமாக வாழ்ந்த அடிமைகள் ஒருவர் மற்ருெருவரிடமிருந்து பிரிக்கப் பட்டு பல பண்ணைக்காரர்களுக்கு விற்கப்பட்டனர். தாய் குழந்தையிடமிருந்து பிரிக்கப்பட்டாள். மனைவி கணவனிடமிருந்து பிரிக்கப்பட்டாள். இங்ஙனம் பிரிக்கப் பட்டவர்கள் சொல்ல முடியாத துன்

பங்கள் அனுபவித்தனர். துன்பங்களிலிருந்து விடுதலையடையத் தப்பியோடினர். இரண்டாவது வெள்ளையரைவிட இவர்களே கிறிஸ்தவ நெறியைத் தம் வாழ்க்கையில் கடைப் பிடித்தனர். கிறிஸ்துநாதர் சொல்லுக் கிணங்க எல்லாத் துன்பங்களையும் பொறுத்தனர். துன்பங்களிலும் எசமானத் துரோகம் செய்யக் கருதவில்லை. இகலோக வாழ்க்கையில் துன்பம் அனுபவித்தாலும் பரலோகத்தில் கர்த்தனின் காலடியில் இன்புறலாமென நம்பியிருந்தனர்.

ஆசிரியை ஹாலி, சைமன் லெக்ரியைப் போன்ற கொடியவர்களைச் சித்திரித்திருப்பதைப் போலவே, நல்லெண்ணமுடைய எசமானர்களான ஷெல்பியையும் அகஸ்தீன்செய்ட் கிளேரையும் சித்திரித்திருக்கிறார். டாம் அபூர்வப்பிறவி. அவன்தான் சத்தியாக்ரகி. தன்னைச் சாகடித்த எசமானனின் மீது வெறுப்பு காட்டாமல், "இறைவனே இவனைக் காப்பாற்றுங்கள்" என்றுசொல்லி மன்னித்தான். அப்புனித ஆன்மாவை நம் உள்ளத்தில் வணங்குகிறோம்.

இந்நூலைப் படித்த அமெரிக்கர் மனமுருகி, உரு மாறுதலடைந்தனர் எனில், அதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை.

யுத்தகால இலக்கியம்

"சுகி"

தந்தியடிப்பதாகவும், செய்தி பின்னால் தெரிவிப்பதாகவும் மாமனார் எழுதியிருந்தார். நான் தந்தியை எதிர்பார்த்தேன்; கடிதம் வந்தது! "ஏற்கனவே தந்தி கிடைத்திருக்கலாம். ரயிலில் வருகிறேன்" என்று தந்தி போல ரத்தினச் சுருக்கமாக அதில் எழுதப்பட்டிருந்தது. தந்தி மந்தித்தனம் செய்யவே தபாலை நம்பி ரயிலுக்குப் போனால், மூன்றும் நாள் வர வேண்டிய ரயில் வந்து நின்றது! மாமனாரைக் காணோம். ஒரு நாள், இரண்டு நாள் ஆயிற்று. தந்தி வருகிற வழியில்லை. முகமூடியைக் கண்ட விஷவாயு போல், என்னைக் கண்டதும் தந்தி சேவகன் நடுங்க ஆரம்பித்தான்! அவனை மறித்து 'தந்தி வந்ததா?' என்று கேட்காத நேரத்தில், ரயிலுக்குப் போகிறதும், மாமனார் வருகிறாரா எனப் பார்ப்பதும் தான் வேலை.

தந்தியை எதிர்பார்த்து எதிர்பார்த்து கண் பூத்துப் போக, ரயிலுக்கு அலைந்து அலைந்து கால் தந்தியடிக்க ஆரம்பித்தது. ரயிலடி, தந்தி சைக்கள் இரண்டிலும் மோதுகிறதில்லை யென திடசங்கல்பம் செய்த அன்று, இரண்டு தந்திகள் வந்தன. அதில் பதினைந்து நாட்களுக்கு முன் என் மாமனார் புறப்பட்டு விட்டதாக இருந்தது. இந்த அதிசயத்தைத் தான் பதினான்கு நாட்களுக்கு முன்பே தபால் கொண்டு வந்து விட்டதே! மற்றொரு தந்தியில், "ரயில் தவறி விட்டது" என்றிருந்தது.

இரண்டு நாட் கழித்து ஆம வடை வாங்க ஒரு ஸ்டேஷனில் இறங்கியதாகவும், ரயில் முன்னேறி விட்டதாகவும் ஒரு கார்டு வந்தது.

அதற்கு மறுநாள் சாம்பார் சாதம் வாங்க இறங்கியதால், தன்னால் ரயிலில் ஏற முடியவில்லை யென்று கொடுத்த தந்தி நேரே பத்தாம் நாள் வந்தது!

இப்படி அடிக்கொரு தரம் 'ரயில் முன்னேறி விட்டது.' 'நான் பின் வாங்கினேன்' என்று எழுதிக் கொண்டிருந்தார். நூற்றுக் கணக்கான கார்டு கவர்கள். இவ்வளவிற்கும் அவருடைய ஊர் ஐம்பது மைல் தூரந்தான். முதல் தந்தி கொடுத்த நேரே ஐம்பத்தி ஒன்றும் நாள் எங்களூர் ரயிலடிக்கு வந்து சேர்ந்தார். அங்கிருந்து

நாலு பர்லாங்கு தூரமுள்ள என் வீட்டிற்கு மனுஷன் ஒரு ஜட்கா வைத்து வரக்கூடாதா? அதன் மேல் நம்பிக்கை யில்லாவிட்டால் காலாற நடந்து வந்திருக்கலாம். பஸ் ஏறிப் புறப்பட்டவர் நடந்து நடந்து (கரிக் காரைத் தள்ளிக் கொண்டு) நாற்பது மணிக்குப் பின்னல் என் வீட்டிற்குள் படையெடுத்தார்.

வசிஷ்டரோ, வால்மீகியோ என்று சந்தேகப் பட்டோம். அவருடைய மகளே "ஸ்வாமி தங்கள் திருநாமம் என்ன?" என்று தாடியைப் பார்த்துக் கேட்கும்படியாயிற்று.

உடம்பெல்லாம் போண்டா போண்டாவாக (யுத்தகாலத் தேங்காய் அளவு) உப்பிப் போயிருந்தது. நகக் கீறல்களும் கோரைகளும் படர்ந்திருந்தன. கரிக்கார், உடல் முழுவதும் (முகந்தவிர) கரிக்கிஇருட்டடிப்புச் செய்திருந்தது.

"உடம்புக்கு என்ன மாமா?"

"ஒன்றுமில்லையே!"

"ஏதாவது டானிக் கீனிக் சாப்பிட்டீர்களோ?"

"ரயில் பிரயாணத்தால் உடம்பு ஊதிப் போய் விட்டது. இதோ இந்த ஒரு அங்குலக் காயம்."

"வலது கையில் இரண்டு அங்குலக் காயம்!"

"ஒரு அங்குலக் காயம் டிக்கட் எடுக்கும்போது ஏற்பட்டது."

"இரண்டங்குலக் காயம், எதற்குப் பயன் பட்டது?"

"சாம்பார் சாதம் வாங்குவதற்கு!"

"அப்பா பல் எப்போது விழுந்தது" என்று காமு பரிவோடு கேட்டாள்.

"அதுவா யாத்திரையின் பதிமூன்றும் நாள். வெற்றிலை பாக்கு வாங்க பிளாட் பாரத்தில் இறங்க முயன்ற போது பல் வண்டிக்கு வெளியிலும், நான் வண்டிக்குள்ளும் தள்ளப் பட்டோம்" என்றார் பெரியவர்.

"இப்போதுதான் பிரயாணம் செய்யாதே செய்யாதே என்கிறார்களே, ஏனப்பா நீங்கள் பிரயாணம் செய்ய வேண்டும்?" என்று காமு அன்பாகக் கேட்டாள்.

"எனக்கோ ரொம்ப பலஹீனம். அதற்கு ஏதோ ஒரு இன்செக்ஷன் செய்ய வேணுமென்றார் டாக்டர். அந்த மருந்து இங்கே கிடைக்குமென்றதால் புறப்பட்டு வந்தேன்."

"ஐம்பது மைல் ரயில் பிரயாணம் செய்ய ஐம்பத்தொரு நாள் ஆகி விட்டது. இப்போது மருந்து ஸ்டாக் கிடைக்குமோ என்னமோ?" என்றேன்.

"மருந்து என். எனக்குப் பலஹீனம் என்று ஒரு பயலால் இனி சொல்ல முடியுமா? உடம்பு பீரங்கி குண்டு ஆகி விட்டது. இதுதான் நஷ்டத்தில் லாபம்" என்று சந்தோஷப் பட்டார்.

நான் டாங்கு விட்டேன். "மாமா ஊருக்கு எப்போது வாபஸ் ஆகப் போகிறீர்கள்? காலம் ரேஷன் காலம். நீங்கள் தங்குவதாக இருந்தால் அப்படியே ரேஷன் ஆபீஸ் பக்கம் போய், ரேஷன் கார்டு—எத்தனை வாரம் தங்க உத்தேசமோ அத்தனை வாரத்திற்கும்—வாங்கி வந்து விடுங்கள்" என்றேன்.

மனுஷன் முறைத்துப் பார்த்தார், ஜப்பானிய சோல்ஜரை, இந்திய சிப்பாய் முறைப்பது போல. "மாப்பிள்ளை, டன்கர்க் வேலை இங்கே நடக்காது. நான் மின் வெட்டுத் தாக்குதல், கொரில்லா யுத்தம், டாங்குப் படையெல்லாம் ரயில் பிரயாணத்தில் சமாளித்த யுத்தகால சிப்பாய்! இனிமேல் ரயில்வே கம்பெனியார் வந்து 'காசிக்குப் போய் கருமத்தைத் தொலை.' 'ராமேஸ்வரம் போய் பிள்ளை பெற்று வா' 'மதுரையில் போய் மண் சுமந்து பார்' என்று வருந்தி வருந்தி அழைக்கும் போதுதான் நான் ஊருக்குத் திரும்புவேன். அதுவரை இந்த ஊரைவிட்டு, இந்தண்டை அந்தண்டை நகரப் போவதில்லை. இப்போதே தர்ம அறிக்கை விட்டுவிட்டேன்" என்று ஒரு பெரிய பிரகடனம் விடுத்தார்.

அவருக்காக அரிசியும் கட்டையும் (விறகு) தயார் செய்ய நினைத்துக் கொண்டிருந்த சமயம் வி 2 வந்து சேர்ந்தான். "மாமா, இவன் தான் வி 2" என்று அறிமுகப் படலம் ஆரம்பிக்கும் போதே என் மாமனார் மூர்ச்சையாகி விட்டார்.

மின் வெட்டு நேரத்தில் மூர்ச்சை தெளிந்து விழித்த மாமனார் அடிக்கடி தலையைத் தடவினார். அவருக்கு சமீப காலம்வரை குடுமி இருந்திருக்க வேண்டும்; அந்த நினைப்பில்தான் தட்டுகிறார் என்று எண்ணினோம்.

வி 2, "முனி புங்கவ, தாடியும் மீசையும் வைத்திருக்கும் தங்களுக்குக் கடற்கண்ணிக் கிராப் எப்படிக் கிடைத்தது?" என்று கேட்டான். அவன் துப்பாக்கித் தொண்டையிலிருந்து, பீரங்கிச் சிரிப்பு உருண்டோடியது.

"யாத்திரா மார்க்கத்தின் இருபத்தி மூன்றாம் நாட் காலையில் ரயிலுக்குள் கதவோரம் அவஸ்தைப்பட்டு சங்கடப் படுகிறேன். அந்த வேளையில் என் காலை தன் கால் என்று ஒரு கூர்க்க சிப்பாய் நினைத்து பூட்சைக் காணோமென அலற, நெருக்கடி அதிகமாக கதவைச் சாத்தி விட, என் குடுமி கதவுக்குள் அகப்பட்டு அப்படியே நைய்ந்து, முள்ளு முள்ளாக ஆகி விட்டது!" என்று தம் தலையைத் தடவ ஆரம்பித்தார். எனக்கு அழுகையும் சிரிப்பும் வந்தது.

"நீங்கள் வி 2 வா?" என்றார் மாமா.

"உங்கள் மாப்பிள்ளை வி 1. நான் வி 2. இரண்டு பேரும் மகாமகம் போகிறோம். நீங்கள் வருகிறீர்களா?"

“தம்பீ வி 2 உனக்கு ஒன்பது மகாமக (108) நமஸ்காரங்கள். ரயில் பிரயாணம் செய்யாதே செய்யாதே என்பதைவிட என்னைப் படம் பிடித்து ‘ரயில் பிரயாணம் செய்த பின்பு’ ‘பிரயாணம் செய்யு முன்பு’ என்று என்னிரு படங்களைப் போட்டாலே, பெரிய யுத்த சேவை ஆகும். நான் செத்தாலும் ரயிலுக்கு வரமாட்டேன்” என்றார்

தாம் பட்ட பிரயாணக் கஷ்டங்களை மறந்து, வி.1, வி 2 என்றால் என்ன ரகஸிய ஆயுதமோ யென அறிய ஆவல் கொண்டார். எங்கள் பெயர் ‘வி’ என்ற முதலெழுத்து கொண்டதால் வி 1, வி 2, வி 3 எனப் பெயர் வைத்துக் கொண்டோம்! என்றோம். காமுவை மகாமகத்திற்குக் கூப்பிட்டால், அவள் கடற்கண்ணிக் கிராப்பைச் சுட்டிக் காட்டினாள்! அதன் அர்த்தம், பல்லையும், தலை ரோமத்தையும் தான் ரேஷன் செய்து கொள்ள விரும்பவில்லை என்பதே!

“அவரைப்போலவா நாம்?” என்று ஒரு சந்தர்ப்ப குண்டு போட்டான் வி 2.

முடிவில் நான் அவனோடு புறப்படத் தயார் என்றேன். காமு, “அப்பா மாதிரி நீங்களும் மூன்றாங் கிளாசிற்கு டிக்கட் எடுத்து அவதிப்பட வேண்டாம். இரண்டாம் கிளாசில் போங்கள்” என்றாள்.

பெரியவர், “சிவசிவா. நான் சொன்னதெல்லாம் இரண்டாம் கிளாஸில் நடந்தது. மூன்றாங் கிளாஸில் நான் பிரயாணம் செய்ய ஆரம்பித்திருந்தால், இங்கு வந்திருக்கமாட்டேன்; கைலாஸம் போயிருப்பேன்” என்றார்.

அட, ராம ராமா! ரெண்டாங் கிளாஸ் பிரயாணமா? தற்கால மனுஷனை, ரிஷி தோற்றத்தில், டார்வின் தத்துவப் பிள்ளையாக்கி, தற்கால மனிதனுக்குகிறது! மூன்றாங் கிளாஸில் போனால், என்னென்ன உருவ பேதங்கள் ஏற்படுமோ? ஒரு வேளை குரங்குக்கும் முந்திய ஜென்மமான புழு பூச்சியாகப் போய் விடுவானோ?

வி 2, தைரியம் கொடுக்கவே, நான் மகாமகத்திற்குப் போகிறது, காமுவிற்குத் துணையாக அவள் தகப்பனார் இருக்கிறது என்ற் தீர்மானத்திற்கு வந்தோம்.

ஒரு பெட்டி படுக்கையுடன் ஸ்டேஷனுக்கு நடந்து போனேன். கரி பஸ் என் கண்ணிற் பட்டாலும், நான் அதன் சக்கரத்தில் விழாமலும் ‘காமபிளாக்’ செய்து கொண்டு வந்தால் ரயிலடியே மகாமகக் குளம! டிக்கட் எடுக்கிற இடத்தில் வியர்வைக் குளத்தில் ஆயிரக் கணக்கான தற்கால மக்கள் நீச்சலடித்துக் கொண்டிருந்தனர். நான் இடியும் குத்தும், திட்டும் உதையும், அடியும், மிதியும், கல்த்தாவும் கஸரத்தும் பட்டுக்கொண்டு சட்டை கிழிய, அங்க வஸ்திரம் பறக்க, பர்ஸைப் பறி கொடுக்காமல் அஷ்டாவதானம் செய்தேனே யொழிய டிக்கட் கொடுக்கும் ஜன்னலுக்குள் கை கொடுக்க முடியாமல் திணறினேன். கொடுத்துவிட்ட சிலரோ டிக்கட் வேண்டாம் கை வந்தால் போதுமென அலறிய அபாய அறிவிப்பின் ஊளை கேட்டது. ரயிலேறி ‘குப் குப்’ எனக் கிளம்பலாம் என நினைத்தது போக, ஜன சமுத்திரம்

விட்ட 'குப் குப்' மூச்சுத்தான் என்மீது தரித்தது. இதற்குள்ளே, ஜன்னல் பக்கத்திலிருந்து எழுகிற அலைகள் செய்த கிடுக்கித் தாக்குதலால் பின்வாங்குவதும், வெளியே நின்ற கஸரத் வஸ்தாதுகள் "தம்" தாக்குதலால் ஜன்னல் பக்கமாகவும் அலைக் கழிந்தேன். ஒரு மட்டும் என்னைப் பர்லின் ஆக்கி (நசுக்கி) விடவே, வெள்ளைக்கொடியைக் காட்டி நிபந்தனையின்றி சரணாகதி யடையும், நீர்மூழ்கி போல ஜன சமுத்திரத்திலிருந்து வெளியேறினேன்.

வி 2, அப்போதுதான் குடும்பத்தோடு பிளாட் பாரத்திற்குள் போய்க் கொண்டிருந்தான். அவனைத் தொடர்ந்து ஓடிப் போவதற்குள் ரயில் வந்து விட்டது. ஏக களேபரம். பர்மா போர்முனை எப்படியென அங்கே பார்க்க முடிந்தது. அதிகம் சொல்வானேன்? வண்டிக்கு வண்டி, "சார் சார் முதுகைச் சாய்த்துக் கொள்ளுங்கள். மூக்கை வெளியே நீட்டி மூச்சை மட்டும் விட்டு விட்டு உள்ளுக்கு இழுத்துக் கொள்ளுகிறேன்" என்றார்கள் பலரும் பல சுருதியில்.

"சார் நீங்கள் சொரிகிறது என் முழங்கை!"

"அப்படியானால் என் முழங்கை எங்கே சார்?" என்று அலறினார் ஒருவர். இதைத் தொடர்ந்து அணிவகுத்தாற் போல பலகுரல்கள், அண்டம் கிடுகிடுக்கக் கிளம்பின.

வி 2, தம் குடும்பத்துடன் வண்டியில் ஏற ஓடிக் கொண்டிருந்தார்; வண்டி ஓடிய போது நின்று கொண்டிருந்தார். வி 2 வின் பாடே அப்படி. டிக்கட் எடுத்தவர் நிற்கிற காலத்தில் வி 1 (நான்) டிக்கட் எடுக்காமல் எப்படி ஏற முடியும்? அந்தப் படுபாவி வி 3 எப்படியோ தன் குடும்பத்தோடு ஏறி விட்டானே! வி 1, வி 2 வாகிய நாங்கள் இருவரும் வயிற்றெரிச்சல் பட்டோம்.

என்னைப் போல, வண்டியில் ஏற முடியாமல் தவித்தவர்கள் கோடானு கோடி! புருஷன் மட்டும் தொத்திக் கொள்ள, பிரயாணம் செய்ய முடியாமல் தவிக்கிற மனைவியர்களும், மனைவியை மட்டும் ரயில் பிரயாணத்திற் குள்ளாக்கிவிட்டு, பிரயாணம் போக முடியாமல் துடிதுடிக்கும் புருஷர்களும், பெற்றோரைப் பிரிந்து பிளாட் பாரத்தில் குய்யோ முறையோ வென அலறுகிற குழந்தைகளும் இப்படியாக பற்பல ரகமாக விளங்கியது கூட்டம். ஒரு பையனுக்கு விடிந்தால் கலியாணம். அவனைத் தவிர மற்ற பந்துஜன மித்திரர்கள் எல்லாம் கலியாணத்திற்கு ரயில் ஏறி விட்டார்கள். மாப்பிள்ளைப் பிள்ளையாண்டனுக்கு அதுதான் கடைசி வண்டி! இப்படிப் பலரும் அவதிப்பட்டு, வெளியேறும் போது நானும் வந்து சேர்ந்தேன்.

நான் வீட்டிற்குப் போனபோது என்னை அடையாளம் தெரியாமல் காமுவும் மாமனாரும் திணறினார்கள். எனக்கு ஒன்றரைப் புருவம் இல்லை யெனவும், மூக்கில் தேய்பிறை தெரிவதாகவும் சொன்னதை நம்ப வேண்டியதாயிற்று. என் வசம் இருந்த வண்ணான் குறி பாய்ந்த வேஷ்டி சட்டைகள், நான்தான் வி 1, என்று சாட்சி சொல்லின தவிரவும் என் மாமனார் முன் யோசனையோடு வாங்கிக் கொடுத்திருந்த

கார்டு கவர்கள் (ரயில் ஏற முடியாமல் எங்காவது ஸ்டேஷன்களில் அகஸ்மாத்தாக தங்க நேர்ந்தால் வீட்டுக்கு எழுதி அனுப்ப வாங்கி யவை) பிரயோஜனமின்றி வீட்டுக்கு வந்து சேர்ந்தன.

இன்று என் மூக்கையும் புருவத்தையும் பார்க்கும் போதெல்லாம் "பிரயாணம் அவசியந்தானு?" என்பதை அவை பிரசாரம் செய்து வருகின்றன.

'வி 3, மகாமகம் போனவன், மகாமகம் முடிந்து ஒரு மகாமகம் ஆகப் போகிறதே, இன்னும் ஊருக்குத் திரும்பிவரக் காணும். பாவம், அப்படியே மோக்ஷ லோகத்திற்குப் போய் விட்டானே என்னமோ?' என்று போன வாரம் வரை நினைத்தேன். அப்புறம் மதராஸிலிருந்து வந்த தபாலில் அவன் கதை எழுதியிருந்து.

நண்பன் வி 1 க்கு,

மதருஸ் ஆஸ்பத்திரியிலிருந்து எழுதுகிறேன். நீயும் வி 2 வும் பாக்கியசாலிகள். மகாமகம் ஊரில் நான் இறங்க முடியாமல் தவித் தேன். எப்படியோ என் பையன்கள் இருவர் மட்டும் இறங்கி தொலைந்த குழந்தைகள் விடுதிக்குப் போய் விட்டார்கள். மற்றப்படி நான், மனைவி பெண் குழந்தை மூன்று பேரும் ரயிலை விட்டு இறங்க முடியாமல், நாங்கள் ரயிலுக்குள்ளேயே சென்ற மூன்று மாதகால மாக ரயில் போகிற இடமெல்லாம், போய்க் கொண்டிருந்தோம். எங் காவது இறங்க விட்டால் தானே! போன வாரம் மதராஸில் இறங்கும் போது பெண் குழந்தை ஒன்றுதான் இருந்தது. சென்ற மூன்று மாத காலமாக என்னருகில் என் மனைவி யென்று நினைத்து வந்தவள் மதரா ஸில் இறங்கியதும் பார்த்தால். அவள் யாரோ என்னைப் போல இறங்க முடியாதவள். என் மனைவி எங்கு இறங்கினளோ, நாளது வரை தெரியவில்லை. மதராஸில் நான் இறங்க முடிந்தது—என் இறக்க முடிந்ததே என்று கூடச் சொல்லலாம்! தலை பிழைத்தது தம்பிரான் புண்ணியம் என்ருகி விட்டது. தலையைக் கொண்டு பலகையில் மோதி ரத்தக் களறி செய்தேன். ரத்த வெள்ளம் பெருக் கெடுக்கவே, என் னையும் குழந்தையையும் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனுர்கள். சௌக்கியம்.

வி 2 வைக் கேட்டதாகச் சொல். என் பையன்கள் இருவரும் மனைவியும் பெண் குழந்தை இரண்டு பேரும் ஊருக்கு வந்து சேர்ந்தால் அவ்விவரம் எழுது. இன்னும் ஒரு வருஷம் ஆகுமென்றும் அதன் பின்னுல்தான் ரயில் பிரயாணம் செய்யக் கூடுமென்றும் டாக்டர் அபிப்ராயம். இந்த ஜன்மத்தில் ரயில் ஏறுகிறது இல்லை யென்பதும் என் அபிப்ராயம். தலை வணக்கம் உனதன்புள்ள

வி 3.

வி 1, வி 2, வி 3, இவர்களுக்குள் யார் வீரன்? தீரன்? தலையோடு வெற்றி வீரனுக ரயில் பிரயாணம் செய்த என் மாமனுர், ஒரு ரஷ்ய வீரன் போல காட்சி யளிக்கிருர். இப்போது என் பணத்தை அழித் துக் கொண்டிருக்கிருர்.

யுத்த மெப்போ முடியும் — ரயில்
சத்த மெப்போ கேட்பார்?

8. கயவன் வேலை

தமிழ்மணி மேல் மக்வாடர் கடுஞ் சினங் கொண்டான். "வெட்டிப் போடுவேன் சுட்டுப் போடுவேன்; டாமில் ராஸ்கல்" என்று மக்வாடர் பீரங்கியாகக் கிளம்பினான். அவனுக்கு முன்னே அடிமை வேலை செய்த கூலித் தமிழனைப் பிடித்தான். அந்தத் தமிழன் அந்தக் கயவன், துரோகி; ஈரமற்ற வஞ்சகன்; கஜப் புளுகன்; கோளேற்றிக் குடியைக் கெடுக்கும் அயோக்கியன், குடிகாரன்; அவன் ஆங்கிலம் நன்றாகப் பேசுவான்; அன்னியரைக் குல்லாப் போடுவான்; தன்னவரைப் பழிப்பான்; நம்பின பேர் கழுத்தை அறுப்பான்; சிண்டு முடிப்பான்; யாராவது இருவர் நேசமாயிருந்தால் அவனுக்குப் பிடிக்காது; பொறாமைத் தீயில் அவன் மனம் எப்போதும் வேகும்; அத்தீயை அகம்பாவமும் தூண்டிவிட்டால் கேட்க வேண்டுமா? இந்தப் பொறாமைக் கயவனுக்குத் தமிழ்மணியின் புகழ் பிடிக்கவில்லை. இப்புலவன் ஈப்போவில் சிலகாலம் இருந்து வெள்ளையனைக் கெடுத்தான். தனக்கு வசிய மந்திரம், மயக்க மைகள் தெரியுமென்று பல வாலிபர்களைக் கண்ட கண்ட தாசிகளிடம் சேர்த்துவிட்டு அட்டூழியம் செய்த இந்தக் கயவன் தமிழ்மணியை எப்படியாவது கெடுத்துவிடச் சூழ்ச்சி செய்தான். அதற்கேற்றபடியே மக்வாடரும் லில்லியும் இவனை அடிமைப் படுத்திக் கொண்டனர். மனிதன் நாக்கிற்கும் காமத்திற்கும் அடிமையாயிருக்குமட்டும் அவனைச் சனியன் பிடித்தாட்டக் கேட்க வேண்டுமா? லில்லி அவனுடன் கை குலுக்கிப் புன்னகை புரிந்து உடலை ஒரு குலுக்குக் குலுக்கினதுமே ஆள் மோகித்துப் போனான்; மக்வாடர் ரொட்டியும் புட்டியும், ஜாமும், ஜெல்லியும் வாங்கித் தந்து வெறியேற்றி விட்டான். கயவன் துரையின் சுட்டி வாலாய் விட்டான். இங்கே வந்து தமிழ்மணி முன் வாயெல்லாம் பல்லாகி முகமன் கூறி தட்டிக் கொடுத்து "தமிழ்மணி, தமிழே உலகமொழி; விடாதே தமிழை; நானிருக்கிறேன்; உனக்கு என்ன வேண்டுமானாலும் செய்கிறேன்; நம்மை நம்பு" என்று நயமாகப் பேசி, அவன்

மனதைப் பறித்துச் செல்வான். அங்கே லில்லி – மக்வாடரிடம் வம்பளந்து சிரிப்பான்.

கயவன் : ஹ ஹ ஹ லில்லி கேட்டாயா? டாமில் சுத்தப் பைத்தியம். டாமிலே உலக மொழியாம். அதை எல்லாரும் கற்க வேண்டுமாம். டாமில் பழைய கால பாஷை; டாமில் பேசுவோர் இரண்டரைக்கோடியே. ஆங்கிலமே உலகமொழி. பல கோடி மக்கள் ஆங்கிலம் பேசுகிறார்கள். ஆங்கிலப் பாட்டே பாட்டு. இங்கிலீஷே பாஷை; அதைக் கற்றால் உலகெல்லாம் உறவுதான். டாமில் என்ன பயன்?

மக்வாடர் : சபாஷ் நண்பா கை குலுக்கு (ஷேக் ஹாண்டு) டாமில் அநாகரிக பாஷை தானே?

கயவன் : சுத்த அநாகரிக பாஷை.

மக்வாடர் : இந்தியரே கறுப்பு மனிசன்; அநாகரிகக் காட்டு மிராண்டிகள். மெய்தானே?

கயவன் : ஒ எஸ், வெல்வெட்; ஆமாம், உண்மைதான். ஆங்கிலேயரே இந்தியருக்கு வேட்டி கட்ட சொல்லித் தந்தார்கள். மிஷநரிகளே கடவுள் உண்டு, சத்தியம் பேசு, தருமம் செய் என்று உபதேசித்தனர். பாதிரிகள் இல்லாவிட்டால் பாவிகளுக்குக் கதியில்லை.

லில்லி : அப்படியா? இவ்வளவு அநாகரிக நாட்டினரைப் பற்றி ஒரு புத்தகம் போட வேண்டும். நமது நண்பர் Dragon (தியாகராஜன்) அதற்கு வேண்டிய விஷயம் சேர்க்க வேண்டும்.

நமது இந்தியப் பெயர்கள் வாயில் நுழையாமல் அவற்றை அன்னியர் எப்படி எப்படியெல்லாம் கொலை செய்திருக்கிறார்கள்! சென்னை மெட்ராஸ், திரிசிரபுரம், டரிச்சினபோலி, மதுரை, மெடுரா, தஞ்சை நகர், டாஞ்ஜூர், உதகமண்டலம் உடகமண்டு, புத்தன் புட்டா, சீதை சீடா என்றெல்லாம் ஆனது போலவே தியாகராஜன் டிராகன் ஆனான். ஆனால் இந்தக் கயவனுக்கு அந்த அழகான தமிழ்ப் பெயர் தகுதியில்லை அவன் குணத்தில் கடுவிடப் பாம்பே! டிராகனே; நாம் அவனைக் கயவன் என்றே அழைப்போம்.

மக் : சரியான யோசனை மை லவ்லி; இந்த டாமியின் நாட்டாரை உலகம் சிரிக்கும்படி ஒரு புத்தகம் எழுதினால் உலகெல்லாம் நமது புகழும் பரவும். அதற்கு நான் விஷயங்கள் சேர்க்கிறேன்; நீ பேனா நாட்ட வேண்டும். பெண் பிள்ளை பெயர் போட்டால் நூல் விரைவாக விற்கும்.

லில்லி : ஆனால் அதற்கு நாம் ஒரு முறை இந்தியாவுக்குப் போய் வரலாமே. அங்கே காட்டு மிராண்டிகளைப் படம் பிடிக்க வேண்டும்.

கய : வேண்டவே வேண்டாம்! அம்மா – நான் இருக்கிறேன்; எல்லாம் இங்கேயே ஏற்பாடு செய்கிறேன். இங்கு நாம் காணும் இந்தியரைவிட அங்கிருப்பவர்கள் சுத்த மோசம்.

மக் : அப்படியானால், இன்றே படம் பிடிக்கலாமே. புத்தகத்தில் இந்த மாதிரி எழுத வேண்டும்.

(1) இந்தியர் சுத்தக் காட்டு மிராண்டிகள். இவருள் தமிழர் மிகப் பழைய காட்டு மிராண்டிகள். எல்லாரும் அட்டக் கரி;

குள்ளை ; இவர்களுக்கு ஐரோப்பிய பாதிரிமாரே வேட்டியுடுத்தப் பழக்கினர். பிறகுதான் இலை தழைகளை உடுத்துவதில்லை.

(2) இந்தியருக்குச் சாப்பிடவே தெரியாது. பச்சை ஊனைத் தின்பார்கள் ; இலை, தழை, காய், கனிகளை உண்டு காட்டுக் குகைகளில் முண்டமாக உட்காருவதே இவர்கள் சிறந்த நாகரிகமாகக் கருதுகிருர்கள். அப்படிப்பட்ட தடி முண்டச் சிலைகளை இவர்கள் சாமி பூதம் என்று கும்பிடுகிருர்கள். இந்துக்களுக்குக் கடவுள் உண்டென்று கற்பித்ததே வெள்ளைக்காரர். காருண்யமுள்ள ஐரோப்பியர் இவர்களைக் குசினி வேலையிலும் ஒப்பந்தக் கூலி வேலையிலும் அமர்த்தி—நாகரிகம் கற்பித்தார்கள். பிறகுதான் இந்தியர் சட்டை போடக் கற்றனர். மெய்தானே ட்ராகன்?

கய : அத்தனையும் வேதவாக்கு ஆனல் இது போதாது. இந்தியர் சுத்த தரித்திரர்கள் படிப்பே கிடையாது. ஒரு தொழிலும் செய்யாமல் சோம்பேறித் தனமாகப் பிச்சை யெடுப்பார்கள். உதாரணமாக அண்ணுமலை திருப்பதி தலங்களில் திரியும் பரதேசிகளையும், பிச்சைக் காரரையும் படம் பிடித்துக் காட்டலாம். படங்களை நான் வரவழைக்கிறேன். எனது நண்பன் வெள்ளையன் (Mr. White) அங்கே இருக்கிருன். அவனுக்கு இப்படி விஷயங்களில் உற்சாகம் அதிகம்.

லில்லி : ஓ எஸ்—உடனே செய். டிராகன், இந்தியர் பெண்களை நடத்தும் விதத்தைத் சரியான படி படம் பிடித்துத் தருவாயா?

கய : ஆஹா சிரிப்பும் எரிப்பும் வரும்படியாகப் படம் பிடிக்கிறேன்.

லில்லி : டிராகன், பெண் என்ருல் இந்தியர் மிகவும் இழிவு செய்கிருர்களாமே? மிஸ் பொய்யே எழுதிய நூலைப் படித்தேன். பெண்பிள்ளைகளை முதலை வாயில் போடுவார்களாம், குழியை வெட்டிப் புதைப்பார்களாம்; கணவன் இறந்தால் தலையைச் சீவுவார்களாம். பட்டினி போட்டுக் கொல்வார்களாம்.

கய : அந்தக் கொலையை ஏன் கேட்கிறீர் அம்மா? பெண் பாவம் பெரிய பாவம். பெண் பிறவியே பெரும் பாவமாம். பெண்ணுக்கு மோட்சமில்லையாம்; பெண் படிக்கக் கூடாது; அந்தப்புறம் இந்தப்புறப் பார்க்கக் கூடாது. இந்தியப் பெண்கள் கட்டைவிரலைப் பார்த்தே நடக்க வேண்டும். ஏராளமான பணமும் சீரும் தந்தாலே ஒருவன் பெண்ணை மணப்பான். அவன் குஷ்டரோகியானுலும் அவள் வேறு முகம் பார்க்கக் கூடாது. பெண் வீட்டை விட்டுக் காற்ருட வெளியே வந்தால், பிற புருஷர்கள் பார்ப்பார்களாம். உடனே கற்பு கெட்டுப் போய் விடுமாம்.

லில்லி : அதென்ன கற்பு? கற்பு என்ன விலை. எப்படியிருக்கும்?

கய : தங்களுக்கு எதற்கம்மா கற்பும் இழவும்? இந்தக் கற்புத்தான் இந்தியப் பெண்களின் சுயேச்சையைக் கெடுக்கிறது; கற்பை மட்டும் ஒழித்து விட்டால் காற்றுத்தான்!

லில்லி : மிஸ்டர் டிராகன் நான் கற்பை ஒழிக்கிறேன். லைஸென்ஸ்

1 6 7 9 3 4

துப்பாக்கி என்னிடம் உள்ளது. காட்டு கற்பை —

கய : அம்மா கற்பு துப்பாக்கியால் ஒழியாதே — அதை ஒழிக்கத்தான் நானும் சென்னையிலும் ஈப்போவிலும் சிங்கையிலும் வாலிபப் படைகளைத் திரட்டி மன்மத பாணங்களைத் தூண்டி விட்டேன். இந்த இழவு தமிழருக்கும் தமிழச்சிக்கும் இன்னும் கற்பு மிதமிஞ்சி யிருக்கிறது. தாசி வேசி என்பவர் கூடக் கற்பு வலையில் பட்டுப் பதிவிரதைகளாய் விட்டார்கள். ஆதலால் அம்மையே தங்கள் திருக்கரத்தால் இந்தக் கற்பை ஒரு விளாசு விளாசி விட வேண்டும்.

லில்லி : நன்றாக விளாசுகிறேன். இந்திய விதவைகள் நிலை மிக மோசமாமே!

மக் : மை டியர், விதவைகள் படும் பாட்டைப் பற்றியே பத்து விநோதமான நூல்கள் எழுதலாமே. எனக்குத் தெரியும். கணவன் இறந்து பாடையில் வைத்ததும், அவன் மனைவியை இந்தியர் மற்றொரு பாடையில் வைத்துக்கட்டி இரண்டையும் தீயில் போட்டு எரிப்பார்கள். அப்படிக் கணவனுடன் எரிந்த பெண்ணுக்குச் சிலை செய்து கோயிலில் கும்பிடுவார்கள். அவள் எரிந்த சாம்பலைச் சாப்பிடுவார்கள்.

கய : உண்மை இதாவது பரவாயில்லை: கட்டை ஒரு நாளில் போய் விடுகிறதே; இப்போது நடப்பது பெரிய கொடுமை; இந்துக்கள் விதவைகளின் கூந்தலை எடுத்து, முக்காடு போட்டு இருட்டு மூலையில் அடைக்கிறார்கள். அவள் அந்த மூலையில் அந்தி சந்தி அழ வேண்டும். மற்ற நேரங்களில் மாடு மாதிரி வீட்டு வேலை செய்ய வேண்டும். ஒரு வேளையே பலகாரம் உண்ண வேண்டும். ஆண் முகமே பார்க்கக் கூடாது; நெற்றியில் சாம்பலைப் பூசவேண்டும். ஒரு விதவை வயதின் ஆசையால் எவனுடனாவது தவறினால் சித்திரவதைதான். அவளை வீட்டை விட்டே ஓட்டுவார்கள். இரகசிய சும்பந்தத்தால் கருவுற்றுப் பிள்ளை பிறந்தால் சாக்கடையில் தூக்கி எறிவாள் அல்லது தூக்குப் போட்டுக் கொண்டோ குளத்தில் விழுந்தோ சாவாள் — இந்தியக் குப்பைத் தொட்டிகளிலெல்லாம் சிசுப் பிணங்கள் கிடக்கும்.

லில்லி : கொடுமை கொடுமை; நாம் இங்கே ஒரு குப்பைத் தொட்டியில் குழந்தையை வைத்துப் படம் பிடிப்போம். அதை ஒரு கிருஸ்துவப் பாதிரி எடுத்துக் காப்பதாகக் கதை கட்டுவோம்.

கய : விதவை மறுமணம் புரியக் கூடாதாம். ஆண்களையே நினைக்கக் கூடாதாம்.

லில்லி : எந்த ராஸ்கல் இப்படிச் சட்டம்போட்டது; அவன் எழுதின புத்தகத்தைப் பொசுக்க வேண்டும். நான் ஐந்து கணவரை மணந்தேன், இருவர் என்னை விலக்கினர்; மூவரை நான் விலக்கினேன். இதோ ஆறாவதாக மக்வாடருடன் இன்பம் அனுபவிக்கிறேன். மைடியர் மக்வாடர் — ஆஹா ஹா மைடியர் மை லவ்லி—மக்வாடர்.

மக் : மை லௌலி லில்லி.

[முத்தமிடுகிறான்]

லில்லி : பார்த்தாயா இஃதன்றே நாகரிகம். கணவன் இறந்தால் கணவருக்கா பஞ்சம். காதலே வாழ்வு; காதல் சுதந்தரமே முதற் சுதந்திரம்; அச்சுதந்தரம் இல்லாமல் பெண்ணின் மூச்சை அவிக்கும் ஜாதி, காட்டுமிராண்டியை விடக் கேவலம். டியர் டிராகன் எனக்கு விதவைக் காட்சிப் படங்கள் பல வேண்டும்.

கய : அதற்கென்ன; என் தங்கை ஒருவள் விதவை, நாடகத்தில் நடிப்பவள்; அவளைக்கொண்டே படம் பிடித்து விடுவோம்.

லில்லி : விதவையின் தலையை அம்பட்டன் சிரைப்பதாகவும்; அவனை அவள் காதலால் தழுவிக் கொள்வதாகவும்; அவன் அவளைக் கூட்டிக் கொண்டு ஓடுவதாகவும்; உறவினர் தடி கொண்டு துரத்துவதாகவும்; பிறகு அவளுக்குப் பிள்ளை பிறந்து குப்பைத்தொட்டியில் வீசுவதாகவும்; ஒரு பிரிட்டிஷ் போலீஷ் உடனே அவளைப் பிடித்துச் செல்வதாகவும் — பிள்ளையை ஒரு கிருஸ்துவப் பாதிரி வளர்த்து நாகரிகம் கற்பிப்பதாகவும்; இந்தப் பையனே பிறகு இந்து மதத்தின் கோரத்தை எழுதுவதாகவும் நூலை அமைக்கப் போகிறேன்.

மக் : ஹல்லோ லில்லி — நல்ல நாவல், நல்ல சரித்திரம். கொள்ளைப் பணம் அடிக்கலாம். இப்போதே விளம்பரம் செய்து விடுவோம். "Indian Barbarty" "இந்திய அநாகரிகம்" என்று நூலை அழைப்போம். அதற்கொரு இந்தியனே முகவுரை எழுதினால் நல்லது.

கய : இதோ நான் இருக்கிறேன். நூல் முழுதும் அரிச்சந்திர வாக்கு என்று தீட்டி விடுகிறேன். அவ்வளவுதானே?

லில்லி : இன்னொரு முக்கியமான விஷயம் இருக்கிறதே. இத்தனையும் இந்த டாமி நாயை அவமானப் படுத்த அல்லவா செய்வது. ஆதலால் டாமில் பாட்டும் இந்தியப் பாட்டும் கேட்க முடியாத சந்தைக் கூச்சல் என்று வர்ணிக்க வேண்டும்.

மக் : அத்துடனு நிற்பேன். நாய், கழுதை, தவக்களை, ஆந்தைக் குரல் உள்ள சில கூலிகளைப் பிடித்து ஆபாசப் பாடல்களைச் சொல்லி வைத்து, இசைத் தட்டெடுப்பேன். இதுவே டாமில் பாட்டு என்று உலகெல்லாம் கேட்டுச் சிரிக்க வைப்பேன். அல்லது ஹ ஹ ஹ த்ரனனு அசுசு என்று ஒரு வலிப்புக்காரன் இழுக்க ஒரு வாந்திக்காரன் குரலையும் சேர்த்துப் பிடித்து டாமில் பாட்டு என்று காட்டி எல்லாருக்கும் அசூயை பிறக்கச் செய்வேன்.

கய : இவ்வளவேன்; நான் பாடினாலே போதாதோ. நானே நாய், கழுதை, நரி, ஆந்தை எல்லாம் சேர்ந்த குரலில் பாடுவேன். என்னை மகா வித்வான் என்று விளம்பரப் படுத்துங்கள்.

மக் : ஆகா — விண்ணினுல் ஆகாதது கூட விளம்பரப் படுத்தினுல் ஆகுமே! சரி தீர்மானமாயிற்று. இன்னும் ஒரு மாதத்தில் புத்தகம் வரவேண்டும். இந்த டாமி ஜாதியை அவமானப் படுத்த வேண்டும். ட்ராகரன்!

கய : நான் தயார்.

லில்லி : சரி இன்று ஷாம்பைனும் இறைச்சியுணவும் தருவோம்.

இந்த மாதிரிப் பேசி முடித்து தமிழ்க் கயவனை விஷப் பாம்பு அந்த வெள்ளைக் காதலருடன் சேர்ந்து மலேயாவில் ரப்பர் தோட்டம், ஈயச் சுரங்கம் முதலான இடங்களுக்கெல்லாம் புகைப் படக் கருவியைத் தூக்கி அலைந்தான்.

9. கயவன் திருந்தினன்

துணிந்தவர்களுக்கே உலகம். அதிலும் நம்மவருக்குத் தைரியமும் வீரமுமே முதற் பாடமாக வேண்டும். பசுவுக்குப் புலி பணிவை உபதேசித்தால் பசுவே கொம்பினல் அந்தப் புலியை முட்டு என்று நாம் போதிக்கவே வேண்டும். நம்மை அடிமை செய்ய வருபவர் நமக்கு முதலிற் கற்பிக்கும் பாடம் பணிவுதான்: முதலில் கடவுளுக்குப் பணி; பிறகு நானே கடவுளின் பிரதிநிதி எனக்குப் பணி; அடுத்த பாடம் என்னைக் கண்டதும் குனிந்து கொள்; குனிந்ததும் குதிரை ஏற வேண்டியதுதான்; பிறகு விடுதலை ஏது? அடிமை வாழ்வே கதி; இந்தியர் தலை நிமிர்ந்து நடக்க வேண்டும்; உலகில் நாமும் மனிதர்; மற்ற மனிதருக்குள்ள சக்தி நமக்கும் உண்டு என்று காட்ட வேண்டும். மனச்சாட்சிதான் மனிதனுக்குச் சட்டம்; அதன்படி நடப்பதே சன்மார்க்கம், மெய் வழி; மனச் சாட்சிக்கு விரோதமாக நடப்பதே துன்மார்க்கம் அடிமை வழி. இந்த அடிமைவழி பல அழகான பளபளப்பான வழிகளில் சிரித்துக் கொண்டும், கொஞ்சிக் குலாவிக் கொண்டும் வந்து ஆளின் கழுத்தைப் பிடித்து நெட்டிக் குனிய வைத்துக் குதிரை ஏறும்; இதனிடம் நாம் கவனமாயிருந்து சிலம்பமடித்து விரட்ட வேண்டும். இடது பக்கத்திற்கு வலது பக்கம் தந்து விரட்டியடித்தா லொழிய அடிமை நோய் விடாது. இந்த அடிமை நோய் நம்மைப் பிடித்ததற்குக் காரணம் அந்தக் கயவனைப் போன்ற பதர்கள் சிலர் நம்மிடையே இருப்பதனாலேதான். தமிழ்மணியும் பொன்னம்பலமும் ஒருநாள் சிங்கப்பூர் ரப்பர் தோட்டத்தில் தமிழ்க் கூலிகளுக்கு நல்ல பாட்டுப் பாடிப் பிரசாரம் செய்யச் சென்றனர். அப்போது கயவன் புகைப்படக் கருவியுடன் அங்கே திருவிளையாடல் செய்து கொண்டிருந்தான். சில பெண்களைத் துடையளவு இலைகளைக் கட்டிக் கொள்ளச் சொல்லியும், சிலரைக் கந்தை உடுத்தச் சொல்லியும் சில கூலிகளைக் கோவணம் கட்டச் சொல்லியும், சிலரை எலும்பு மாலைகள் போடச் சொல்லியும்—படமெடுத்துக் கொண்டிருந்தான். தமிழ்மணி உடனே அவன் கருத்தை அறிந்தான். புகைப் படத்தின் முன்னே நின்று கொண்டான்.

கய: என்ன தமிழ்மணியாரே தங்கள் கலைப்பணி எப்படியிருக்கிறது?

தமிழ்: உன்வேலை எப்படி யிருக்கிறது? பக்கா வேலை செய்கிறாயே. எங்கே உன் படங்களைப் பார்ப்போம்.

கய: நான் இந்திய நாகரிகத்தைப் படம் பிடிக்கிறேன். அமெரிக்காவிற்கு அனுப்புவேன்.

தமிழ்: எங்கே நீ பிடித்த நாகரிகப் படங்களைப் பார்ப்போம்.

கயவன் மிகவும் பெருமையுடன் தனது தோல் பையைத் தமிழ்மணியிடம் தந்து உள்ளே பார்க்கச் சொன்னான். உள்ளே மற்றொன்று இருந்ததைக் கயவன் கவனிக்கவில்லை. அதுதான் மக்—வில்லியின் குறிப்புகள். அக்குறிப்புகளில், அத்தியாயம் I, II, III, IV, V என்று போட்டு இந்தியர் காட்டுமிராண்டிகள், இந்தியப் பெண்களின் இழிவும் பரிதாபமும், விதவைக் கொடுமை, விபசாரக் கொடுமை, சிசுக்கொலை, குப்பைத் தொட்டியின் கதை—நிர்வாண இந்தியா—நிர்மூட இந்தியா; இந்தியரின் கோவணச் சாமிகள், பாதிரிமார்களின் வேலை, இந்தியாவின் கதி மோட்சம் வெள்ளைக்காரருக்கு வணங்கி நடப்பதே—என்றெல்லாம் குறிப்புகளில் எழுதியிருந்ததைப் படித்ததும் தமிழ்மணி மக்வாடரின் சூழ்ச்சியை அறிந்தான்; பிறகு படங்களைப் புரட்டினான். பார்க்கப் பார்க்க மனம் புண்ணானது. இந்தியர் சாமிகள் என்ற படங்கள் ஒன்றில் சட்டிச் சாமி போன்ற உருவத்தைக் கண்டு மனம் திடுக்கிட்டான். எல்லாம் வீட்டில் வைத்து ஆராய வேண்டுமென்று தமிழ்மணி படப் பெட்டியை மெல்ல பொன்னம்பலம் நண்பர் வீட்டிற்கனுப்பி விட்டான். உடனே சுருதி கூட்டி பாடத் தொடங்கினான். கூட்டம் சேர்ந்தது; படம் பிடிக்க இருந்த கூலிகளும் சட்டென்று ஆடையணிந்து பாட்டைக் கேட்க ஓடி வந்தனர். கயவன் பொறாமை கொழுந்து விட்டெரிந்தது. வயிற்றெரிச்சலுடன் கேட்டுக் கொண்டேயிருந்தான். ஏழைக் கூலிகள் பாட்டில் சொக்கிப் போனார்கள். பிறகு பொன்னம்பலம் அவர்களுக்குச் சில மொழிகள் பேசினான். "தோழர்காள், இப்போது பாடியவர் தமிழ்மணி ஏழைகளிடம் இரக்கமுள்ளவர்; நாட்டன்பர்; கலைப் புலவர்; பணக்காரர் பணங் கொடுத்துப் பாட்டுக் கேட்கவே அவர் இன்று பாடினார். அவர் பாட்டின் கருத்து மனிதர் அனைவரும் ஒரே குலம்; சாதி மத நாடு நிறபேதமெல்லாம் மன விகாரம். இந்த விகாரமில்லாமல் எல்லாரும் உலகில் உழைத்து உண்டு சேர்ந்து வாழ உரிமையுண்டு; மனிதரை மனிதர் தாழ்வாக நினைத்து அடிமை செய்வது கொடுமை. அடிமைத்தனத்திற்கு இடந்தராமல் எல்லாரும் கவனமாயிருங்கள் ஒரு சிலர் உங்களைப் படம் பிடிக்கத் திரிந்து கொண்டிருக்கின்றனர். அரைக்கால், வீசம் கொடுத்து உங்களை அநாகரிக வேடம்போட்டுப் படம்பிடித்து இந்தியர் காட்டு மிராண்டிகள் என்று வெள்ளைக்கார நாடுகளில் பிரசாரம் செய்ய இந்தக் கயவர்கள் துரோக வேலை செய்கிறார்கள். இவர்களைக் கிட்ட வரவிடாதீர்கள். இவர்கள் படம் பிடித்தால் படக்கருவியைக் கைப்பற்றித் துரத்துங்கள்—"

இதைக் கேட்டதும் கயவன் முகம் கோப நெருப்பானது. கூட்டம் முடிந்ததும் 'அடே தமிழ்மணி தாடா என் படப்பெட்டியை" என்று வழிமறித்தான்.

தமிழ்: நண்பரே தாங்கள் இந்திய நாகரிகத்தை, அதிலும் நமது தமிழர் நாகரிகத்தை அருமையாகப் படமெடுத்தீர்கள்; படங்களை அமைதியாகப் பார்த்துத் தங்களுக்குச் சன்மானம் செய்வோம் தயவு செய்து தாங்கள் எங்களுடன் வாருங்கள்.

கயவன் நெஞ்சு படபடக்க உடன் சென்றான். தமிழ் மணி மாலைக்கடன்களை முடித்து அரைமணி நடராஜர் முன்னே தியானித்துப் பிறகு பஜனைசெய்து படங்களைத் தனியே பார்த்தான்; அதிலிருந்த மக்வாடர் குறிப்புகளை மறைத்து வைத்தான்; சட்டிச் சாமியார் படத்தை நடராஜர் பக்கத்தில் வைத்தான். பிறகு நண்பருடன் ஒரு தனி அறையிற் புகுந்து பொன்னம்பலத்திடம் படங்களைக் காட்டி மனங்கொதித்தான். பிறகு கயவனை உள்ளே அழைத்து, படங்களைக்காட்டிக் கண்டித்தான். விதவைப் படங்கள் முழுதும் அவன் தங்கையின் வடிவம். தங்கையைத் தொட்டிழுப்பவன் மக்வாடர். அதைக் கண்டதும் தமிழ் மணி ஆத்திரங் கொண்டான்.

தமிழ் : நண்பா, தியாகராசா, இந்தப் படங்களின் நோக்கமென்ன? யார் உன்னை இப்படியெல்லாம் வெட்கங்கெட்ட படம் பிடிக்கச் சொன்னது?

கயவன் : என் நானே இந்திய நாகரிகம், தமிழர் வாழ்க்கை என்ற நூல் எழுதி வருகிறேன்; அதற்காகவே படம் பிடித்தேன்.

தமிழ் : இந்தியத் தமிழர் நாகரிகம் இப்படித்தான் இருக்கிறதோ! பாவம் சோற்றுக் கில்லாமல், இடுப்பிற் கில்லாமல் வருந்தும் ஏழை யெளியவர்களை நீ இப்படியா அவமானப் படுத்துவது? நம்மவருக்குப் பாதிரியார் ஆடை தந்துதான் வேட்டி கட்டத்தெரிந்ததோ? இந்த வெள்ளைக்காரர் 500 ஆண்டுகளுக்கு முன் எப்படியிருந்தனர்? 6000 ஆண்டுகளாக நம்மவர் சீரும் சிறப்புமாக வாழ்கின்றனர்; உலகிற்கே நமது தமிழ் நாட்டுக் கப்பல் வணிகர் ஆடை தந்தனர்; நம்மவரே முதன் முதல் கலையும் இலக்கியமும் செய்தனர். நமது துறவிகளையெல்லாம் இப்படியா அவமானப் படுத்துவது? சட்டிச் சாமியாரை நீ எங்கே கண்டாய்?

கயவன் : அந்தத் தொங்கிச் சாமி கோலாலம்பூரில் இருந்தார்.

தமிழ் : சரி நான் அவரைக் காண்பேன். உனது தங்கை தானே இந்த விதவைப் படங்களில் விளங்குகிறாள். அவளை அந்த மக்வாடர் தொட் டிழுப்பதும் உன் வேலையோ?

கயவன் : அவள் என் தங்கையா? ஒருவருக்காக அவளை நான் அழைத்து வந்தேன்; அந்த ஆள் வந்ததும் அவள் அவரிடம் இருப்பாள்.

தமிழ் : சரி இந்த வேலையும் பண்ணுகிறாயா? இந்த நிர்வாணப் படங்களை ஏன் பிடித்தாய்.

கயவன் : இந்தியரின் அம்மண அசங்கியத்தைக் காட்ட.

பொன்னம் : நீ தமிழனுக்குப் பிறந்தாயா? வெள்ளைக் காரனுக்குப் பிறந்தாயா?

கயவன் : தமிழனுக்கு.

பொன்னம் : தமிழனுக்குப் பிறந்த தமிழன் தமிழரையே அவமானப் படுத்தும் இந்தப் படங்களை ஏன் பிடித்தாய்?

கயவனின் மனச்சாட்சி அவனைக் குத்தியது; அழுது விட்டான்.

தமிழ் : நண்பா உள்ளதைச் சொல்லு; நாங்கள் தமிழர்; நீ தமிழன்; உன்னைக் காப்போம். சொல், அந்த மக்வாடர் தானே உன்னை இந்தச் சேட்டைக்குத் தூண்டினான்?

கயவன் : ஆம் ஐயா; இப்போதே புத்தி வந்தது; அவனும் லில்லியும் தங்களிடம் பொறாமை கொண்டு இந்தியர் அநாகரிகம் என்றொரு நூல் எழுதுகிறார்கள். அதில் தமிழிசை கழுதை — நாய் — ஓநாய் — ஆட்டுக்கடா கத்தலாம். இந்தியப் பெண்களெல்லாம் நடத்தை கெட்டவர்களாம்; குப்பைத் தொட்டிகளெல்லாம் விதவைகளின் குழந்தைத் தொட்டில்களாம் — புத்தகம் எழுதுகிறார்கள்.

தமிழ் : நீ அவர்களுடைய குப்பைத் தொட்டிப் புத்தகத்திற்காகத்தான், இந்தச் சாக்கடைப் படங்களைப் பிடிக்கிறாயோ! இதற்காக என்ன தந்தார்கள்.

கயவன் : ஆம்; சாப்பாடுதான் தந்தார்கள்; ஆடை தந்தார்கள்.

தமிழ் : தமிழா கெடாதே; நான் உனக்குச் சோறு துணி பணிவேன். என்னுடன் தமிழ்ப் தருசெய். ஆனால் குடி, விபசாரம் இல்லாமல் ஒழுங்கா யிருக்க வேண்டும்.

கயவன் : இருப்பேன்; மக்வாடரை இரண்டு மிதி மிதித்து வரவா?

போன் : கூடாது; ஒருசிறு குற்றம் நேர்ந்தால் வெள்ளைக்காரன் உன்னை வழக்கில் மாட்டி அடிப்பான். முதலில் இந்தா இந்தப் படங்களையெல்லாம் அள்ளி உன்கையால் வெந்நீர் அடுப்பில் போடு.

கயவனைப் பொன்னம்பலம் உள்ளே இழுத்துச் சென்றார். கயவன் சிறிது திகைப்பும் தேம்பலுமாகப் படங்களையெல்லாம் அள்ளி அடுப்பில் போட்டான். எல்லாம் எரிந்து சாம்பலாயின. "தீ, சிவவடிவம்; இன்றுடன் தமிழருக்கு எதிராக எந்தக் காரியமும் செய்வதில்லை" என்று சத்தியம் செய்யச் சொன்னான் பொன்னம் பலம்; கயவன் அவ்வாறே செய்தான்.

போன் : நண்பா நீ செய்யும் மற்றொரு காரியம் உண்டு; இரவு ஒன்பது மணிக்கு மக்வாடர் வில்லி குடித்து மயங்கிக் கிடப்பார் .அப்போது மெல்ல அந்த அநாகரிக நூலைக் கக்கத்தில் இடுக்கி இங்கே ஓடிவா.

கயவன் அப்படியே செய்யச் சென்றான்.

கயவன் ஓட்டல் மாடியில் ஏறி மக்வாடர் அறையில் நுழைந்தான்! அங்கே அவன் இல்லை. ஓர் அறை மூடியிருந்தது; உள்ளிருந்து சத்தம் வந்தது; லில்லி கள்ளப் புருஷனைக் கொஞ்சிக் குலாவிக் கொண்டிருந்ததைக் கயவன் அறிந்தான். பூனைபோல மேஜையைத் திறந்து 'அநாகரிக இந்தியா' கையெழுத்து பிரதியுடன் அதைச் சேர்ந்த குறிப்புகள் கடிதங்கள் அனைத்தையும் எடுத்து கக்கத்தில் இடுக்கிக்கொண்டு பூனைபோல் வெளியேறி விட்டான்.

(தொடரும்)

விதியின் செயலா?

[சரஸ்வதி தியாகராஜன்]

டெலிபோன் மணி கண கண வென்று ஒலித்தது. பிலிட்டரில் பொடியைப் போட்டுக் கொண்டிருந்தவள் அப்படியே வைத்து விட்டு ஓடிப்போய் ரிஸீவரை எடுத்தேன். அவர்தான் ஆபிஸிலிருந்து பேசினர். கலாசாலையில் என்னுடன் படித்த ஒருவர் சாயந்திரம் அவருடன் வருவதாகவும் மூவருக்கும் காபி தயாரிக்கும்படியும் சொன்னர்.

ஒருவர் என்று சொன்னரே தவிர அது யாரென்று சொல்லவில்லை. யாராக இருக்கும் என்று எவ்வளவு யோசித்தும் எனக்குத் தெரியவில்லை. சீக்கிரம் சீக்கிரமாகக் காபி போட்டேன். குழந்தையை வெளியில் எடுத்துக் கொண்டு போகும்படி வேலைக்காரியிடம் சொல்லிவிட்டு அவர்கள் வரவுக்குத் தயாராக காத்துக் கொண்டிருந்தேன்.

வாசலில் கார் வந்து நின்றது. அவர் இறங்கினர். பின்னல் கன்னங்கரேலென்று மார்பு வரையில் தொங்கும் தாடியுடன் ஒருவர் இறங்கினர். இந்த ரிஷி யார்? என் ஆச்சரியம் அடங்குவதற்குள் அவர் என்னிடம் வந்து "உன் கலாசாலை நண்பன்" என்று அறிமுகப் படுத்தினர்.

"இவ்வளவு பெரிய தாடியுடன் என்னுடன் ஒருவரும் படிக்கவில்லையே!" என்றேன்.

அவர் சிரித்தார். "எனக்கு ஒன்றும் தெரியாதம்மா! இவர் தன்னுடைய ஆஸ்ரமத்திற்கு ஏதோ நன்கொடை வேண்டுமென்று என்னிடம் கேட்க வந்தார். மேஜையின்மேல் நான் வைத்திருக்கும் உன்னுடைய புகைப் படத்தைப் பார்த்ததும் "இவளை எனக்குத் தெரியும்" என்றார். அழைத்துக்கொண்டு வந்தேன். இனி உன்பாடு அவர் பாடு!" என்றார் என் கணவர்.

அந்தத் தாடி ஆசாமி தன்னுடைய விசாலமான கண்களை என் பக்கம் திருப்பி "ரேகா! உனக்குச் சுந்தரேசனை நினைவிருக்கிறதா?" என்று கேட்டார்.

"நீ...ங்...க...ள்"

"இல்லை! நான் அவன் தம்பி!"

"என்ன! மணியா!"...

என்னல் நம்பவே முடியவில்லை. கலாசாலையில் சுந்தரேசன் பெயர் பிரசித்தியானதே மணியால்தான். மணி படிப்பில் மணிதான். பிரசிடென்சிக்கே முதலாக வருவான். கிரிகெட் விளையாட்டிலோ உலகப் பிரசித்தி பெற்றவன். கலாசாலை நாடகங்களில் பிரதமவேஷம் அவனுக்குத்தான் போகும். நல்ல கட்டழகு வாய்ந்தவன். அவனுக்கு நேர் விரோதமானவன் சுந்தரேசன். அசடு வழியும் முகம். முக்கி முனகிப் படித்தா

லும் முப்பத்தைந்து மார்க்குக்கு மேல் வாங்க மாட்டான். விளையாட்டு மைதானத்தில் ஒரு நாள் கூட அவனை நான் பார்த்ததில்லை. இதில் வேடிக்கை என்னவென்றால் சுந்தரேசன் மணியின் சொந்த அண்ணா. எங்களுடைய எவ்வளவோ பரிகாசங்களுக்குச் சுந்தரேசன் ஆளாகியிருக்கிறான். மணியோ எங்களுக்கெல்லாம் ஒரு வீரனாகத் தோன்றினான். அப்பேர்ப்பட்ட மணியின் இந்தக் கோலம் என்னைத் திகைக்கச் செய்தது.

"என்ன ரேகா! நம்ப முடியவில்லையா?" என்று மணி கேட்டான். "நிஜமாகவே எனக்குக் கஷ்டமாயிருக்கிறது. சுந்தரேசன் எங்கே இருக்கிறான்? எனக்கு எல்லாவற்றையும் விவரமாகச் சொல்லேன்" என்று ஆவலோடு கேட்டேன்.

"முதலில் காப்பியைக் கொண்டு வா" என்று அவர் கத்தினர்.

காப்பி சாப்பிட்டுக்கொண்டே மணி தன் கதையை ஆரம்பித்தான்.

"உனக்குக் காஞ்சனாவைத் தெரியுமில்லையா?"

"எந்தக் காஞ்சனா?"

"என்னுடைய மன்னி!"

நான் சிரித்தேன். "உன்னுடைய மன்னியைப் பற்றி எனக்கெப்படி தெரிந்திருக்க முடியும்? சுந்தரேசனுக்குக் கல்யாணமானதே எனக்குத் தெரியாதே!" என்றேன்.

"ஓ! உனக்கு ஒன்றுமே தெரியாது! முதலிலிருந்து சொல்ல வேண்டும்" என்றான் மணி.

அவரும் கேட்கப் பிரியமுள்ளவர்போல் தோன்றியதால் மணி விறுவிறுப்பாகச் சொல்ல ஆரம்பித்தான்.

"படிப்பு முடிந்ததும் நாம் கலாசாலையை விட்டுப் பிரிந்து விட்டோம். நானும் அண்ணாவும் திருச்சிக்குப் போனோம். அங்கு அத்தை வீட்டில் கொஞ்ச நாள் இருந்துவிட்டு பிறகு ஐதராபாத்துக்குப் போனோம். மேற்கொண்டு என்ன செய்வதென்று எங்களுக்குப் புரியவில்லை. அப்பா வேலைக்கு மனுப் போடச் சொன்னார். நாங்களும் அதுதான் சரி என்று வேலை தேட ஆரம்பித்தோம்.

இதற்குள் அம்மா அண்ணாவின் கலியாணத்திற்கு வேண்டிய முயற்சிகள் செய்தாள். அநேக வரன்கள் வந்தன. நானும் அண்ணாவும் பெண்களைப் போய்ப் பார்த்தோம். எங்களுக்குச் சில பெண்கள் பிடித்திருந்தன. ஆனால் என்ன காரணத்தினாலோ எனக்குத் தெரியாது பெண் வீட்டார்கள் கல்யாணப் பேச்சை மெள்ள நழுவ விட்டு விட்டார்கள்.

அண்ணாவுக்குக் கான்பூரில் வேலை கிடைத்தது. எனக்கு உள்ளூரிலேயே ஆயிற்று. அண்ணா ஊருக்குப் புறப்படும் தினத்தன்று ஒரு ஜாதகம் வந்தது. பொருத்தமும் இருந்தது. அம்மா பெண்ணைப் பார்த்து விட்டுப் போகும்படி அண்ணாவிடம் சொன்னாள். அதற்கு அண்ணா "எனக்குச் சலித்து விட்டதம்மா! மணி போய்ப் பார்க்கட்டும். அவனுக்குப் பிடித்திருந்தால் எனக்கும் பிடிக்கும்" என்று சொல்லிவிட்டு ஊருக்குப் போய் விட்டான்.

நானும் அம்மாவும் பெண்ணைப் போய்ப் பார்த்தோம். ஸ்வர்ணப் பதுமைபோல் இருந்தாள் பெண். அம்மாவுக்கும் ரொம்பப் பிடித்து விட்டது. எனக்கும் இவ்வளவு அழகான மன்னி கிடைப்பது பற்றி சற்று பெருமையாகத்தான் இருந்தது. பண விஷயங்களெல்லாம் பேசி முடித்து நிச்சய தாம்பூலமும் மாற்றிக் கொண்டு நாங்கள் ஊர் திரும்பினோம்.

கலியாணத்திற்கு ஒரு வாரத்திற்கு முந்தியே சுந்தரேசன் லீவு எடுத்துக் கொண்டு வந்தான். அவனும் நானும் கடைகடையாகப் புகுந்து கலியாண ஜவுளிகள் எடுத்தோம். என்னென்னவோ சாமான்கள் வாங்கினோம். ஆனால் சுந்தரேசனின் முகத்தில் மட்டும் சந்தோஷமே யில்லை. அதைப் பற்றி அப்பொழுது நான் அதிகமாக யோசிக்கவில்லை.

இரண்டு நாள் இருக்கும் பொழுது நாங்கள் மணப் பெண்ணின் ஊருக்குப் புறப்பட்டுப் போனோம். எங்களைப் பெண்ணின் வீட்டிற்கு அடுத்த வீட்டில் இறக்கினார்கள். கலியாண ஏற்பாடுகள் வெகு தடபுடலாகச் செய்யப்பட்டிருந்தன. அழகிய செல்லப் பெண்ணுக்கு அவர்கள் ஆசையோடு எல்லாம் செய்தார்கள்.

கல்யாணத்திற்கு முந்தின தினம் எனக்கு நன்ருக நினைவிருக்கிறது. வீட்டிற்குள் அதிகப் புளுக்கமாக இருந்ததால் சற்று உலாவி வரலாமென்று தோட்டத்திற்குச் சென்றேன். நல்ல நிலவு. காற்று குளு குளு வென்று வீசிக் கொண்டிருந்தது. அங்கிருந்த சிமெண்ட் மேடையின் மேல் படுத்துக் கொண்டேன்.

தூங்காமல் தூங்கிக் கொண்டிருக்கும் பொழுது என்னருகில் மல்லிகையின் மணத்தோடு சந்தனத்தின் இன்ப வாசனை கலந்து வீசிற்று. பட்டுப் புடவையின் சலசலப்புச் சத்தமும் கேட்டது. நான் திடுக்கிட்டெழுந்தேன்.

"யாரது?"

"அதற்குள் மறந்து விட்டீர்களா?"

வீணையின் நாதம் போன்ற அந்தக் குரல்! எனக்குத் தெரிந்து விட்டது!

"காஞ்சனு!"

"அவள் தான்!"

"இந்த இருட்டு வேளையில் இங்கு எதற்காக வந்தாய்?"

"உங்கள் அண்ணுவின் கருப்பு முகம் நம் இருவருக்கும் நடுவில் வந்தால்தான் இருட்டாகும்!"

"மன்னி!"

"உஷ்! வாயை அலம்புங்கள்! அண்ணுவுக்காகத் தம்பி பெண் பார்க்கும் வழக்கம் எந்த ஊரில் நடக்கிறது?

"எங்களைப் பற்றி உனக்கொன்றும் தெரியாது! எங்கள் குடும்பமே அதிசயமானது!"

"அதிசயமான குடும்பத்தில் அதிசயமான சம்பவங்களும் நடக்குமல்லவா?"

எனக்கொன்றுமே புரியவில்லை. நிலவொளியில் அவள் ரொம்ப அற்புதமாக தோன்றினாள். நானும் வாலிபன்தானே! அதிக நேரம் அவளுடன் இருந்தால் என்ன நேரிடுமோ வென்று பயந்து சடாரென்று எழுந்திருந்தேன்.

அவள் என்னெதிரில் வந்து நின்று "அப்படியானல் நீங்கள் பார்க்கவேயில்லையா?" என்று கேட்டாள்.

"எதை?"

அவள் கண்கள் கோபத்தில் ஜொலித்தன. அடுத்த நிமிஷம் அவ்விடத்தை விட்டு மறைந்து விட்டாள்.

கல்யாணம் நடந்தேறியது அன்றைய இரவின் சம்பவம் எனக்கு ஒரு மர்மமாகவே இருந்தது. அண்ணு அவளைக்கூடவே அழைத்துக் கொண்டு போகிறேன் என்ருன். ஆனல் அம்மா தடுத்து விட்டாள். அம்மாவுக்கு பெண்ணே கிடையாது. காஞ்சன வென்ருல் உயிர். அவள் தன்னுடன்தான் இருக்க வேண்டுமென்று கண்டிப்பாகச் சொல்லி விட்டாள். அண்ணு மிகுந்த வருத்தத்தோடு ஊருக்குப் போனன்.

முன்பெல்லாம் அண்ணு எனக்கு அன்பான கடிதங்கள் எழுதுவான். ஆனல் கல்யாணத்திற்குப் பிறகு எனக்குக் கடிதம் எழுதுவதையே விட்டு விட்டான். நான் கொஞ்ச நாள் எழுதிக் கொண்டிருந்தேன். பிறகு நானும் நிறுத்தி விட்டேன்.

வீட்டில் காஞ்சனவுக்கு ஒரு அரசிக்கு நடக்கும் உபசாரங்கள் நடந்து கொண்டிருந்தன. அவள் என்ன செய்தாலும் ஒருவரும் ஒன்றும் சொல்ல மாட்டார்கள். என் விஷயத்தில் காஞ்சன அளவுக்கு மிஞ்சின பரிவு காட்டினள்.

என் அறையை தினம் ஒரு தினுசாக அலங்கரித்து வைப்பாள். என் ஆடைகளை அவளே தோய்த்து உலர்த்துவாள். பசி அறிந்து எனக்கு ஆகாரம் கொடுப்பாள். கடைசியில் அவள் எனக்கு இன்றியமையாதவளாக ஆகி விட்டாள். அண்ணுவின் மனைவி! தாயைப் போன்றவள்! அந்த எண்ணம் என் இதயத்தை விட்டு அகன்றதேயில்லை. அடிக்கடி லீவு எடுத்துக் கொண்டு அண்ணு வருவான். ஆனல் அப்பொழுது கூட அவன் வேலையைப் பற்றியும் மேலதிகாரிகளைப் பற்றியும் பேசுவானே தவிர காஞ்சனவுடன் அன்பாக ஐந்து நிமிஷம் பேசியதில்லை. கணவன் மனைவியென்ற பந்தம் அவர்களைப் பிணைத்ததே ஒழிய அவர்கள் இதயங்கள் ஒன்றுபடவில்லை என்பது எனக்கு அப்போது தெரியாது.

ஒரு ஞாயிற்றுக் கிழமை. நான் படித்துக் கொண்டிருந்த ஒரு கதைப் புஸ்தகத்தைக் காணவில்லை. அலமாரியில் தேடிக் கொண்டிருந்தேன். அம்மா உள்ளே வந்தாள்.

"என்னடா தேடுகிருய்?"

"புஸ்தகம்"

"என்ன புஸ்தகம்?"

"ஷெர்லக் ஹோம்ஸ்"

"காஞ்சன அறையில் இருக்குமோ என்னமோ?"

"கொஞ்சம் எடுத்துக் கொண்டு வந்து தாம்மா!"

"போடா! என்னலே இப்போ மாடி ஏறமுடியாது. நீயேபோய் எடுத்துக்கொண்டு வா" என்று அம்மா அசதியாக நாற்காலியில் உட்கார்ந்து கொண்டாள். கதை மேல் உள்ள ஆசையினல் நான் மாடிக்கு ஓடினேன்.

மேஜையின்மேல் இல்லை. அலமாரியிலும் இல்லை. பிறகு டிரா

யரைத் திறந்தேன். திறந்த வேக த்தில் உள்ளே திணித்து வைக்கப் பட்டிருந்த பேப்பர்கள் கீழே விழுந்தன. அவசர அவசரமாக அவைகளைப் பொறுக்கி உள்ளே போட்டேன். அப்பொழுது அவற்றின் நடுவேயிருந்து ஒரு புகைப்படம் கீழே விழுந்தது. எடுத்துப் பார்த்தேன். என்னு டைய படம்!

கதைவைத் திறக்கும் ஓசை கேட்டது. திரும்பிப் பார்த்தேன். காஞ்சனு!

அவள் என்னருகில் வந்து படத் தைப் பிடுங்கிக்கொண்டாள். நான் அசைவற்று நின்றேன். விவாகத்துக்கு முந்தின தினம் எனக்கு ஞாபகத்துக்கு வந்தது.

திரை விலகிற்று!

நான் எவ்வளவு துரதிருஷ்ட சாலி! இப்பேர்ப்பட்ட அழகி யின் ஆசையை நிராகரித்து விட் டேன்! அண்ணுவின் நினைவுத் திரை அவள் இதயத்தை எனக்கு மறைத்து விட்டது!

அவ்விடத்தை விட்டு மெளன மாக நகர்ந்தேன். காஞ்சனு என் னெதிரில் வந்து நின்று என்னை உற்று நோக்கினுள். என் மெய் சிலிர்த்தது. காஞ்சனுவின் கண் களில் நீர் துளிர்த்தது. சரே லென்று திரும்பி ஜன்னலருகில் சென்று விட்டாள்.

அவள் என்னை அறிந்து கொண் டாள்! எப்படியோ கீழே வந் தேன். அம்மா இன்னும் என் னறையிலே உட்கார்ந்து கொண் டிருந்தாள். கஷ்டப்பட்டு என் உணர்ச்சிகளை மறைத்துக் கொண் டேன்.

"மணி! உங்கிட்டே ஒரு சமாச் சாரம் சொல்லப் போகிறேன்" என்று நிறுத்தினுள் அம்மா.

"சொல்லேன் அம்மா!"

"எங்கே, நீயே யோசிச்சுச் சொல் பார்க்கலாம்!"

அம்மா கொஞ்சம் விளையாட்டு மனுஷி. சிறிது நேரம் யோசிப் பதுபோல் பாசாங்கு செய்து "எனக்கு ஒன்றும் தோன்றவில் லையே அம்மா!" என்றேன்.

அம்மா சிரித்தாள். சந்தோ ஷம் முகத்தில் பொங்க அம்மா என் கைகளைப் பிடித்துக்கொண்டு "மணி! எனக்குப் பேரன் பிறக் கப் போகிருண்டா!" என்றுள்.

நான் திடுக்கிட்டேன். அன் றைய சம்பவம் நடக்காமலிருந் திருந்தால் அம்மா சொன்னவுடன் ஆனந்தத்தில் நான் துள்ளிக் குதித் திருப்பேன். ஆனல் அப்பொழுது என்னல் சந்தோஷப் படவே முடியவில்லை. அதற்குப் பதில் அழுகைதான் வந்தது.

வாழ்க்கை நீர்வீழ்ச்சியில் காலம் சிதறி ஓடிற்று. காஞ்ச னுவைப் பிரசவத்திற்கு அவள் வீட்டிற்கு அனுப்பாமல் அம்மா தன்னிடமே வைத்துக் கொண் டாள். அந்த சமயத்தில் அண்ணு வும் அங்குதான் இருந்தான்.

நாங்கள் நினைத்தபடி அவளுக் குச் சுகப் பிரஸவம் ஆகவில்லை. மனவேதனையில் அவள் உடம்பு வெந்து போயிருக்க வேண்டும். குழந்தை பிறந்த மூன்றும் நாள் அவளுக்கு ஜன்னி கண்டது. டாக்டர் பிழைக்கமாட்டாள் என்று சொல்லி விட்டார். வீட் டில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில் துக்க மனுபவித்தார்கள்

அவளுடைய கடைசி நாள்!

அது ஒரு வெள்ளிக் கிழமை! பூ மலரும் வேளை. காஞ்சனா யமவாதனைப் பட்டுக் கொண்டிருந்தாள். நாங்கள் எல்லோரும் சுற்றி நின்று கொண்டிருந்தோம். மரண வணியின் கடைசிப் படியில் தடுமாறிக் கொண்டிருந்தாள் காஞ்சனா.

கண்களை மெல்லத் திறந்தாள். அவளுடைய பெரிய விழிகள் சுழன்று சுழன்று கடைசியில் என் முகத்தில் வந்து நிலைத்து நின்றன. தெளிவான குரலில் "நீங்கள் அந்தக் கடிதத்தைப் பார்க்கவேயில்லையா ?" என்று கேட்டாள்.

நான் திகைத்து நின்றேன். அப்பொழுதுதான் ஒரு அதிசயம் நடந்தது. அண்ணா சரேலென்று அவள் கைகளைப் பிடித்துக் கொண்டான். உருக்கமான குரலில் "காஞ்சனா! நான் பாவி! என்னை மன்னித்து விடு! நான் கடிதத்தை மணியிடம் காட்டவேயில்லை" என்று கதறினான்.

காஞ்சனாவின் கண்கள் ஆச்சரியத்தால் விரிந்தன!

அவள் ஆச்சரியம் அடங்குவதற்குள்ளாக வெளியே ஓடி ஒரு கடிதத்துடன் திரும்பி வந்த அண்ணா, "கடிதம் வந்த அன்று மணி வெளியில் போயிருந்தான். உங்கள் ஊர் முத்திரை, பெண்ணின் கையெழுத்து இவைகளைப் பார்த்து நானே அதை உடைத்து விட்டேன். அது உன்னுடைய வாழ்வை இவ்வளவு தூரம் பாதிக்குமென்று நான் நினைக்கவேயில்லை" என்று மறுபடியும் அழுதான் அண்ணா.

கல்யாணத்துக்கு முன் அண்ணா சந்தோஷமில்லாமல் இருந்ததின் காரணம் அப்பொழுதுதான் எனக்குத் தெரிந்தது.

காஞ்சனா நிம்மதியாக உயிர் துறந்தாள். அவளோடு இந்த உலக பாசத்தையும் நான் துறந்து விட்டேன்" என்று மணி கதையை முடித்தான்.

அது வரையில் மூச்சு விடாமல் கேட்டுக் கொண்டிருந்த நான் "கடிதத்தில் என்ன எழுதியிருந்தது ?" என்று ஆவலை அடக்க முடியாமல் கேட்டேன்.

"என்ன எழுதியிருக்கும் ? அன்று வரையில் நான்தான் மணமகன் என்று அவள் நினைத்துக் கொண்டிருந்தாளாம். எனக்குச் சம்மதமிருக்கும் பக்ஷத்தில் அண்ணாவுக்கு வேறு இடத்தில் கல்யாணமாகும் வரையில் தான் காத்திருப்பதாயும் பிறகு என்னையே விவாகம் செய்து கொள்வதாயும் எழுதியிருந்தாள். உடனே பதில் எழுதினால் விவாகத்தைத் தன்னால் நிறுத்திவிட முடியும் என்றும் தெரிவித்திருந்தாள்"

"அவள் குழந்தை ?"

"இறந்து விட்டது!"

"சுந்தரேசன் ?"

"இரண்டாவது கல்யாணம் செய்து கொண்டிருக்கிறான் !" இதைச் சொல்லும் பொழுது அவன் முகத்தில் தோன்றிய அருவெறுப்பைக் கண்டு நான் திகைத்துப் போனேன்.

பயங்கரமான அந்த அமாவாசை இரவில் எங்களிடம் என்றென்றைக்கும் விடை பெற்றுக் கொண்டான் அந்தத் துர்பாக்யன். அதற்குப் பிறகு அவனைப்பற்றி நாங்கள் ஒன்றுமே கேள்விப்படவில்லை.

புத்தக ஆராய்ச்சி

திரிகடுகமும், சிறு பஞ்ச மூலமும். (பழைய உரையுடன்) பதிப்பாசிரியர்: ராவ் சாகிப் எஸ். வையாபுரிப் பிள்ளை; வெளியீடு: சென்னைப் பல்கலைக்கழகம்; விலை: ரூ. *3—4—0*

பதினெண் கீழ்க்கணக்கு என்னும் தொகுதியைச் சார்ந்த திரிகடுகம், சிறு பஞ்ச மூலம் என்ற இரண்டு நூல்களையும் இதில் திருந்திய பாடத்தோடும், பழைய உரையோடும் நல்ல முறையில் பதிப்பித்திருக்கிறார் திரு. பிள்ளையவர்கள். பழைய தமிழ் இலக்கியங்களில் பற்றுள்ளவர்களுக்கு புத்தகம் மிகவும் பயன்படக்கூடும்.

பதினெட்டாம் பெருக்கு. ஆசிரியர்: ந. பிச்சமூர்த்தி; வெளியீடு: ஹிமாலயப் பிரசுரம், திருச்சினாப்பள்ளி; விலை: ரூ *3—0—0.*

மறுமலர்ச்சி எழுத்தாளர் வரிசையில் முன்னணியில் நிற்கும் பிச்சமூர்த்தியின் சிறுகதைச் சிருஷ்டிகள் தனிச் சிறப்புடையவை. புதுமைக் கருத்துக்களும், கதைகளைச் சுவைபடப் பின்னிச் செல்லும் முறையும், அதற்கு மெருகிட்டு ஒளி வீசச் செய்யும் நடையும், அக்கதைகளின் சிறப்பிற்கு முக்கிய காரணங்கள். இவை சமீபத்தில் வெளி வந்திருக்கும் (ஆனால் வெகு காலத்திற்கு முன்பே வந்திருக்க வேண்டிய) இச்சிறு கதைத் தொகுதியில் காணக்கிடக்கின்றன. மிகச்சிறந்த சிறு கதைத் தொகுதிகளில் இப்புத்தகமும் ஒன்று என்று சொன்னால் அது தவறாகாது.

நாட்டியக்காரி. ஆசிரியர்: தி. நா. சுப்பிரமணியன்; வெளியீடு. சூடாமணிப் பிரசுராலயம், கோபாலபுரம், கதீட்ரல் போஸ்ட், சென்னை; விலை: ரூ *1—0—0*

அறுநூறு வருஷங்களுக்கு முன் நிகழ்ந்ததாகச் சொல்லப்படும் ஒரு சிறு சம்பவத்தை அடிப்படையாகக்கொண்டு எழுதிய ஒரு நாட்டியக்காரியின் தியாக வாழ்க்கைச் சித்திரம் இது. கலங்காத உள்ளமும், உறுதியும், தியாக மனப்பான்மையும் மட்டும் இருந்தால் "தேவ காரிய" மானாலும்கூட நிச்சயம் செய்து முடிக்கலாம் என்பதைச் சுவைபடச் சொல்கிறார் ஆசிரியர்.

— "உமாபதி"

வரப்பெற்றோம்

ஸ்ரீ பழனி க்ஷேத்திர வரலாறு; பிரசுரித்தவர்: பி. நடராஜ பண்டாரம், மலைக்கோயில் அயன்மிராஸ். பழனி; விலை: ரூ *0—6—0.*

ஆசிரியர்
சரத் சந்திரசட்டர்ஜி

சாவித்திரி

மொழிபெயர்ப்பு.
ஆர். ஷண்முகசுந்தரம்.

அதுவரையிலும் கதையைப் படித்துவிட்டு தலை நிமிர்ந்து, "நீ யாருக்கோ இதயத்தைப் பறி கொடுத்திருப்பாய் போலிருக் கிறது" என்றாள் கிரணமயி.

திவாகர் திடுக்கிட்டு "நானா?" என்றான்.

"ஆம், நீ தான். மறைவாக யாரையோ காதலிக்கிறாய்."

இந்த அபவாதத்தைக் கேட்டு திவாகர் ஆச்சரியத்தில் மூழ்கினான். சிறிது பொறுத்து வெட்கத்துடன், "ச்சீ! சத்தியமாக இல்லை!" என்றான்.

"இல்லையா? அப்பா, உண்மை யைச் சொல். உன்னை எப்போ தாவது தேள் கடித்திருக்கிறதா?"

"இல்லை, ஒருநாளும் கடித்த தில்லை."

"ஆச்சரியமாக இருக்கிறதே! யாராவது கடிபட்டு வேதனைப் படுவதையாவது பார்த்திருக்கி றாயா?"

"இல்லை, பார்த்ததில்லை."

கிரணமயி மிகுந்த ஆச்சரியத் துடன், "உனது உள்ளமும் ஒருநா ளும் சுக்கு நூறு ஆகியிருக்க முடி யாது. ஒரு குட்டித் தேளைக்கூட நீ பார்த்ததில்லை. இடி விழுந்தால் எப்படி இருக்கும் என்பதும் உனக்குத் தெரியாது. பிறகு விரகம் எவ்வளவு பயங்கரமானது என்பது தான் உனக்கு எப்படித் தெரியும்?" என்றாள்.

கிரணமயி தன்னைக் கேலி செய் கிறாள் என்று நினைத்துக்கொண்டு, "ஆனால் இவைகளை எல்லாம் தெரிந்து கொள்ள முடியாதா?" என்றான்.

"எப்படித் தெரிந்துகொள்ள முடி யும். எனக்குத் தெரியாது. ஆனால் கேள்வி ஞானத்தாலோ அல்லது பிறர் எழுதியதைத் திருடியோ எழுதமுடியும் என்பதை ஒத்துக் கொள்கிறேன்."

"ஒஹோ! அப்படியானால் நான் திருடி யிருக்கிறேன் என்று சொல் கிறாய்?"

கிரணமயி சிரித்துக்கொண்டு, "கருத்து அதுதான். திருடி யிருப் பதில் சந்தேக மில்லை. ஆனல் உன் திருட்டு உனக்கே தெரியவில்லை. கோபித்துக் கொள்ளாதே! தேள், இடி இவைகளைத்தவிர வேறு உன்

னிடம் சரக்குக் கிடையாது. இதை வைத்துக்கொண்டு பிழைக்க முடியுமா? நாவல் எழுதுவது அவ்வளவு சுலபமல்ல. ஒரு துண்டுப் பலகையை வைத்துக்கொண்டு சமுத்திரத்தைக் கூட கடவுள் அனுக்கிரகம் இருந்தால் கடந்து விடலாம். ஆனல் இதோ அப்படியும் முடியாது'' என்று கூறிச் சிரித்தாள்.

இவ்வார்த்தைகளைக் கேட்டு திவாகர் திடுக்கிட்டான். இத்தனை நாளும் இனிமையாகப் பேசிக் கொண்டிருந்தவளிடம் இப்போது என்ன பதில் அளிப்பது என்பது புரியவில்லை. சிறிது நேரம் பேசாமலிருந்து விட்டு மெதுவாக, "அப்படியானல் எழுதுகிற இத்தனை பேரும் காதல் விவகாரத்தில் ஈடு பட்டவர்கள்தானு? எல்லாரையும் தேள் கொட்டி யிருக்கிறதா? தேள்க்கடியை அறிந்துதான் எழுத வேண்டுமானல் இலக்கிய விமரிசனத்தை விட்டுவிடவேண்டியது தான்'' என்ருன்.

அவனுடைய கோபத்தைக் கண்டு கிரணமயி சிரித்துக் கொண்டு, "இதை இலக்கிய விமரிசனம் என்று சொல்லுகிருயா? இது பொறுப்பற்ற விமரிசனம்'' என்று சொல்லச் சொல்ல அவளால் சிரிப்பை அடக்க முடியவில்லை. "இப்பொழுது நான் கூறுவது உனக்குப் புரியாது. எப்போதும் புரியவும் வேண்டாம். நான் உன்னைவிட வயதில் மூத்தவள். என் பேச்சைக்கேள். உனக்கே தெரியாத விஷயத்தைப் பிறருக்குப் போதிக்க முற்படாதே.'' என்ருள்.

திவாகர் ஒன்றும் பேசவில்லை.

கிரணமயி சிறிது நேரம் பேசாமலிருந்தாள். பிறகு தொண்டையைச் சரிப்படுத்திக்கொண்டு, "இது கோபமோ, அகம்பாவமோ நிறைந்த பேச்சல்ல. வீணுக வீட்டு மூலையில் உட்கார்ந்து கொண்டு கனவு காண்பதில் பிரயோசனமில்லை. இதை நீ நன்கு தெரிந்துகொள். உன்னைப் போன்ற அறியாதவர்களிடம் பித்தளையைக் காட்டி தங்கம் என்று சொல்லலாம். ஆனுல் தங்கத்தைக் கண்டவனை—அத் தொழிலிலே வாழ்நாளைக் கழித்தவனை—எப்படி ஏமாற்ற முடியும்?'' என்ருள்.

திவாகர் கோபத்துடன், "ஆனல் கற்பனையில் பிரயோசனமில்லையா?''

"கற்பனையில் பிரயோசனமில்லை என்று நான் சொல்லவில்லை. வெறும் கற்பனை ஸ்தூலத்தைத் தான் உண்டுபண்ணும்; உயிர் கொடுக்காது. பளுவைத் தூக்கும்; ஆனல் வழி காண்பிக்காது. உனக்கு அந்த வழி புலப்படாத வரையிலும் உன்னை அந்தத் தேள் கொட்டிக்கொண்டுதான் இருக்கும். பிறருடைய தேகத்தைத் தொடக்கூட முடியாது''

அவளுடைய கடைசி வார்த்தையைக் கேட்டு திவாகர் கோபமடைந்தான். அவன் முகத்தைத் தொங்கப்போட்டு உட்கார்ந்திருப்பதைக் கண்டு கிரணமயி சிரித்துக் கொண்டு, "உன்னுடைய 'சூரியோதய' ஆசிரியருக்கு என் கண்ணீரை அடக்க முடியவில்லை என்று யோசிக்கிறேன். நகேந்திர நந்தினி கடைசியில் விஷத்தைத் தின்று இறக்கவில்லையே?'' என்ருள்.

கோபத்தால் திவாகர் ஒன்றும் பதில் அளிக்கவில்லை.

கிரணமயி கதையின் பின் பகுதியைப் பார்த்துக்கொண்டு "அடே" என்ருள். அதற்கப்புறம் உரக்கப் படித்தாள். "ஆனால், சனங்கள் யாருடைய பிரேதத்தை மயானத்திற்குத் தூக்கிக்கொண்டு போகிருர்கள்? அந்த ஆயிரக் கணக்கான சனங்கள் யாருக்குப் பின்னுல் புலம்பிக்கொண்டு போகிருர்கள்? என்ன துக்கத்தால் ஜமீன்தார் பைத்தியம்போல அழுது துடிக்கிருர்? அடடா! இது எத்தைய இதயத்தைப் பிளக்கும் சோகக் காக்ஷி! விஜயேந்திரன் தள்ளாடிக் கொண்டு அந்தப் பக்கம் போகத் தொடங்கினன்.'' கிரணமயினல் மேலே படிக்க முடியவில்லை. சிரித்துக்கொண்டு பத்திரிகையை திவாகர்மேல் வீசி எறிந்துவிட்டு, "நேரமாகிவிட்டது போகட்டுமா? போய் சமைக்க வேண்டும்'' என்று கூறி சிரித்துக் கொண்டு சென்று விட்டாள்.

திவாகர் கற்சிலைபோல உட்கார்ந்து கொண்டிருந்தான். ஒரு பலஹீனனுடைய அருமையான பொருளை யாராவது காலால் நசுக்கிச் சென்று விட்டால் அவனுடைய மன நிலை எவ்வாறிருக்குமோ, அதே நிலையில்தான் திவாகருடைய மனமும் இருந்தது.

அத்தியாயம் முப்பத்தொன்று

ஐந்தாறு நாட்களுக்குப் பிறகு ஒருநாள் மத்தியான நேரம் கிரணமயின் அறைக்குள் நுழைந்தான் திவாகர். அவள் கையால் எழுதப்பட்ட ஒரு பழைய ராமாயண ஓலைச் சுவடியைப் படித்துக் கொண்டிருப்பதைப் பார்த்தான். இதைக்கண்டு அவன் மிகுந்த ஆச்சரிய மடைந்தான். கிரணமயி சாதாரண குடும்பப் பெண்களை விட அதிகம் படித்திருக்கிருள். வங்காளியைத் தவிர ஹிந்தி, இங்லீஷ் பாஷைகளும் அவளுக்குத் தெரியும் என்பதை அறிவான். ஆனல் கையால் எழுதப்பட்ட சமஸ்கிருதக் காவியத்தை சுலபமாகப் படிக்க முடியுமென்று அவன் கனவில்கூட கருதியதில்லை. ஆச்சரியத்துடன் அங்கேயே உட்கார்ந்து கொண்டான்.

கிரணமயி கையிலிருந்த சுவடியைக் கீழே வைத்துவிட்டு, "இன்று அதிசயம்போல வந்திருக்கிருயே?'' என்ருள்.

"நீங்கள் படித்துக் கொண்டிருப்பீர்களென்று நான் நினைக்கவில்லை.''

"நான் தூங்கிக் கொண்டிருப்பேன்; போய் எழுப்பலாம் என்று வந்தாயா?''

திவாகர் மிகுந்த வெட்கமடைந்தான். "நீங்கள் இவ்விதம் என்னைக் கேலி செய்வதாயிருந்தால் நான் வீட்டை விட்டே ஓடிப் போய் விடுவேன்'' என்ருன்.

கிரணமயி சிரித்துக் கொண்டு, "ஓடிப்போய் விடுவாயா? வாயில் சொல்லுவது சுலபம்; ஆனல் காரியத்தில் செய்து காட்டுவது கடினம். எங்கே ஓடுவாய்? வழி உனக்குத் தெரியாது. சரி, உட்கார். என்ன நிஜமாகவே போகப் பார்க்கிருயே! நீ வீட்டில் உட்கார்ந்து கொண்டு 'விஷக் கத்தி'க் கப்புறம் 'மழுங்கிய கத்தி' என்று ஏதாவது எழுதிக் கொண்டிருப்பாய் என்று நினைத்தேன். இதனல்

தான் நான் உன்னைக் கூப்பிட வில்லை. இல்லா விட்டால் நான் மத்தியான நேரத்தில் ராமாயணம் படித்துக்கொண்டா இருப்பேன்?'' என்ருள்.

''ராமாயணத்தை நீ உண்மை என்று நம்புகிருயா?''

''நம்புகிறேன்.''

திவாகர் ஆச்சரியத்துடன், ''ஆனல் அநேகர் நம்புவதில்லையே? உண்மையில் இதில் எவ்வளவு அசம்பாவிதமான விஷயங்கள் அடங்கிக் கிடக்கின்றன. ஆனல் அவைகளை உண்மை என்று......''

கிரணமயி புன் முறுவலுடன், ''இது மூலநூல். அசம்பாவிதமான விஷயத்தை இதிலிருந்து எடுத்துக் காட்டு பார்க்கலாம்'' என்ருள்.

''நான் எப்படி எடுத்துக் காட்ட முடியும்? எனக்குத்தான் சமஸ்க் கிருதம் தெரியாதே!''

''தெரியாதா? அதுதான் இவ்வளவு சீக்கிரமாகக் கூறிவிட்டாய்! வித்தை இல்லாத இடத்தில் அவித்தை உடனே வந்து சூழ்ந்துகொள்கிறது. அந்த பலத்தால் தெரியாத விஷயத்தை மிகைப்படுத்திப் பிறருக்குத் கூறத் துணிகிருன். எந்த விஷயம் தெரியாதோ அந்த விஷயத்தைப் பற்றி உபன்யாசிக்கிருன். இந்தக் கெட்ட பழக்கத்தை விட்டுவிடு''

திவாகர் அசைவற்றுப் போனன். இதை அவன் வேறு எந்த நோக்கத்தோடும் கூறவில்லை. தர்மக் கிரந்தங்களை நம்ப வில்லை என்ருல் மன்னி சந்தோஷ மடைவாள் என்று நினைத்தான்.

கிரணமயி சிரித்துக்கொண்டு ''இன்று என்ன எழுதுகிருய்?'' என்ருள்.

''நான் இப்போது ஒன்றும் எழுதுவதில்லை.''

கிரணமயி மிகுந்த ஆச்சரியத்துடன், ''எழுதுவதில்லையா? என்னப்பா இது! நீ எழுதியதொன்றும் கெட்டதாயில்லையே! பின் எழுதுவதை ஏன் விட்டு விட்டாய்?'' என்ருள்.

''ஏன் என்னைக் கேலி செய்கிருய்? நான் அதற்கப்புரம் நன்கு யோசித்துப் பார்த்தேன். நீ கூறுவது உண்மைதான். என்னுடைய அந்தக் கதை திருடியதல்ல; ஆனல் விஷயம் திருடப்பட்டதுதான். இவ்வளவு எழுதுவதற்கு காதலைப் பற்றி எனக்கு என்ன தெரியும்? இதனல் இப்போது நான் ஒன்றும் எழுதுவதில்லை; சிந்தித்துக் கொண்டிருக்கிறேன்''

''சிந்தனை செய்து கொண்டிருக்கிருயா? ரொம்பசரி! இரவு பகல் எதைப்பற்றிச் சிந்தனை செய்து கொண்டிருக்கிருய்? என்னைப் பற்றியா?''

திவாகர் அவள் கூறியதைக் காதில் போட்டுக் கொள்ளாமல், ''நாவல் எழுத வேண்டுமென்ற ஆவலை என்னல் தடுக்க முடிய வில்லை. ஆகையால் உன்னிடம் கற்றுப்போகலாமென வந்திருக்கிறேன்'' என்ருன்.

''பாபு, என்னிடமிருந்து எதைக் கற்றுப்போவாய்? காதலா''?

திவாகர் வெட்கத்தை அடக்கிக் கொண்டு, ''அவசியம் ஏற்பட்டால் அதையும் கற்றுக் கொள்வேன்'' என்ருன்.

''ஆனல் அதிலும் ஒரு தடை இருக்கிறதே. என்னிடம் காதலைக் கற்ருல் ஜனங்கள் என்ன சொல்வார்கள்?''

"பாரு, நான் போகிறேன். உனக்கு எடுத்ததெல்லாம் வேடிக்கைதான்."

கிரணமயி அவன் கையைப் பிடித்துச் சிரித்துக்கொண்டு, "அப்படியானல் எனக்கு வேடிக்கை பிடிக்காது. நிஜம்தான் பிடிக்கும் என்று ஏன் சொல்லக்கூடாது?" என்ருள்.

திவாகர் தனது கையை இழுத்துக்கொண்டு வேகமாக அறையை விட்டு வெளியே போய்விட்டான்.

கிரணமயி மனதிற்குள்ளாகவே சிரித்துக்கொண்டு சுவடியை மேஜைமேல் வைத்துவிட்டு திவாகர் அறைக்குச் சென்ருள்.

திவாகர் ஜன்னலுக்கு வெளியே பார்த்துக்கொண்டு மௌனமாக உட்கார்ந்து கொண்டிருந்தான். "ஏன், கோபித்துக்கொண்டு ஓடி வந்தாய்?" என்ருள்.

திவாகர் அவள் முகத்தைப் பார்க்காமலேயே, "எனக்கு இந்த வேடிக்கை எல்லாம் பிடிப்பதில்லை, மன்னி" என்ருன்.

கிரணமயி சிறிது நேரம் பேசாமலிருந்துவிட்டு, "நீ எனது கொழுந்தன். உன்னிடம் வேடிக்கை செய்வது எனது கடமை. அப்படிச் செய்யாவிட்டால் என் மனம் எப்படிச் சந்தோஷமடையும் சொல்லு?" என்ருள்.

இதைக்கேட்டு திவாகர் கோபம் மாறியது. வெட்கப்படுவது பைத்தியக்காரத்தனம் என்பதை உணர்ந்தான். "நாமிருவரும் விளையாடிக் கொள்வதற்கு உறவு இருக்கிறது" என்ருன்.

"இது பொய் அல்ல. வங்காள சமூகத்திலே நங்கை கொழுந்தர்கள் வேடிக்கை செய்து கொள்வது வெகு சகஜம். இதன் எல்லை என்ன என்பது அநேகருக்குத் தெரிவதில்லை. இந்த விளையாட்டுச் சிரிப்பு அதிகமாகி சில சமயங்களில் விஷ வித்தைக்கூட ஊன்றி விடுவதுண்டு. இந்த விஷ விருக்ஷம் குடும்பத்தையே கடைசியில் நாசமாக்கி விடுகிறது. இதை எத்தனை பேர் சிந்தித்திருப்பார்கள்?"

திவாகர் அவள் முகத்தைப் பார்த்து, "நான் கற்றுக்கொள்ளலாமென வந்தேன். ஆனல் நீ என்னைத் துரத்திவிட்டுத்தான் மறுகாரியம் பார்த்தாய்" என்ருன்.

கிரணமயி படுக்கையின் ஒரு மூலையைப் பிடித்துக்கொண்டு, "என்ன கற்றுக்கொள்ள வந்தாய்?" என்ருள்.

"நாவல் எழுதவேண்டுமென்று அடக்க முடியாத ஆவலோடிருக்கிறேன் என்று நான் சொல்லவில்லையா? நீ எழுதுவதற்குச் சொல்லிக்கொடு. நீ சொல்லு நான் எழுதுகிறேன்."

"அப்போது அது நான் எழுதியதாகி விடுகிறது."

"அதனல் என்ன? எனக்கும் பழக்கம் ஏற்படுகிறது. விஷயம் தெரிவதால் மட்டும் போதாது. அதை வெளிப் படுத்தும் திறமையும் வேண்டும்."

"ஆம் அது உண்மைதான். நீ எதை வெளிப்படுத்துவாய்?"

"நீ எழுதிக்கொடுப்பதைத்தான்"

கிரணமயி சிரித்துக்கொண்டு, "அதற்கு வேறு யாரையாவது தேர்ந்தெடுத்துக்கொள். அந்த வேலை என்னல் முடியாது. தண்ணீரில் வசிக்கும் மீனுக்கு, பாலைவனத்தில் மனிதர்கள் தாகத்தால் எப்படி மடிகிருர்கள் என்பதை என்னல் சொல்லிக் கொடுக்க முடி

யாது. இதற்கு வேறு யாரையாவது பார்த்துக் கொள்'' என்றாள்.

திவாகர் சிறிது பொறுத்து, "மன்னி, பாலையின் சூடு எனக்குத் தெரியாததுதான். ஆனால் நான் மீன் அல்லவே. நானும் உன்னைப் போல தரையில் வாழும் பிராணி தான். ஆகையால் தாகம் என்பது என்ன என்று என்னால் அறிந்து கொள்ள முடியுமே. நீ எனக்கு ஒருதரம் சொல்லிக் கொடு; நான் தெரிந்துகொள்கிறேனே இல்லையா என்பதைப்பார்'' என்றான்.

கிரணமயி ஒன்றும் பேசாமல் புன்முறுவலுடன் மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள். திவாகர் சிறிது நேரம் பார்த்து விட்டு, "சரி, இதுவரையிலும் நீங்கள் படித்துக் கொண்டிருந்த ராமாயணத்திலிருந்தே ஒருகேள்வி கேட்கிறேன். சீதையினது அழகுத் தீயால் ராவணன் வம்சத்தோடு அழிந்ததாகக் கூறப் படுகிறதே, அந்த அழகு என்பது என்ன? ஒரு ராவணனல்ல, நாம் அநேக ராவணர்களைப் பார்க்கிறோமே! அழகின் தாகம் அது என்று கவிகள் சொல்கிறார்கள். நீயும் இம்மாதிரி ஒரு உதாரணம் கொடுத்தாய். மன்னி, நான் உன்னோடு தர்க்கிப்பதாக நினைக்க வேண்டாம். நான் உன்னிடமிருந்து எத்தனையோ விஷயங்களைக் கற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது எனக்குத் தெரியும். ஆனால் இதைத் தாகம் என்று ஏன் சொல்கிறார்கள் என்று எனக்குத் தெரிய வேண்டும். தண்ணீரைக் கண்டவுடன் மனிதனுக்குத் தாகம் எடுப்பதில்லை. ஆனால் அழகைக் கண்டவுடன் மட்டும் ஏன் அவனுக்குத் தாகம் உண்டாக வேண்டும்?'' என்றான்.

கிரணமயி சிரித்துக்கொண்டு, "பாபு, தாகம் எடுக்கிறதா?'' என்றாள்.

இந்த ஹாஸ்யத்தை உடனே புரிந்துகொள்ள முடியாமல் திவாகர் சிறிது திகைத்தான்.

இருந்தாலும் வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல் உடனே பலமாக, "ஆம், தாகமாய்த்தானிருக்கிறது.'' என்றான்.

அவனுள்ளத்தில் அடங்கிக் கிடந்த தைரியம் கொஞ்சம் கொஞ்சமாக மேலெழுவது அவனுக்கேதெரியாது. "தாகமெடுக்காவிட்டால் மகாகவி காளிதாசன் 'சாகுந்தல'த்தைஎழுதியிருக்கமாட்டான். 'ரோமியோ ஜூலியட்டும்' வெளிவந்திருக்காது. இதனால்தான் பெண்ணின் அழகு என்பது உண்மையில் என்ன வென்பதைத் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன். அந்த அழகுக்கும் அன்புக்கும் ஏன் அவ்வளவு தொடர்பு இருக்கவேண்டும்?'' என்றான்.

"உனது நிலைமை அவ்வளவு மோசமடைந்து விடவில்லை'' என்றாள் கிரணமயி.

திவாகர் சலிப்புடன் "எல்லாவற்றையும் வேடிக்கையாகவே கருதினால், இனி உன்னிடம் ஒன்றும் கேட்கமாட்டேன்'' என்றான்

திவாகர் முகத்தில் ஏற்பட்ட கவலைக் குறியைப் பார்த்து, "நான் ஒரு முட்டாள்ப் பெண்; இவ்வளவு பெரிய விஷயங்கள் எல்லாம் எனக்கு எப்படித் தெரியும்? இதற்கு நீ கோபித்துக் கொள்கிறாயே?'' என்றாள்.

கிரணமயி இதற்கு முன் வேதத்தைப் பற்றிச் சொல்லிய சம்பவம் ஞாபகத்திற்கு வந்தது. "மன்னி,

உனது பாண்டித்தியம் எனக்குத் தெரியும். நீ மனது வைத்தால் எல்லாம் எனக்குச் சொல்லிக் கொடுக்க முடியும்'' என்ருன்.

"சொல்லிக்கொடுக்க முடியுமா? சரி, பெண்ணின் அழகு என்பது வெறும் பித்தலாட்டம். கானல் நீரைப் போன்றது என்று சொன்ஞல் நீ நம்புவாயா?''

"முடியாது. அதற்குக் காரணமும் இருக்கிறது. கானல் நீர் பொய் அல்லவே; அதுவும் ஏதோ ஒன்று. கண்ணுடியில் தெரியும் உருவம் மனிதனல்ல என்பதைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. பிரதி பிம்பத்தை மனிதன் என்று பிடிக்க முயற்சிப்பது வீண். ஆனுல், அழகு என்பது வேறு ஒன்றினுடைய பிரதி பிம்பம் அல்லவே. பாம்பைக் கயிறு என்று கருதித் தொடுவது குற்றம். கானல் நீரை, நீர் என்று கருதிப் பின் தொடருவதும் குற்றம்தான். ஆனுல் அழகு அப்படி ஏமாற்றமான பொருள் அல்லவே. அழகின் பின்னுல் மனிதன் அழகுத் தாகத்தால் தானே ஓடுகிருன்?''

"பாபு, கண்ணுடியில் தெரியும் பிரதி பிம்பத்தை உதாரணம் கூறினுயே, அது முற்றிலும் சரி. அழகும் மனிதனுடைய பிரதி பிம்பம் தான்; மனிதனல்ல என்பதைத் தெரிந்து கொள்ளும் போது உண்மையான அன்பு இன்னது என்பதைத் தெரிந்து கொள்வாய். சரி, அதைவிடு. நான் ஒன்று கேட்கிறேன். அழகின் பின்னுல் மட்டும் மனிதன் ஏன் அலேய வேண்டும்?''

"இது எனக்குத் தெரியாது. குணவதியான பெண்ணே விட்டு கோவிந்தலால் ரோஹிணியோடு ஏன் ஓடிவந்தான்? இது எனக்கு மிகுந்த ஆச்சரியமாக இருக்கிறது.''

"சரி, அதன் விளேவு என்ன?''

"எதுவானுலும், அதை ஆராய வேண்டிய பொறுப்பு மனிதன் கையில் இல்லே. ரோஹிணி அழகு உள்ளவள். ஆனுல் அவளிடம் குணம் இல்லே. அழகோடு குணமும் இருந்திருந்தால் கோவிந்தலால் எங்கிலே அடைந்திருப்பான் என்பதையும் சொல்ல முடியாது.''

கிரணமயி மௌனமாக இருந்தாள். பி. ஏ. பரிட்சையில் தேராத இந்த வாலிபனிடம் அவளுக்குச் சிரத்தை ஏற்படவில்லே. பரீட்சை தேருததால் மட்டுமல்ல தேறியிருந்தாலும்கூட புத்தகத்திலுள்ளதை உருப்போட்டு பாஸ் செய்து விடலாம். அவர்களால் ஒன்றும் செய்ய முடியாது என்று நினேப்பவள். இவர்களால் தர்க்கம் கூட செய்ய முடியும் என்று அவள் நினேத்ததே இல்லே. "அழகு பிரதி பிம்பமல்ல என்று தீர்மானிப்பதும் தவறு. சரி, இவைகள் எல்லாம் நீயாக யோசித்துக் கூறுகிருயா? அல்லது வேறுயாராவது கூறியதைக் கூறுகிருயா?'' என்ருள்.

திவாகர் சிரித்துக்கொண்டு, "மன்னி, இது நானுக யோசித்துக் கூறுவதுதான். ஆண்டவன் சிறுவயதிலிருந்தே யோசிப்பதற்கு எனக்கு அநேக சந்தர்ப்பங்களேக் கொடுத்திருக்கிருன்'' என்ருன்.

கிரணமயி சிறிது நேரம் பேசாமலிருந்து விட்டு, "அப்படிச் சந்தர்ப்பம் இருந்தும் இதுவரையிலும் நீ அழகின் தத்துவத்தைப் பற்றி யோசிக்கவில்லேயா? எனக்கு ஆச்சரியமாகத் தானிருக்கிறது. இதே விஷயத்தைப் பற்றி சதீஷ் பாபுகூட என்னே ஒருமுறை கேட்டார். வேறு மனிதரும் என்னி

டம் கேட்டிருக்கிறார். இன்று நீயும் கேட்டிருக்கிறாய். எனது அழகைப் பார்த்துத்தான் உங்களுக்கு இந்தச் சந்தேகம் உண்டாகிறதோ என்று எனக்குத் தோன்றுகிறது?'' என்றாள்.

திவாகர் திக்பிரமை அடைந்துவிட்டான். ''என்னை மன்னித்துவிடு, மன்னி? எனக்கு இதெல்லாம் ஒன்றும் தெரியாது'' என்றான்.

கிரணமயி சிரித்துக்கொண்டு, ''ஒருதரம் அல்ல, நூறுதரம் வேண்டுமானாலும் மன்னித்து விடுகிறேன்.'' என்று கூறிவிட்டுச் சிறிதுநேரம் மௌனமாக இருந்தாள். பிறகு, ''நீ இன்று கேட்ட கேள்விகளுக்கெல்லாம் பதில் கூறினால் நான் சொல்வது உனக்குக் கர்வமாகப் படும். அது குற்றமாகத் தெரியும். மற்ற விஷயங்களையும் தவறாகக் கருதிக் கொள்வாய். நான் கூறுவது புரிகிறதா?'' என்றாள்.

''புரிகிறது'' என்றான் சதீஷ்.

கிரணமயி மறுபடியும் கூறத் தொடங்கினாள். ''எனது அழகு, பிறர் கண்களுக்கு மட்டுமல்ல, எனது கண்களுக்கே ஆச்சரியமாகத்தான் படுகிறது. ஆகையால் இதைப் பற்றி நான் நன்கு யோசித்தது சரியானாலும் சரி, தப்பானாலும் சரி, அதை முன் ஒரு கொழுந்தனிடம் சொல்லியிருக்கும் போது உன்னிடம் சொல்வதற்கு என்ன தடை? நான் எனது ரூபத்தைக்கண்டு என்ன நினைக்கிறேன் தெரியுமா? சந்தான உற்பத்திக்காக பெண்ணிடம் உள்ள சக்தியின் மலர்ச்சிதான் பெண்ணின் அழகு. உலக மகா காவியங்களில் வர்ணிக்கப் பட்டிருக்கிற இந்த அழகுதான் பெண்ணின் அழகு.''

திவாகர் மௌனமாக கிரணமயினது முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான். கிரணமயி அவனது வாலிப முகத்திலே இப்போதுதான் விழிப்படைந்த ஒரு புதிய உணர்ச்சியைக்கண்டு சிறிது வெட்கமடைந்தாள். பிறகு தன்னை உடனே சமாளித்துக் கொண்டு, ''இந்த இடத்தை அடைந்தால் அழகின் ஒரு கோடியைக் காண்கிறோம். பெண்ணின் பால்ய ரூபம் மனிதனை மோகத்தில் ஆழ்த்துகிறது. ஆனால் அவனை உன்மத்தனாக்கி விடுவதில்லை. நன்கு யோசித்துப்பார், பெண்களுக்கு மட்டுமல்ல, ஆண்களுக்கும் இதே நிலைமைதான். அழகு உள்ள வரையிலும்தான் குழந்தை பிறக்க முடியும். குழந்தை உற்பத்தி செய்யும் தகுதி அவளுடைய அழகு யௌவனம்தான். குழந்தை உற்பத்தி செய்யும் ஆவல்தான் அவளுடைய அன்பு.'' என்றாள்.

திவாகர், ''ஆனால்......''என்றான்

கிரணமயி அவனைத் தடுத்து, ''ஆனால், கீனல் ஒன்றுமில்லை. இந்தப் பரந்த பூலோகத்திலே நீ எங்கு சென்று பார்த்தாலும் இதைத்தான் காண்பாய். சிருஷ்டியின் மூல தத்துவத்தை உனது சிருஷ்டி கர்த்தாவிடமே விட்டு விடு. அதனுடைய காரியத்தை நன்கு கண் திறந்துபார். இதனுடைய ஒவ்வொரு அணுவும் சதா தன்னைப் புதிய ரூபத்தில் மாற்றிக் கொள்ள விரும்புவதைக் காண்பாய். எவ்விதம் அது தன்னை மலர்ச்சிக்கிறது, எதனுடன் சேர்ந்து என்ன செய்தால் தான் உயரலாம் என்பதில் எவ்வளவு ஆவலுடன் இருக்கிறது என்பது தெரியும். கண்ணுக்குத் தெரிந்தோ, தெரியாமலோ, உள்ளேயோ,வெளியேயோ இயற்கையில் சதா மாறுதல் ஏற்பட்டுக்

கொண்டே இருக்கிறது. இதனுல் தான் பெண்ணிடம் காண்பதை அடைவதற்கு ஆண் அவ்வளவு தாகத்துடன் அலைகிருன். ஞானத்தாலோ, அஞ்ஞானத்தாலோ, தான் இன்னும் அழகு பெறலாம், மேன்மை யடையலாம் என்னும் ஆசையை அடக்க முடிவதில்லை'' என்ருள்,

திவாகர் மெதுவாக, "ஆசையை அடக்கா விட்டால் நாலா பக்கத்திலிருந்து உதையும் குத்தும் வருகிறது'' என்ருன்.

"சில சமயங்கள் அப்படியும் நேரிடுகிறது. இருந்தாலும் மனிதனிடம் ஆசையை அடக்கும் சக்தி, தன்னலத்தை இழக்கும் சக்தி, சமூகத் தடைகள் முதலிய எத்தனையோ விரோதமான சக்திகளும் இருக்கின்றன. இதே மனிதன் இயற்கைக்குத் தவிர வேறு ஒன்றுக்கும் பயப்படாத காலமுமிருந்தது. அழகின் வசீகரம்தான் அவனைக் கெட்ட வழியில் நடத்திச் சென்றது. அவனுடைய அன்பை...... கேவலமாக நினைக்காதே. அதை நன்கு போற்றினுல் நாவலில் வரும் அன்புபோலவே ஆகிவிடும்.''

"அன்பிற்கும் மிருக இச்சைக்கும் எவ்வளவு தூரம்! மிருக குணம் படைத்தவர்களுக்கு தூய அன்பைப் பற்றி என்ன தெரியும்? நீங்கள் எதை எதற்கு ஒப்பிடுகிறீர்கள் மன்னி?''

"நான் ஒன்றும் ஒப்பிடவில்லை. இரண்டும் ஒன்றுதான் என்று சொல்கிறேன். முன்னுல் இழுத்துக்கொண்டு போகும் எஞ்சின் பின்னுலேயும் தள்ளும். அதை வேறு ஒன்றும் செய்ய முடியாது. அன்பு செய்பவனை, அதை எப்படி வேண்டுமானுலும் நினைத்துக் கொள், அதை அவன்தான் செய்ய முடியும். மற்றவர்களால் முடியாது. நீ கோவிந்த லாலைப்பற்றிச் சொன்னுயல்லவா? ஏமாற்றத்தை விரும்பிய அவனது மனம் ரோகிணியிடமும் கெட்ட வழியில் இழுத்துச் சென்றது. இந்தப் போலி அன்புகூட ஹரலாலால் அடைய முடியவில்லை. அவன் இந்த உலகத்தின் நன்மை தீமைகளை யோசித்து மனதை அடக்கி வைத்திருந்தான். ஆனுல் கோவிந்தலாலால் அப்படி அடக்கி வைக்க முடியவில்லை. எப்படி யிருந்தாலும் ஹரலால், கோவிந்தலாலை விட சிலாக்கிய மானவனல்ல; இருந்தாலும் அவன் வெறுத்து ஒதுக்கியவரை இவன் தலை மீது எடுத்து வைத்துக் கொண்டான். சிலரை கௌரவிப்பதும் பல காரணங்களால் பலனற்றுப் போய் விடுகிறது. துக்கம், துன்பம், வெட்கம் முதலியவைகளைவிட வேறு எந்த ஆசையும் மனிதனுக்கு மனிதன் சேர்த்தி விடாது என்று உறுதியாகச் சொல்லவும் முடியாது.''

"மன்னி, நீங்கள் கூறுவதை முழுதும் புரிந்து கொள்ள முடியாவிட்டாலும் புனிதமான அன்பு தெய்வீக மானது அல்ல என்பதை நான் ஒத்துக் கொள்ள மாட்டேன்.''

"நீ ஒத்துக்கொண்டாலும் ஒத்துக் கொள்ளா விட்டாலும் சரி; உடல் அழியக் கூடியது. இதற்காக வருத்தப்பட வேண்டியதில்லை. மனிதப் பிறவி எடுத்த பிறகு, சிருஷ்டிக்கும் சக்தி அவனுக்கு உண்டாகும் வரையிலும், அன்புவாயில் அடைத்துத்தான் இருக்கும். அந்த வாயில் இயற்கை எழுச்சியால்தான் திறக்கப்படும். இதற்கு முன் அவன் மாதா பிதா, சகோதர சகோதரிகளிடம் அன்பு

செலுத்துகிறுன். இருந்தாலும் அவன் உடல் பெரிதாகாத வரையிலும் நீ சொல்லும் தெய்வீக அன்பு அவனுக்குத் தெரிவதில்லை. பூமியின் ஆகர்ஷண சக்தி சதா இருந்து கொண்டுதானிருக்கிறது. இருந்தாலும் அது பழத்தைத்தான் பழுக்க வைக்கிறது; காயை அல்ல. அதன் சதையும் தோலும் பூமியின் ரசத்தால் தான் பழமாகிறது; தெய்விக ரசத்தால் அல்ல. அழகிய மலர், வாசனையாலும் மதுவாலும் வண்டை அழைத்து பழமாக மாறுகிறது. பிறகு அந்தப்பழம் பூமியில் வீழ்ந்து வளர்கிறது. இது இயற்கையின் நியதி. இதுதான் அதனுடைய தெய்விக அன்பு! உலகத்தில் நடக்கும் இந்த சிருஷ்டி விளையாட்டிருக்கிறதே, அது அழகின் விளையாட்டு. இதை தெய்வீகமானது என்று ஒப்புக்கொள்ளாவிட்டால் வெட்கப்படவோ துக்கப்படவோ வேண்டியதில்லை.''

பிறகு சிறிது பொறுத்து கிரணமயி, "நீ இருளில் பிசாசு பயத்தால் கண்ணை மூடிக்கொண்டால் நான் உன்னைக் கண்ணைத் திறக்கும்படி சொல்லமாட்டேன். ஆனல் 'மன எழுச்சியை அடக்கிக் கொண்டிருக்கிறேன்' என்று சொல்வேன். இதை தெய்வீக அன்பில் மூழ்கி இருப்பவர்கள் சொல்ல மாட்டார்கள். அன்பு அவ்வளவு லேசான பொருளல்ல'' என்றுள்.

"அப்படியானல் உலகத்தில் புனிதமான அன்பு, வெறுக்கத் தகுந்த அன்பு என்று ஏன் இரண்டிருக்க வேண்டும்?''

கிரணமயி சிரித்துக்கொண்டு, "நீ சதீஷைப்போலவே விவாதிக்கிருய். உலகத்திலே இவை தவிர்க்க முடியாதவை. மனிதனுடைய மனே விரக்தி வழிகாட்டியாக இல்லை. ஆகையால் இவைகளிருப்பது சகஜம், வெறுக்கத்தகுந்தது என்று சொல்லப் படுவதும் உண்மையில் அறிவுள்ள காரியம்தான். அதாவது நேசிக்கத் தகாதவர்களை நேசிப்பதால் தீமையாகக் கருதப் படுகிறது. அஜாக்ரதையினுல் மரத்திலிருந்து வீழ்ந்து கை கால் போய்விட்டால் அந்தப் பழியை பூமியின் ஆகர்ஷண சக்தியின் மேல் சுமத்தினுல் புத்திச்சாலித்தனமாகுமா? இதேபோல்தான் உலகத்தில் ஒன்றின் பழி பிறிதொன்றின்மேல் வந்து விடுகிறது.'' என்று கூறிவிட்டு சிறிது நேரம் அவன் மனதிற்குள் என்ன நினைக்கிறுன் என்பதை ஆராய்ந்தாள். பிறகு, "நான் முதலில் உன்னிடம் ஒவ்வொரு ஜீவனின் பிரத்யேக அணுவும் தனது வளர்ச்சியின் மலர்ச்சியை நோக்கி ஆவலுடனிருக்கிறது என்று சொல்லியிருக்கிறேன். அது உதிக்கும் உடலில் அதனுடைய வளர்ச்சி பூரணத்துவம் பெற்றுல் அதை வாலிபம் என்கிறேம். அப்போது அது அந்நிய உடலின் கூட்டுறவிற்காகத் துடித்துக் கொண்டிருக்கிறது. அதைத்தான் பண்டித பாஷையில் மிருக இச்சை அல்லது வெறுக்கத்தகுந்தது என்று சொல்கிருர்கள். இதனுடைய உள்ளர்த்தத்தை அறிந்து கொள்ளாமல் பண்டிதர்கள் இதைக் கீழானது என்கிருர்கள். பயங்கரமானது என்று வர்ணித்துச் சந்தோஷப் படுகிருர்கள்.

நான் சொல்லுவது என்னவென்ருல் இவ்வளவு பெரிய ஆகர்ஷண சக்தி ஒருக்காலும் தூஷிக்கத் தகுந்தது ஆகாது, இது சத்தியம்; சூர்ய ஒளியைப்போல சத்தியமானது. பிரபஞ்சத்தின் ஆகர்ஷண சக்தியைப் போலச் சாத்தியமானது. எந்த அன்பும் எப்போதும் வெறுக்கக் கூடியதாகாது'' என்ருள்.

இதைக் கேட்டு திவாகர் ஆச்சரியமடைந்தான். அவனது நெஞ்சு படபடவென அடித்துக்கொண்டது. இம்மாதிரி சக்தியுள்ள குரலையும், தீவிர திருஷ்டியையும் அவன் கண்டதில்லை. அவன் பயத்துடன் "மன்னி!" என்று அழைத்தான்.

"என் பாபு?"

"என்னிடம் பேசுவதால் களைப் படைந்து விட்டீர்களா?"

"இல்லையே, நான் நன்றாகத்தானிருக்கிறேன்."

திவாகர் புன்முறுவலுடன், "நன்றாயிருந்தால் பின் ஏன் இப்படி முரணாகச் சொல்கிறீர்கள்? நேசிக்கத்தகாதவர்களை நேசிப்பதைத்தான் கீழான அன்பு என்று சொல்கிறீர்கள். அப்புறம் இதன் உள்ளர்த்தத்தைத் தெரியாததால் தான் அதைத் தீமையாகக் கருதுகிறார்கள் என்று கூறுகிறீர்கள். இதில் எது உண்மை?" என்றான்.

"இரண்டும் தான்,"

"விதவையான ரோகிணியை கோவிந்தலால் காதலித்தது கெடுதல் தானே?"

"காதலுக்கு நியாய அனியாயம் உண்டா? பெண்ணை விட்டுப் போவது தீமையான காரியம் என்றுதான் சொல்கிறார்கள்"

"விட்டுப்போவது கெட்டது தான். தனது மனைவியை விட்டுப் பிரிவதும் அந்நிய ஸ்திரியை மனதிற்குள்ளாகவே நேசிப்பதும் பரம அநியாயம் அல்லவா?"

அவனது பேச்சைக் கேட்டு கிரணமயி புன்சிரிப்புக் கொண்டாள். "அவ்வளவு பலவானாகக் கருதாதே, கர்வத்தை அடக்கிக் கொள்வதுதான் நல்லது. மனிதன் விரும்பியதை விரும்பியபடி செய்துவிட முடியுமா? கோவிந்தலால் விரும்பி யிருந்தால் ரோகிணியை நேசித்திருக்கவும் கூடும், நேசிக்காமலிருந்திருக்கவும் கூடும் என்பது தானே உனது எண்ணம்?" என்றாள்.

"எனது எண்ணம் அதுவல்ல. விருப்பத்துடன் முயற்சியும் இருக்கவேண்டும்."

"அதோடு பொறுமை, பொறுமையின்மை இருக்கிறதல்லவா? முயற்சித்தால் மட்டும் காரியமாகி விடாது. இந்த மூலையில் நீ அசையாமல் எத்தனைகாலம் உட்கார்ந்து கொண்டிருந்தாலும் காளி தாசனைப்போல நீ ஒரு 'மேக தூதம்' எழுத முடியாது. மேகத்தைப் பார்த்தவுடன் உனக்கு மழை ஞாபகம்தான் வரும். மழை பிடித்துக் கொண்ட பயத்தால் வியாகூலமடைவாய், பிரிவாற்றாமையின் துக்கத்தை யோசிக்க மாட்டாய். ஆயிரம் முயற்சித்தாலும் முடியாது. இந்தப் பொறுமையின்மை ஒவ்வொரு நரம்புகளிலும் ஊடுருவிக் கிடக்கிறது. அதிலிருந்து மீள முடியாது."

திவாகர் ஒன்றும் பேசாமல் குனிந்தபடி உட்கார்ந்து கொண்டிருந்தான். வெகுநேர வரையிலும் யாரும் பேசவில்லை. அந்த நிசப்தமான அறையிலே கடிகாரம் தான் 'டிக் டிக்' என சப்தித்துக் கொண்டிருந்தது.

(தொடரும்)

★



அருணோதயம்

சி. எஸ். ஆர்.

அச்சவிருள் அற்றதடா
அனற்பவள ஜோதி!
ஆண் சிங்கப் பிடரி என
சிலிர்க்குதடா! சோலை

பச்சை துளிர் பொற்ற கடாய்
பள பளக்க, வாவி
பங்கயமே புன்னகைக்க,
பறவை இசை பாட,

எச்செயலும் எவ்வுணர்வும்
எழுச்சியில் முன்னேற,
இமத் துளியும் வைர மணி
எழில் தேக்கி மின்ன,

உச்சிதமாம் சுதந்திரத்தின்
குங்குமப் பொட்டென்ன,
ஒளி கூட்டி உயிர் காக்கும்
அருணோதயம் காண்!

மனக் கண்ணாடி

ஆர். கே. பார்த்தசாரதி, எம். ஏ., எல். டி.

நண்ப !

அடைமொழி ஒன்றுமில்லாமல் உன்னை இவ்விதம் 'நண்ப' என்று மட்டுமே அழைத்திருப்பதேன்? என நினைக்கின்றனையா? பொய்க் கௌரவத்தைப் போற்றாது, படாடோபமான வார்த்தைகளின் ஏமாற்று வித்தையை அறவே வெறுக்கும் நீ அவ்விதம் நினைக்க மாட்டாய். இருந்தாலும் அதன் காரணத்தை உனக்கு அறிவித்துவிடவேண்டுமென என் அந்தராத்மா என்னை உந்துகிறது. ஏன் தெரியுமா? தொடர்ந்துவரும் முந்தைய அனுபவம்தான். என் இதயத்தின் ஆழத்தில் பதிந்துள்ள எத்துணை ரகசியங்களை உன் உள்ளத்தில் பதித்திருக்கின்றேன்! 'பற்பல ரகசியங்களை என்னிடம் கூறாதே. ஏன்? ஒருவனிடமும் கூறக்கூடாது; அவையாவும் உன்னுடனேயே மறைய வேண்டியவை' என்றெல்லாம் என்னைத் தடுத்திருக்கிறாய். அவ்விதம் நீ என்னைத் தடைப்படுத்தத் தடைப்படுத்த நான் அவற்றையெல்லாம் உன்னுடன் சொல்லித்தான் தீருவது எனக் கங்கணம் கட்டிக் கொண்டு உன் மலர் விரல்களின் இடை வழியே கூறியிருக்கிறேனல்லவா? 'நீயே கேட்க விரும்பாத ரகசியங்களைக்கூட ஒளிவு மறைவின்றி உன்னிடம் கூறும் என் நட்பின் பெருமையைப் பார்' என்ற பகட்டான வரட்டுப் பெருமைக்கு ஆசைப்பட்டு நான் அவ்விதம் செய்யவில்லை. இதை நீ நன்கு அறிவாய். நான் அவ்விதமெல்லாம் நடந்துகொள்வதற்குக் காரணம், என் இயற்கை—எனது கட்டையோடு மட்டுமே விட்டகலக் கூடிய - இயற்கை. என் உள்ளத்தில் ஊறுவதை உன்னிடம் உடனுக்குடனே உரைக்காவிடில் என் சிரம் வெடித்து விடுவது போலிருக்கின்றதே! நான் என்ன செய்ய? 'நானே நீ; நீயே நான்' என இரண்டறக் கலக்க, அத்துவைத நிலையெய்தப் பழகிவரும் நான், என் இதய ஒலிகளை உன் காதில் பதிக்காமல், என்னுடைய உணர்ச்சிகளை உன்னுடையனவாகச் செய்யாமல், எங்ஙனம் இருப்பது? இவ்வளவு அப்பட்டமாக இருந்தால் இவ்வுலகில் எவ்விதம் பிழைப்பது? என்று நீ முணங்குவது என் காதில் விழுகின்றது. ஆனால் அன்புமயமான அதிசயவுலகில் வாழ வேண்டி, நான் இக்கொடுங் காரிய உலகில் இறங்கவும் தயார்.

'நண்ப' என்று அழைக்கவே கூசும் மனம் உனக்கு அடை

மொழிகள் இட அறவே மறுக்கின்றது. அடைமொழிகள் யாவும் அர்த்தமில்லாத வார்த்தைப் புரட்டாக அல்லவா தோன்றுகின்றன, வெள்ளி வளையின் மீது தங்க முலாம் போல?

உன்னை 'உயிர் நண்ப!' என்று கூப்பிடட்டுமா? ஆனால் எப்படிக் கூப்பிடுவது? என் உயிர் போன்றவன் நீ என்று கூறினால் உன் நட்பு நிலையற்றதென்று ஏற்படவில்லையா? யோசித்துப் பார். என் உயிர் நித்தியமானதா? ஏன் இப்பரந்தவுலகில் எவ்வுயிர்தான் அழியாத் தன்மை பெற்றது? அமரத்துவம் அடைந்துள்ள உன் நட்பை இவ்விதமா இழிவு படுத்தச் சொல்லுகின்றாய்? மாட்டேன்; அவ்விதம் செய்ய மாட்டேன். இல்லை, என் உயிருள்ளவரை நண்பன் என்று அதற்குப் பொருள் சொல்லக் கூறுகின்றாயா? இதுவும்தான் எவ்விதம் பொருந்தும்? கிடைத்தற்கரிய உன் அன்பு இந்த என் ஜன்மத்தோடு முடிவடையவா விரும்புகின்றாய்? அவ்விதம் என்றால் என் அந்தரங்கத்தை நீ இன்னுமா அறிந்து கொள்ளவில்லை என்று ஆச்சரியப் படுகிறேன். உன் நட்பு என் ஜன்மந்தோறும் கறவை பிரியாக் கன்றென என்னைத் தொடர வேண்டும் என்று என்றென்றும் மனங் கசிந்து மோன நிலையில் இறைவனை வேண்டிக் கொள்ளும் என் ஆசையில் மண்ணை யள்ளிப் போட்டுக் கொள்ளும் புத்திமதியா கூறுகிறாய்? யானை யல்லவா தன் தலையில் மண்ணை வாரியிரைத்துக் கொள்ளும்! ஒருக்கால் இப்பிறப்புடன் என்னை உதறித் தள்ளிவிட உத்தேசித்திருக்கிறாயோ! இது முடியாத காரியமப்பா. ஒருக்கால் கடவுள் போல் என்னைக் கடுஞ்சோதனைக்கு ஆளாக்குகின்றாயோ! அவ்விதமெனில் பக்தனைப் போல் உன்னிடம் தளராத அன்பு — இல்லை பக்தி—பூண இன்று முதற் கொண்டு முன்னைக் காட்டிலும் தீவிரமாகப் பழகிக் கொள்வேன். ஜாக்கிரதை!

சரி 'அன்பு நிறைந்த நண்ப!' என்று உன்னை, அடைமொழியிட்டு அழைப்பதுதான் சரியா சொல். அப்படியானால் அன்பு குறைந்த நண்பர்களும் உண்டோ? 'நண்பன்' என்ற வார்த்தையை அத்தகைய கயவர்களுக்காகவா வீணாக்குவது? ஒரு சமயம் நிறைந்தும் மறு சமயம் குறைந்துமுள்ளதைஅன்பு என்று சொல்வது? அன்பென்பது என்றும் வற்றாத ஜீவநதியாயிற்றே! குறைவற்ற கடலாயிற்றே! அதையா கோடை காலத்தில் வற்றும் குட்டைக்கும் மாரி காலத்தில் நிறையும் ஏரிக்கும் உவமைப் பொருள் ஆக்குவது?

'பேரன்பு பூண்ட நண்ப!' என்று கூறி வார்த்தைக் கைங்கரியம் செய்யவா சொல்லுகிறாய்? 'பேரன்பு' என்ற தொடர் ஊரன்பு, தாரன்பு, போரன்பு என்ற தொடர்களுக்கு எதுகையாக இலக்கியத்தில் ஏதேனும் இடம் பெறுவதில் எனக்குத் தடையில்லை. ஆனால் என் அந்தரங்க சாஹித்யத்தில் அதற்கு இடம் வேண்டாம். வேண்டினாலும் கிடையாது. வெறும் வார்த்தைகளை வாரியிறைத்துப் பக்குவமில்லாத அன்பை மறைக்கும் போர்வை எனக்குத் தேவையில்லை.

'அன்புமிக்க நண்ப!' என்றுதான் எவ்விதம் கூறுவது? உன் அன்பிற்கு — அன்பின் மிகுதிக்கு —

எல்லை கோலவா சொல்லுகின்றனை? 'அளவிற்கு மிஞ்சினுல் அமுதமும் விஷம்' என்று பயப்படுகின்ருய்? அவ்விதம் பயப்படாதே. ஐம்புலன்களுக்கு மட்டுமே ஆனந்தத்தை யளிக்கும் அமுதமல்ல இது. அவ்விதமெனில் ஓர் நிலையில் அது தெவிட்டிப்போய்ப் பின்னர் நஞ்சாக மாறலாம். ஆனுல் இது உள்ளத்தை உயிர்ப்பிக்கும் அதிசயமான அமுத கிரணம். என் மனத் தாமரையை மலர்விக்கும் அற்புதமான மது. ஒருக்காலும் இது விஷமாகப் பரிணமிக்காது.

மற்றுமொன்று கூறுவேன். மிகுதியே மேன்மேலும் மிகுந்தால் முந்தைய மிகுதி ஓர் மிகுதியாகுமா? குறைவாக வன்ருே போய்விடும்! மேலும் உன் அன்பை எந்தக் கஜக்கோலால், முகவையளவால் அளப்பது? அளவற்ற — அளப்பறியா — ஆழியாயிற்றே அது! மேன் மேலும் மிகுந்து செல்லும் உன் அன்பை அளவிட்டுக் கட்டுப்படுத்தவா போதிக்கிருய்? இக்கட்டுப்பாடெல்லாம் — கணக்கு களெல்லாம் கணித சாஸ்திரத்தின் மூலை முடுக்குகளில் ஒளிந்துகொள்வதாக! பகலோனின் பார்வையைத் தவிர்க்கும் அன்பு வெளியில் அவற்றிற்கு இடம் இல்லை. என் ஆனந்த நிலையில் — அன்புப் பூஜையில் இக்கரடிகள் வேண்டாம்.

நண்ப! உன்னை — அசாதாரணமான உன்னை — நான் இவ்விதம் தான் சாதாரணமாக அழைப்பேன். அசாதாரணமான விஷயத்திற்குச் சாதாரணப் பெயரிடுவதா என்று கேட்பாயோ! ஏன்? இதில் தவறு ஒன்றுமே யில்லையே! உலக வழக்கும் இருக்கின்றதே! மனதிற்கும் வார்த்தைக்கும் எட்டாத ஓர் அசாதாரணப் பொருளை — பரம்பொருளை சாதாரணப் பெயர் இட்டு அழைக்கிருேமே! அதுவுமல்லாது மனதினுல் மட்டுமே கருதக் கூடிய, உணரக்கூடிய ஓர் மோகனமான மனக் கவர்ச்சியைக் கேவலம் வாயினுல் மட்டுமே கூறக் கூடிய ஓர் சொல்லால் எவ்விதம் தெரிவிப்பது? பரம்பொருளை யோக சித்தியால் உணரும் முனிவர்கள் மோனத்திலல்லவா ஆழ்ந்து கிடக்கின்றனர்!

நண்ப! இனியும் என் உணர்ச்சி வெள்ளத்தால் உன் அன்புக் கரையை இடிக்க நான் இஷ்டப்படவில்லை. அன்புநிலையில் இனி நீ கலக்கமின்றி, இடையூறின்றி வீற்றிப்பாயாக.

இங்ஙனம்

உன் அன்புச் சங்கிலியின்

ஓர் தளை.

★

மணமகனுக்கு...

[ப. தனுஷ்கோடி]

அன்ப,

உனது அன்பார்ந்த கடிதத்துடன் திருமண அழைப்பும் கிடைத்தது. உடனே எனது உள்ளம் ஆனந்த பரவச மெய்தியது. உயிரோடு உயிராக ஒன்றிப் பழகியது நமது நட்பு. ஆனால் உன் மண மகிழ்ச்சியில் நானும் கலந்து மகிழ கொடுத்து வைக்கவில்லை. அது எவ்வளவு ஏமாற்றத்தை உனக்கு அளித்திருக்கும் என்பதை உணருவேன். அச்சமயம் நான் உடன் இல்லாததை எண்ணி வருந்தி எழுதிய உன் கடிதம் கண்ட பிறகே இந்த "வாழ்த்துரை" எழுதத் துணிகிறேன்.

"நேரில் வராவிட்டாலும் ஆங்கில முறைப்படி ஒரு வாழ்த்துத் தந்தியாவது அனுப்பியிருக்கக் கூடாதா?" என்று அங்கலாய்த்துக் கொள்ளுகிறாய். வாஸ்தவம். நாலு பேருக்கிடையில் இப்படி நாலு தந்திகள் வருவதும் இக்காலத்தில் பாஷனாகவும், கௌரவமாகவும் போய் விட்டது. ஆனால் அதில் எனக்கு நம்பிக்கையில்லை. அதாவது உன்னைப் பொறுத்த மட்டில் "நீயும், உன் மனைவியும், நீடூழி வாழ்க!" என்று வெறும் வாழ்த்தைக் கூற விரும்பவில்லை. காரணம் உனக்கு ஒன்றும் தெரியாது; விவரமாகக் கூற வேண்டுமென்பதல்ல. எல்லாம் தெரிந்தவன்; உனக்கு மணவாழ்க்கையை விளக்கினால் எல்லாருக்கும் விளக்குவாய்; பயனடைவாய் என்பதற்காக. பார்க்கப் போனால் மனப் பூர்வமான வழிகாட்டும் விவரம் இல்லாமல், தனி ஆசியில் என்ன புரிகிறது?

நாம் கலைஞர்கள்; கற்பனை வாதிகள்; எண்ணற்ற கனவுக் குவியல்களினூடே இன்பம் காண்பவர்கள். பிரம்மச்சர்யத் தனிமையிலே தோழமை பூண்டு அலாதியான சுகத்தை அனுபவித்தவர்கள். உலக இலக்கியங்களெல்லாம் நம்மிடம் கரைந்தன. இன்பம் எது? வாழ்க்கை எது? என்ற ஆராய்ச்சியில் நாமறியாததொன்றுமில்லை.

எல்லாம் விஞ்ஞானமாகவும், புது உலகங்களாகவும் தோன்றுகின்றன. எங்கும் புது அமைப்பு — புது இலக்கியம் மலர வேண்டுமென விழைகிறோம். "இல்லறமல்லது நல்லறமன்று" என்பது பழைய முடிவுதான். ஆனால் அதைச் சுற்றி வளைத்து துருவிப் பார்த்து வேறு வாக்கியத்தில் வெளிப்படுத்தினோம். "பெண்ணின் கூட்டுறவு இல்லாமல் ஆண் பிறவியின் வாழ்க்கை பூரணத்துவமடைய முடியாது!" என்பது நமது சித்தாந்தத்தின் லட்சியமாகி விட்டது. இதைக் காண பிரம்மச்சரியமாக எவ்வளவோ நாட்களைக் கழித்து விட்டோம். நல்லதுதான். வாழ்க்கை சுபிக்ஷமடைய இந்தப் பண்பட்ட விவேகம் ரொம்ப அவசியம்.

முதலில் இந்த முடிவை நீ ஏற்றுக் கொண்டிருக்கிருய். உன் வாழ்க்கையில் நிச்சயமாக வெற்றியடைவாய் என நம்புகிறேன். வருங்காலத்தை வாலிபர்களாகிய நாம் பொறுப்புடன் ஏற்றுக் கொள்வது போல், வயோதிகர்கள் நினைப்பதில்லை. யுவர்கள் கடமையை உணர்வது போல் கிழவர்கள் உணருவதில்லை. ஆதலால்தான் மகாகவி தாகூரும், "இந்தக் காலத்துப் பிள்ளைகள் கல்யாணம் என்ருலே நடுங்கிச் சாகிருர்கள்; கிழவனுக்கு இன்னொரு கல்யாணம் என்று கூறும் போது அவன் தலை ரோமம் கூட கருத்து விடுகிறது!" என்கிருர். நாம் பிரத்யக்ஷ அனுமானத்தை ஆதாரமாகக்கொண்டு விஞ்ஞானிகளாக முன்னேறுபவர்கள். ஆதலால்தான் இந்த வாழ்த்துரையில் சில விஷயங்களைக் கூற விரும்புகிறேன்.

எந்த எதையோ எழுத உத்தேசமில்லை. சதா சிந்தனை ஓட்டத்திலேயே வேண்டிய நாட்கள் கழிந்தன. வருகிற மனைவி அப்படியிருக்க வேண்டும், இப்படி இருக்க வேண்டும் என்றெல்லாம் மனக்கோட்டைகள். ஆனல் கனவு கனவாகவே இருக்க வேண்டும் என்று நான் கூறவில்லை. உலகிற்கு சகல விதத்திலும் நீ ஒரு ஆதர்ச புருஷனுக விளங்க வேண்டுமென்பதே என் அவா. ஆயினும் முதல் எச்சரிக்கை ஒன்று செய்ய விரும்புகிறேன். நமது சமூகம் சிறுகச் சிறுக வளர்ச்சி பெற்ற காதல் மணத்தை அனுஷ்டிக்கவில்லை. நீ அவளை அறிந்திருக்க மாட்டாய்; உன்னை அவள் அறிந்திருக்க மாட்டாள். ஆகவே வந்ததும் வராததுமாக, உன் லட்சியங்களை—கொள்கைகளை — சுபாவத்தை அளந்து கொட்டி விடாதே! அபலையுள்ளம் அத்தனையையும் ஏக காலத்தில் தாங்கும் சக்தியுடையதன்று. அதனுல் நீ கோரிய பலனையும் அடைய முடியாது. சிறுகச் சிறுக பழகி ஒருவரை யொருவர் நன்ருகப் புரிந்து கொள்ள ஒரு வருஷ அவகாசமேனும் அவசியம். "பெண் மாங்கல்யம் தரித்தவுடன் குழந்தையாகி விடுகிருள். பதியின் திருப்தியை நாடி சகலத்திலும் பணிவும், கருத்தும் காட்டுகிருள்." என்று ஒரு அனுபவ ஞானி கூறுகிருர். உண்மை. மனைவியிடம் அந்தப் பிரேமை இருக்கும் காலத்தில் தன் வசமாக்கிக் கொள்வது சுலபம். ஆனல் மெல்லிய ஸ்திரீயின் இதயம் அறுந்து முறுக்கேற்றிக் கொள்ளும்படி போய்விடாதவாறு ஜாக்கிரதை வேண்டும். பெண்ணின் பரிபூரண பக்தியை சரியான முறையில் பக்குவப் படுத்திக் கொள்வதே வாழ்க்கையின் வெற்றியாகும்.

"பிறர் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்று நீ விரும்புகிருயோ, அந்தப்படி முதலில் நீ நடக்கப் பழக வேண்டும்" என்று ஒரு பேரறிஞர் கூறுகிருர். வாழ்க்கை இணைப்பில் இது மிகமிக அவசியமான கருத்து. இதை ஏற்றுக் கொண்டால் அநேக அசம்பாவிதங்களைத் தடுக்கலாம். அனவசியமான மனபேதங்கள் ஏற்படாது. எனக்குத் தெரிந்த மற்ருெரு ரஸிக நண்பர் தன் புது மனைவிக்கு முதன் முறையாக எழுதினர் இப்படி:—

"...நீ உன் அம்மா வீட்டில் பிறந்தது முதல் பழகியிருக்கிருய்; இப்போது சென்றும் பத்து நாட்களாகி விட்டன. இன்னும் பத்து தினங்கள் இருந்து வரப் போவதாகவும் தெரிகிறது. இரு! இரு! உன் ஆசை அடங்கு மட்டும் இரு! எனக்குச் சந்தோஷமே! சற்றும்

உன்மீது கோபமில்லை. 'இத்தனை நாள் நான் தனியாக இருந்தவன் தானே? நானே வீடு கூட்டுவது, நானே படுக்கை போட்டுக்கொள்வது, பல் துலக்க வேண்டுமென்றாலும் ஒரு வாளி ஜலம் நானே இறைத்துக் கொள்வது......இவையெல்லாம் எனக்கு 'புதியவையா? ஹோட்டல் சாப்பாடுதான் என் உடலுக்கு ஒத்துக்கொள்ளாததா? அப்படி ஒன்றுமில்லை; கல்யாணம் ஆகியும் ஆகாதது போலவே நினைத்துக் கொள்ளுகிறேன்.

நீ இருந்தும், இல்லாதது போன்ற நிலைதான்......ஆம்; பிறந்தகப் பற்று விட்டு, பதியுடன் வாழ்க்கை நடத்த வேண்டுமென்று என்றைக்குத் தோன்றுகிறதோ — அன்று சாவகாசமாக வா! ஆனால் மறுபடி இப்படிப் பிரிந்து செல்லும் ஞாபகத்தை வைத்துக் கொள்ளாதே!''

கடிதம் கலைக்கடிதமாம். ரஸனை இருக்கலாம்; கவர்ச்சி யிருக்கலாம்; குழைவு இருக்கலாம்; ஆனால் குத்தலும் இருக்கிறது. கோபம் த்வனிக்கிறது. மூர்க்கம் பிரகாசிக்கிறது. புத்திசாலித்தனம் — கலைஞன் என்ற சொல்லுக்கேற்ற விவேகம் இல்லை. குற்றத்தை லேசாக உணர்த்துவது தவறல்ல. ஆனால் அதன் மூலம் வருந்தும்படி செய்ய வேண்டுமேயொழிய, கோபத்தைக் கிளறிவிடக்கூடாது. கடிதத்தைப் படித்துவிட்டு அந்த மனைவி, புருஷனை ஏதோ பயங்கரமான ''பிசாசு'' என்று திகிலடைந்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை. இதைவிட நயமாக தன் கஷ்டத்தை எடுத்துக் கூறி, சீக்கிரம் புறப்பட்டு வரும்படி சாதாரணமாக எழுதியிருக்கலாம். அது நல்ல பலனையும் கொடுக்கும்.

''மனைவியை அங்கே பார்க்காதே, இங்கே போகாதே என்று நிமிஷக்கட்டு செய்து கணவன் உரிமையை நிலை நாட்டுவதில் ஏற்படும் விபரீதம் வேறொன்றிலும் ஏற்படவில்லை'' என்று காந்திஜி தம் மனைவியைப்பற்றி எழுதுகிறார். வேண்டுமென்றே சம்சயப்படுவது, சந்தேகம் இருப்பது போல் பாவனை செய்வது இவையெல்லாம் விரும்பத்தக்கதல்ல. பூரண சுதந்திரம் உள்ளவளாக அவளை நம்பும்படி செய்வதே, அவளின் பரிசுத்தத்திற்கும், பயபக்திக்கும் உத்தரவாதம். ஆனால் அரைகுறைப் படிப்பு — நாகரீகம் உடைய பெண் இதைப் புருஷனின் கோழைத்தனமாக எண்ணிவிடக்கூடும். அதைக் கவனித்துக்கொள்வதும் அவசியமே. அம்மாதிரி நடந்து கொள்ளும் மனைவியை கர்வத்தினின்றும் மீட்கவேண்டும். தானே புத்திசாலி, தானே பெரியவள், தான் தவறு செய்யவே முடியாது என்ற அகந்தை எந்தஸ்திரீயிடம் இருப்பினும், அவள் பிறரை அலட்சியமாகவே கருதுவது இயற்கை. அப்படிப்பட்டவளுக்கு ஒரு பயங்கரமான உண்மையை பதியும்படி எடுத்துக் காட்டுவது நல்லது. அதாவது, ''ஆற்றுப் பாய்ச்சலில் தோட்டம் இருப்பதால்தான் மலர்ந்த புஷ்பங்கள் மனோகரமாயிருக்கின்றன. ஆற்றில் வெள்ளம் புரண்டு நிலம் மணல் மேடு தட்டிப் போனால் அழகிய சோலை ஒரு நாளில் வறண்ட சூன்யமாகிவிடக்கூடும்!'' என்பது போல, மனைவிக்கு புருஷன் இறந்த பின் ஏற்படும் சூன்ய நிலையை எடுத்துக் காட்டுவதே சரியான கர்வபங்கமாகும்.

இவை தவிர பொருளாதாரத் துறையில் ஏற்படும் சங்கடங்களைச்

சமாளிக்கவும் திறமையை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். ஆடம்பரச் செலவுகள், வீண் கௌரவச் செலவுகள் ஆகிய வற்றிற் கெல்லாம் நமது சமூகத்தில் கொஞ்சமும் குறைச்சலில்லை. "இல்லாள் அகத்திருக்க இல்லாத தொன்றில்லை" என்று திருவள்ளுவரும் கூறி விட்டார். ஆகவே புது மணப்பெண் மீது சகல பாரத்தையும் சுமத்துவதோடு அதனைச் சுமக்கும்சக்தியையும் அளித்து விடுவதே உத்தமம்.

நான் இன்னும் கிருஹஸ்தன் ஆகவில்லை என்பது உனக்குத் தெரியும். அப்படிப்பட்ட நான் பெற்றிருக்கும் அனுபவம் உனக்கு இல்லை என்று நான் நினைக்கவில்லை. பார்க்கப்போனல் வயது வித்தியாசம் எப்படியிருந்த போதிலும் ஒருவிதத்தில் என்னை விட மூத்தவனுகி விட்டாய். ஆகவே நான் உனக்கு நல்லுபதேசம் கூறுவதாக கர்வப்பட முடியாது. ஆயினும் வாழ்க்கையின் முதல் அங்கம் மெய் மறந்த காதல் நிலை என்பதை அறிவேன். இன்று தன் மனைவியின் மீது ஒரு குற்றமும் மயக்கத்தில் புலப்படாது. இன்று நடக்கும் அதே காரியங்கள் — பேச்சுகள்—சில காலத்திற்குப்பின் அருவருப்பாக—ஆத்திரம் கொள்ளும் படியாக மாறிவிடும்.

இவையெல்லாம் அன்புப் பெருக்கால்விளையும் ஐக்கியங்கள். ஆனல் நாளடைவில் இதே மகாப் பெரிய போராட்டத்திற்கு வித்தாகி விடுகின்றன.

இன்னும் ஒரே ஒரு விஷயம். எதையும் "தூரத்துப் பச்சை" யாக நாம் ஏற்று அனுபவிப்பது சிறந்த கலையல்லவா? மூடப்பட்ட கரத்தில் ஒன்றுமில்லை என்று அறிந்து கொண்டு சலிப்படைவதைவிட, மூடிய கைக்குள் ஏதோ இருக்கிறது என்ற நிலையில் இன்பம் காண்பது மேலானதல்லவா? மனைவியின் விஷயத்திலும் இதையே வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். அவளுடன் எப்படி எப்படி நடந்து கொண்டால் இன்ப நிலையிலிருந்து பிசகாமல் நடக்கக் கூடுமோ அப்படி நடப்பதுதான், உண்மையான அன்பும்—பாசமும் வளர வழி. வெளி சரஸம் ஒன்றினுல் மட்டும் நிரந்தர இன்பத்தைக் கண்டுவிட முடியாது. "பேரின்பம்" என்பது கூட இவ்வுலகிலேயே அனுபவிக்கும் கலப்பற்ற — ஸ்திரம் பெற்ற இன்பம்தான்" என்று பாரதிதாஸன் கூறுகிருர். எந்த சந்தர்ப்பத்திலும் தன் மீது கசந்து கொள்ளாதபடி மனைவியிடம் நடந்து கொள்வதே, நாகப்பாம்பின் விஷத்திலிருந்து மாணிக்கம் உண்டாக்குவது போன்ற வெற்றியாகும். அதே போல் கணவனைப் பற்றியும் சதி தன் சிரத்தையை திருப்பிக் காட்டுவாள் என்பதில் ஐயமில்லை.

நடைமுறைக்கு இவையெல்லாம் சாத்தியமா? என்று திகைப்படையலாம். எடுத்ததற்கெல்லாம் பழி சுமத்தும் சமூகத்தினருடன் ரொம்ப சிரமம்தான். ஏன்? வாய்த்த பெண்ணும் அவர்களால் வளர்க்கப்பட்டவள் தானே? சில வேலைகளில் அவசரம் அவளுக்குத் தெரியவில்லை என்ருே, அவளை அடக்க வேண்டும் என்ருே ஆத்திரம் எழும். ஆனல் அச்சமயத்தில் கடிந்து கொள்ளாமல் விட்டு விடுவதாலோ, மௌனமாக தேவையைத் தானே பூர்த்திசெய்து கொள்வதாலோ, சம்பந்தப் பட்டவளின் மனம் இளகி திருந்திவிடும். குழந்தைகளின் மனோபாவத்திற்கு

ஸ்திரீயை முன்பு ஒப்பிட்டுக் கூறினேன். உண்மையில் குழந்தை வளர்ப்பு பற்றி கூறப்படும் கருத்துக்கள் மனைவி விஷயத்திலும் பொருந்தும் என்றே நம்புகிறேன். அதைப் பின்பற்றி நடப்பது மிக மிக நல்ல பலனை அளிக்கும் என்பதிலும் சந்தேகமில்லை.

பெண் பொருமை என்பது பற்றி எத்தனையோ மணியான கருத்துக்கள் உன் சிந்தனையிலிருந்து உதிர்ந்துள்ளன. மனைவியை எப்படி நடத்தப் போகிருய்? என்னைப் பார்; என் வீட்டைப்பார்; என் அப்பன் வாழ்ந்த சொகுசைப் பார்! ....என்ரு? ஆம்......... என்ருல் அவளின் உச்சரிப்பும் இதைத் தானே பின்பற்றும்? நண்ப! இறுதியாக இவ்விஷயத்தில் மட்டும் என் யோசனையை அங்கீகரிக்க வேண்டும் என்று வேண்டிக் கொள்ளுகிறேன். ஆயிரங் காலந்தொட்டு வந்த இந்த அநாகரீக அனுசரப் பழக்கம் உன்னை எந்த விதத்திலும் தீண்டாமலிருக்குமாக.

வாழ்க்கையே கசந்து – வேற்றுமைப்பட்டு, இறுதிவரை துன்பமாக முடியக்கூடிய ஆபத்து இதிலிருந்துதான் முளைக்கிறது. உன் வர்க்கத்தினரின் உயர் பெருமைகளை, நல்ல பழக்கவழக்கங்களை அவளுக்கு உபதேசிப்பது கூடாது என்ருே, தவறு என்ருே நான் கூறவில்லை. ஆனல் அப்படி ஒரு விஷயத்தை எடுத்துக் காட்டும் போது, "உன் மாமியார் இருந்தால் இதெல்லாம் சற்றும் விரும்ப மாட்டாள்"; "உன் நாத்தனர் இவ்விஷயத்தில் உன்னைவிட சாமர்த்தியக்காரி" என்பது போல் மனைவியின் உறவை முன்னிருத்திக் கூறிப் பார்! அவளுக்கு ஏதேனும் கோபம், ஆங்காரம், பொருமை தோன்றுமா என்று! அதுமட்டுமல்ல; அப்படி இருந்தும் அவள் முகத்தில் களங்கம் தென்படுமாறல், "உனக்குத் தெரியா விட்டாலும், என்னருமை மாமியைக் கேட்டுத் தெரிந்து கொள்வது தானே?" "எப்படிப்பட்ட தங்கமான மனுஷர் என் மாமனுர்; அவருக்கா இப்படிப்பட்ட பெண்? அவர் குணம் கொஞ்சங் கூடவா உன்னுடன் ஒட்டிக் கொண்டு வரவில்லை?" "சீச்சீ! உன் பேச்சைக் கேட்டால் என் மச்சினன் கூடச் சிரிப்பான்!" இப்படி அவள் உறவை, உன் உறவாக்கிக் கொண்டு பேச முயற்சித்துப்பார்! என்னென்ன ஆச்சரியமான பலன் கிடைக்கும் தெரியுமா? மனைவியின் முகத்தில் என்றுமே காணுத தேஜஸ் தவழும். "பெண்ணின் பௌருஷத்திற்கு முக்கிய காரணம், தன்னையும், தன்னைச் சார்ந்தவர்களையும் தாழ்வாக புருஷன் வீட்டார் மதிப்பதுதான்." என்று சரத்பாபு ஒரு நூலில் கூறுகிருர். ஆகவே அதைத்தவிர்க்க வேண்டுமென்ருல் நம் உறவை நாம் ஸ்திரப்படுத்திக் கொள்வதும், நமக்கு உறவு இல்லாததைப்போல் நடிக்காமலிருப்பதும் தான் நேர்மையான பாதையாகும். புருஷனைப் பார்த்து மனைவியும் அதே போன்ற வழக்கத்தை மேற்கொண்டு விட்டால், பின்னர் வித்தியாசங்கள் – பிளவுகள் கொஞ்சமும் தலைகாட்ட இடமில்லை என்பது என் திடமான அபிப்பிராயம். என்? விவாஹம் தான் செய்து கொண்டவனுயிற்றே; இன்று முதல் பரீட்சித்துப் பார்! இன்பம் காண்பாய்.

இம்மாத இறுதிக்குள் உன்னைக் காண அவா. உன் "இல்லற ராணி" அப்போது பிறந்தகம் போன சமயமாக இருக்காதே? தெரிவிக்கவும். வந்தனம்.

மலர் மணம்

முகப்புப் படம் :

வசந்தச் சோலையிலே 'ஒற்றுமையாய் ஓரினமாய் ஒருயிராய்'த் திரியும் ஒரு யானைக் கூட்டத்தின் அழகான காட்சி, இந்த இதழ் 'வசந்த'த்தின் மேலட்டையை அலங்கரிக்கிறது.

ஒரு பத்திரிகை ஆசிரியருக்குள்ள பொறுப்பு, வேலைத்தொல்லைகள் இவை பற்றி தமது 'பாடாத பாட்'டிலே நகைச்சுவை ததும்பச் சொல்கிறுர், அந்த 'வர்க்கத்'திலேயே நல்ல அனுபவமும் திறமையுமுள்ள நமது ரா. நா. அவர்கள்.

மு. ரு. மு. அப்துறஹீம், தமிழார்வம் மிக்க முஸ்லிம் எழுத்தாளர். அவர் இந்த இதழில் எழுதியிருக்கும் 'செஞ்சீனு' ஒரு உணர்ச்சிச் சித்திரமாகத் திகழ்கிறது.

'அனுவஸ்யமான பிரயாணத்தைக் குறையுங்கள்' என்று ரயில்வேக்காரர்கள் செய்யும் பிரசாரம் எதற்கென்று இது வரையிலும் தெரிந்து கொள்ளாதவர்கள் இந்த இதழ் 'யுத்தகால இலக்கியத்'தைப் படிப்பதன் மூலம் அதைத் துலாம்பரமாகத் தெரிந்துகொள்ளலாம். தற்போதைய ரயில் கஷ்ட நஷ்டங்களை வெகு 'சுக' மாகச் சொல்லியிருக்கிறுர் நமது யுத்தகால நகைச்சுவைமணி, 'சுகி'.

புரட்சி செய்த இரண்டாவது புத்தகமாகிய 'டாம் மாமாவின் குடி'லைப் பற்றிய ஒருசுவையான கட்டுரையை இந்த இதழ் இலக்கிய ஆராய்ச்சிப் பகுதிக்கு உதவியிருக்கிறுர் 'வில்லன்.'

'மணமகனுக்கு' என்ற தலைப்பில் இளம் எழுத்தாளர் ப. தனுஷ்கோடி எழுதியிருக்கும் கட்டுரை, மணமகன்கள் மட்டுமல்லாது, 'மாஜி' மணமகன்கள் கூட படித்துப் பயன் பெறக்கூடிய ஒரு நல்ல கட்டுரை.

சிந்தனைச் சிறகு கொண்டு கற்பனுலோகத்தில் உல்லாசமாகப் பறந்து திரியும் கவி சி. எஸ். ஆர். இசைத்திருக்கும் 'அருஞேதய'த்தைச் சுவையுங்கள்!

ஒரு சில இளம் உள்ளங்களின் எதிரொலியையும், இந்த இதழில் வெளிவந்திருக்கும் இன்னும் பல சுவையான விஷயங்களையும் படித்துப் பாருங்கள்.

— ஆசிரியர்.

197234

வயதான பிறகு வேலையிலிருந்து விலக்கப்பட்டிருந்தும் இன்னும் சிறிதுகாலம் வேலை செய்து சம்பாதிக்க விரும்பும் அனேகர், அகத்திலும் முகத்திலும் அச்சங்கொண்டு அடியிற் கண்டபடியே சொல்ல நேரிடுகிறது:—

"ஐயா, நான் பார்வைக்கு எவ்வளவு வயதானவனுய்த் தோற்றுகிறேனே அவ்வளவு வயதானவனல்லன்"

ஆனல் அவர் தாம் எவ்வளவு வயதானவராயிருக்கிருரோ அவ்வளவு வயதானவராகவும், இன்னும் அதிக வயதானவராகவும் இருப்பதுபோல் கருதுகிருர். அவர் அப்படி நினைப்பதற்குக் காரணம் அவருக்கு உறுதியான சாய்மானம் இல்லை—சேர்த்துவைத்த பணமுமில்லை எந்த வேலையையேனும் ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. ஒருவர் எதைக் கொடுப்பதாகச் சொன்னுலும் அவர் "வேண்டாம்" என்று தைரியமாய்ச் சொல்ல முடியாது. அவர் ஏக்கத்தின் ஆழத்தையே அறிந்தவர். ஆனல் நீர் இப்படியிருக்கவேண்டியதில்லை. நீர் இப்போதே திட்டம் வகுப்பீராயின், கௌரவமாய் வேலையிலிருந்து ஓய்வு பெற்று, சுதந்திரமே மன அமைதியோடும் முதுமைப் பருவத்தைக் கழிப்பதற்குப் போதுமான பணம் பெறலாம்.

புத்திசாலிகள் வருங்காலத்தை நோக்கி, எஞ்சுகின்ற வருவாயை இப்போது நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகளில் சேர்த்து வைக்கிருர்கள். அவர்கள் வருங்காலத்தைத் தைரியமாய் எதிர்நோக்கி நிற்கிருர்கள். நீரும் அப்படியே செய்யலாம்.

நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகள்

சிறு சேமிப்புக்காரர்கள் 5 ரூபாய்க்கு ஒரு ஸெர்டிபிகேட்டையாவது, ஒன்று 4 அணு, 8 அணு, 1 ரூபாய் மதிப்புள்ள ஸேவிங்ஸ் ஸ்டாம்புகளையாவது வாங்கலாம். ஸெர்டிபிகேட்டுகளும் ஸ்டாம்புகளும் கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்ட அதிகாரம் பெற்ற யாதொரு ஏஜெண்டினிடமாகிலும், ஸேவிங்ஸ் பீரோ, தபால் ஆபீஸுகள் ஆகிய இந்த இடங்களிலாகிலும் கிடைக்கும்.

★ பிரதி 10 ரூபாயும் 12 வருஷங்களுக்குப் பிறகு 15 ரூபாய் ஆகிறது.

★ தனிவட்டி $4\frac{1}{2}$ சதவீதம். இதற்கு இன்கம் டாக்ஸ் கிடையாது

★ மூன்று வருஷங்களுக்குப் பிறகு (5 ரூபாய் ஸெர்டிபிகேட் விஷயத்தில் 18 மாதங்களுக்குப் பிறகு) அதுவரையில் சேர்ந்து வந்த வட்டியுடன் பணமாக மாற்றிக்கொள்ளலாம்.

AAA 1[illegible]

Our Heroes of the Fourteenth Army

ON LEAVE

will return the happier to finish the Jap

IF THEY KNOW THAT

SUBSCRIPTIONS TO

THE GOVERNOR'S WAR FUND

are being earmarked

"A MENITIES For TROOPS"

They know THEIR jop. Let us realize OURS.

தி சென்டரல் பேங் ஆப் இந்தியா, லிமிடெட்.

(இந்தியாவிலேயே மிகப் பெரிய இந்தியன் ஜாயின்ட் ஸ்டாக் பேங்)

(ஸ்தாபிதம்: டிசம்பர் 1911)

அதிகாரம் பெற்ற மூலதனம்	... ...	ரூ.	5,25,00,000
வாக்களிக்கப் பட்ட மூலதனம்	... ...	ரூ.	5,04,39,600
செலுத்தப் பட்ட மூலதனம்	... ...	ரூ.	2,51,02,200
ரிசர்வும் மற்ற நிதிகளும்	... ...	ரூ.	2,54,72,000
டிபாசிட்டுகள் 31–12–1944ல் இருந்தபடி	...	ரூ.	94,48,67,000

தலைமை ஆபீசு:

மகாத்மா காந்தி ரோடு, போர்ட், பம்பாய்.

இந்தியா முழுவதிலும் 180க்கு மேற்பட்ட கிளை ஸ்தாபனங்களும், வளங்கும் ஸ்தாபனங்களும் பெற்றது.

மானேஜிங் டைரக்டர்:- Mr. H. C. கேப்டன், J. P.

டைரக்டர்கள்:-

Sir. H. P. மோடி K. B, E. (தலைவர்)
ஹரிதாஸ் மாதவதாஸ்
ஆர்டிஷ B. துபாஷ்
டின்ஷா D. ரோமர்
நூர்முகமத் M. சினோய்
பாபுஜி தாதாபாய் லாம்
தரம்ஷே முல்ராஜ் காட்டாவ்
ஹார்மஜி பிரேம்ஜி கனிஷாரியட்
விதல் தாஸ் கான்ஜி

லண்டன் ஏஜண்டுகள் :- மெஸர்ஸ், பார்க்லேஸ்பேங் லிமி மிட்லண்ட்பேங் லிமி.,

நியூயார்க் ஏஜண்டுகள்:- தி காரன்டி டிரஸ்ட் கம்பனி ஆப் நியூயார்க்

எல்லாவிதமான பாங்கி அலுவல்களும் கவனிக்கப்படும். விண்ணப்பம் செய்து விவரங்களை ஊர்ஜிதம் செய்து கொள்ளலாம்.

தென் இந்தியாவின் கிளை ஸ்தாபனங்கள்:—

அடோனி, ஆலப்பிலை, ஈரோடு, பங்களூர், பெஜவாடா, கள்ளிக்கோட்டை, கொச்சி, கோயமுத்தூர், கடப்பை, தோணி, எர்ணுகுளம், குண்டக்கல், கோவில்பட்டி, கர்நூல், மதராஸ், மதுரை, நந்தியால், பொள்ளாச்சி, சேலம், திருப்பூர், திருச்சூர், தூத்துக்குடி, திருநெல்வேலி, உடுமலைப்பேட்டை, விருதுநகர்.

A. N. Marudachalam Chettiar

AND

A. Krishnaswamy Chettiar

AGENTS

Messrs. Burmah Shell Oil Storage & Distributing Co., of India Ltd.

COIMBATORE

B O C

BOC

Grades

DEPENDABLE

FIRM

FOR

Shell

Grades

THE PRODUCTS OF BURMAH SHELL

MOTOR SPIRITS : MOTOR OILS

GREASES : INDUSTRIAL

LUBRICANTS OF EVERY

DESCRIPTION

★

Fuel Oils : Candles : Shelltox

Etc., Etc., Etc.

Printed at the Vasanta Mills Press, and Published by K. P. Sundaram at 4/12 A. Trichy Road, Coimbatore. Editor: R. Thirugnanasambandam.

ஜுபிடர் பிக்சர்ஸ்

Lessees of:

சென்ட்ரல் ஸ்டுடியோஸ் லிமிடெட்

கோயமுத்தூர்

நவீன யந்திர சாதனங்களைக் கொண்டு தென் இந்தியாவிலேயே மிகப் பிரக்யாதி வாய்ந்த அநேகம் தமிழ்ப் படங்களைத் தயாரித்த

இணையற்ற ஸ்டுடியோ!

★

இப்பொழுது தயாராகிவரும் படங்கள்:

வால்மீகி	— சென்ட்ரல் ஸ்டுடியோஸ்
என் மகன்	— ,, ,,
ஸ்ரீ முருகன்	— ஜுபிடர் பிக்சர்ஸ்
மஞ்சு கோஷா (ரத்னகுமார்)	— முருகன் டாக்கி பிலிம் கம்பெனி
காதம்பரி (குண்டலகேசி)	— K. S. S. பிக்சர்ஸ்

★

பொன் கலைக்குப் புதுக்கோயில்

"ஸ்வர்ண மாளிகை"

வனப்புமிக்க வைர நகைகளும், அழகுக்கு
அழகு செய்யும் ஆபரணங்களும் நிறைந்தது!

★

தேவையானதைத் தேர்ந்தெடுக்கலாம்

P. A. ராஜா செட்டியார் & பிரதர்

போன் 218A —: தபால்பெட்டி 139 :— தந்தி "ராஜா"

கடைத்தெரு : : கோயமுத்தூர்